வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 புரட்டாதி திங்கள் 21-ம் நாள் (7—10—1962) ஞாயிற்றுக்கிழமை ஐ. அவ் 7 | இதழ் 19




# சிறிமா அரசாங்கம் கவிழுமா?



வெள்ளவத்தை சைவமங்கையர்கழக மண்டபத்தில் நடைபெற்ற பெரியார்கள் விழாவில் தலைமை தாங்கிய திரு. ப. குமாரசாமி தலைமை உரை நிகழ்த்துவதையும், மலையகத்தைச் சேர்ந்த திரு. வேலழகன் உரை நிகழ்த்துவதையும், மேடையில் அமர்ந்திருந்த தமிழரசுத்தந்தை திரு. செல்வநாயகம், ஜனாப் மசூர் மவுலானா, திரு. செ. இராசதுரை அவர்களையும் மேற்படத்திலும், கூட்டத்திற்குத் திரண்டு வந்திருந்த தாய்க்குலத்தில் ஒரு பகுதியினரைக் கீழ்ப்படத்திலும் காணலாம்.

## புதிய மந்திரி சபை அமைப்பில் நெருக்கடி

### பீலிக்ஸ்-சீ. பி. டி மோதலின் முடிவென்ன?

மந்திரிசபையை மாற்றியமைத்தாலும் சங்கடம், அமைக்காவிட்டாலும் சங்கடம் என்ற நிலைமை இன்று பிரதமருக்கு ஏற்பட்டுள்ளது. மந்திரிசபை மாற்றியமைத்தாலும் அரசாங்கம் வீழ்ச்சியடையலாம், அமைக்காவிட்டாலும் வீழ்ச்சியடையலாம் என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

எனவே ஒரு பொதுத் தேர்தல் வெகுதூரத்தில் இல்லையென்று கூறப்பகிடுறது.

மந்திரிசபையை மாற்றியமைக்க முடியாத ஒரு சங்கடமான நிலைமையில் பிரதம மந்திரி சிக்கித் தவிக்கிறார் என்று தெரிகிறது. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

மந்திரி சபையில் இடம் பிடித்துக்கொள்ளப் பலர் முயற்சி செய்கின்றனர். திரு சி. பி. டி சில்வாவின் கோஷ்டியும் திரு. பீலிக்ஸின் கோஷ்டியும் மந்திரி சபையில் தத்தம் கோஷ்டிக்கு அதிக ஸ்தானங்களைப்பெற முயற்சி செய்யுமாம். இதன் விளைவாக தவிர்க்க முடியாத ஒரு பெரிய நெருக்கடி உருவாகலாம். இந்நெருக்கடி அரசாங்கத்துக்கு உலை வைத்து விடலாம்.

#### கோஷ்டிச் சண்டை

திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மந்திரி சபையில் சேர்க்கப்பட்டால் இரு கோஷ்டிகளும் சிண்டுபிடித்துக்கொண்டு, வெட்டுக்குத்தில் இறங்கி பெரிய நெருக்கடியையே உருவாக்கி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன் விளைவு அரசாங்கம் கவிழ்ந்துபோவதுதான்.

இக்கோஷ்டிச் சண்டைக்குப் பயந்து திரு. பீலிக்ஸை மந்திரி சபையில் சேர்க்காமல் விட்டாலோ, திரு. பீலிக்ஸ் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் அரசாங்கப் பாராளுமன்ற குழுவினுள் ஒரு புரட்சியையே நடத்துவார்களென்பது அநேகமாக நிச்சயமாம். அதன் விளைவும் அரசாங்கத்தின் வீழ்ச்சி தான்.

இதற்கிடையே சதி வழக்கின் போக்கு அரசாங்கத்துக்குப் புதிய தலையிடியைக்

(8-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

**ரிச்லெட்ஸ்**

**ப்ளட் பியூரிபயர்**

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




- மூலம்
- வாதம்
- படை (ECZEMA)
- மாத விடாய்



கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

**வெஸ்டன் ஏஜன்சீஸ்,**

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

( போன் : 2885 )

## காருகுறிச்சி ஒரு தி. மு. க. வாம்! பிரதமரின் கூற்று

### விஸா வழங்குவதில் மாமி-மருமகன் மோதல்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற இருந்த நவராத்திரி வைபவமொன்றிற்கு நாதசுர மன்னர் காருகுறிச்சி அருணசலத்தை அழைக்க விழா நடத்துபவர்கள் எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். ஆனால் சில கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சியால் அவருக்கு "விசா" மறுக்கப்பட்டது. எனவே விழாவை நடத்துபவர்கள் அரசாங்கத்தின் "வால்"கள் சிலரைப்பிடித்து பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் சென்றனர்.

உண்மையை அறிந்த பீலிக்ஸ் "விசா" கொடுக்கும்படி உத்தரவு பிறப்பித்தார் என்று அறியப்படுகிறது. இதை அறிந்த கம்யூனிஸ்டுகள் உடனடியாக திருமதி பண்டாரநாயக்காவிற்கு ஒரு பெட்டிசம் அனுப்பினார்கள்.

இந்தியக் கலைஞர்கள் இலங்கை வரக்கூடாது, இலங்கையில் கலை வளரக் கூடாது என்ற எண்ணமுடையவர்கள் இந்தக் கம்யூனிஸ்டுகள்.

உண்மையைக் கூறினல் தங்கள் எண்ணத்தை வேறு எவருமே ஏற்க மாட்டார்கள் என்று உணர்ந்தவர்களாய் தங்கள் கழுத்தறுப்புத் தொழிலில் இறங்கினர்கள்.

சிறிமாவோவுக்குப் போன பெட்டிசத்தில் திரு. காருகுறிச்சி ஒரு தி. மு. க. ஆதரவாளர் என்றும், இலங்கையில் தி. மு. க. வை நிலைநிறுத்த ஏற்பாடுகள் செய்யவே வருகிறார் என்றும் எழு

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

# மலைப்பகுதி மக்கள் தமிழரசை நம்புவதைத் தவிர வேறு வழி இல்லை

## அரசியல் சூதாட்டம் வேண்டியதில்லை இழந்த உரிமைகளே வேண்டும்

[மலைநாட்டில் தமிழரசுக் கட்சி தனது கிளைகளை நிறுவுவதென மன்னார் மாநாட்டில் எடுத்த தீர்மானத்தை யொட்டி, எமக்கு மலைநாட்டில் வாழும் தமிழ் மக்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றில் ஒன்றை நாம் இங்கு வெளியிடுகிறோம்.]

கடந்த 21-4-62ந் திகதி அட்டனில் நடைபெற்ற இலங்கைத் திராவிடர் முன்னேற்றக் கழக சீர்திருத்த மாநாட்டில், இலங்கை தமிழரசு கட்சித் தலைவர்கள் பங்கு பற்றி, அம் மாநாட்டைச் சிறப்பித்து, அட்டன் மாவட்டத் தமிழர்களை மகிழ்வித்ததாக அமைந்திருந்தது மட்டுமல்லாது; இலங்கைவாழ் தமிழ் பேசும் பெருங்குடி மக்களையே கவர்ந்ததாக இருந்ததை எவரும் மறுக்க முடியாது. இந்த நிலையில் மலை வாழ் தமிழர்கள் தமிழரசுக் கட்சியினரை வாயார மனமாரப் புகழ்ந்தனர், பாராட்டினர், வரவேற்றனர்.

மலைநாட்டில் இயங்கி வரும் தொழிற் சங்கங்களில் இ. தொ. காங்கிரஸ் பிரமுகர்களும் அவர்கள் தம் தலைவர் திரு. தொண்டமான் அவர்களும் ஏனோ தமிழரசு கட்சியினர் அட்டனுக்கு வந்ததை எதிர்த்தார்கள். பத்திரிகைகளுக்கு அவர்கள் விடும் அறிக்கைகளினின்றும், மேடைப் பேச்சுக்களினின்றும் இக் கூற்று மெய்யெனப்படுகிறது.

"மலைநாட்டுத் தமிழர்களை சீர் குலைக்கிறார்கள் தமிழரசுக்கட்சியினர்" என்ற கருத்துப்பட அறிக்கைகளும், பேச்சுக்களும் வெளியிடப்படுகின்றன.

"சீர்குலைப்பது" என்றால் ஒற்றுமையைக் குலைப்பது; அல்லது பிரித்து விடுவது. இவைகளில் எந்த ஒன்றை தமிழரசினர் செய்தனர் அல்லது செய்ய இருக்கின்றனர்?

பதவிப் போட்டியால், ஒன்றாய் இருந்த காங்கிரஸ் இரண்டாக்கப்பட்டது எதைக் குறிக்கிறது?

இன்றைய மலைநாட்டுத் தமிழ்க் குடும்பம் ஒன்றை எடுத்துக்கொண்டால் தாயும் தந்தையும் ஒரு கட்சி மகனும், மருமகளும் வேறொரு கட்சி; மகளும் மருமகளும் மற்றுமொரு கட்சி; பேரனும் பேத்தியும் பிறிதொரு கட்சியாகப் பிரிந்துள்ள அவலநிலையைக் காண்கிறோம். தமிழரசு கழகத்தினர் மலைநாட்டிற்கு வரும் முன்பே இந்த வெட்கக் கேடான "விசித்திரமான ஒற்றுமையை" வளர்த்துக் கொண்டிருக்கும் இரு காங்கிரஸ் அன்பர்கள் தங்களையும் மறந்து உள்ள நிலைமையையும் மறந்து அறிக்கைகள் விடுவதைக் காண வருந்துவதோடல்லாமல் வெட்கப்படவும் வேண்டியுள்ளது.

தமிழரசுக் கட்சியினர் மலைநாட்டில் தங்களது செல்வாக்கை—நாளடைவில் புகுத்துவார்களேயானால் இன்றுள்ள பல தொழிற் சங்கங்களின் காரியாலயம் மூடப்படும் என்ற எண்ணம் பலருக்கு ஏற்படுவதின் ஐயப்பாட்டின் முன் பிரதிபலிப்பே, காங்கிரஸ்காரர்களின் புலம்பலுக்கு முடிவான உண்மையாகும் என்பதை அரசியல்வாதி எவரும் ஏற்றுக் கொள்வர்.

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு ஒரு கட்சி, மட்டக்களப்பிற்கு ஒரு கட்சி, மலைநாட்டுத் தமிழர்களுக்கு ஒரு கட்சி என பல்வேறு கட்சிகளாக பிரித்து வைத்து, மலைநாட்டிற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி மட்டுமே தலைமைப் பதவியை சாசுவதப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறதா? இலங்கைத்தமிழ் பேசும் மக்களுக்காகத் தமிழரசுக் கட்சியினர் செய்த தியாகம், பட்ட துன்பம், இழந்த வாழ்வு கொஞ்ச நஞ்சமல்ல என்பதை எந்தத் தமிழனும் மறக்க முடியாதிருக்கும் இவ்வேளையில், பல ஓட்டைகளை தங்களிடத்தே வைத்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்காரர்கள் தமிழரசினர் அட்டன் மாநாட்டிற்கு வந்து, தமிழ் பேசும் மக்களுக்காகவும், அவர்களிடத்திலே காணும் அறியாமைகளைக் களைய வேண்டும் எனவும் பல கருத்துப்பட சொற்பொழிவாற்றி சீர்திருத்த மாநாட்டைச் சிறப்பித்த அந்த ஒரு நல்ல செயலை மையமாக வைத்து தப்புக்கணக்குப் போட்டு தங்களது பொறாமைப் புழுக்கத்தை வெளியிடுவது அரசியல் அறமாகாது.

மலைநாட்டுத் தமிழர்களைத் தங்களது சுக போகங்களுக்கு ஆளாக்கி, இதுவரை அரசியலில் உயர் வாழ்வு வாழ்ந்த எந்த ஒரு சுயநலம் விரும்பும் சங்கத்துக்கும் இடமில்லை என்பதை அவதானிக்க—நாம் பெருமைப்படுகிறோம்.

### தமிழரசை வரவேற்க மலைநாடு தயார்

உரிய காலத்தில் மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கத் தவறிய தொழிற் சங்கங்களுக்கும், அதன் தலைவர்களுக்கும் இனிமேல் மலைப் பகுதி மக்கள் மதிப்பளிக்கப் போவதில்லை. "மலைப் பகுதி மக்கள் தமிழரசை நம்புவதைத் தவிர வேறு வழி இல்லை" என்பதை இங்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றுள்ள தொழிற் சங்கங்களைவிட மலை நாட்டுத் தமிழ் மக்கள் உள்ளத்திலே நிலையான ஒரு இடத்தை—நல்லெண்ணத்தை —நம்பிக்கையை தமிழரசுக் கட்சியினர் பெற்று வருவதையும் அவர்களை வழி நடத்த தமிழரசுக் கட்சியே சிறந்த பாதை அமைக்கும் என்பதையும், கண்கூடாகக் கண்ட பின்னரே, மலைநாட்டை வேட்டைக் காடாக்கி இது வரை வேடிக்கைப் பார்த்தவர்கள் இன்று அஞ்சி நடுங்குகிறார்கள்.

இன்றைய ஜனநாயக உலகிலே, மலைநாட்டுத் தமிழர்கள் இப்படித்தான் இருக்க வேண்டும், இன்ன ஒரு கட்சியில் தான் அங்கம் வகிக்க வேண்டும் என்று கட்டுப்படுத்தவோ, மக்களைக் கடமைப்படுத்தவோ தொழிற் சங்கங்களுக்கு உரிமையில்லை. மலைநாட்டுத் தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றுத்தர ஆற்றலற்றவர்களாகிய இவர்கள், மலைநாட்டுத் தமிழர்களைத் தங்களது தலைமைப் பதவியைப் பாதுகாக்கக் கருவியாகப் பாவிக்க வேண்டாமெனக் கோருகிறோம்.

இன்று இலங்கை வாழ் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்கு வேண்டியது அரசியல் சூதாட்டமல்ல; மொழியுரிமையும், குடியுரிமையுமாகும். இந்த இரு உரிமைகளையும் பெற்றுத்தர தமிழரசே முன் வந்ததாலும் அக் கட்சிக்கே அரசியல் தலைமையைக் கொடுக்க மலை வாழ் மக்கள் தயாராக இருக்கின்றனர். எனவே தொடர்ந்து பொய்ப் பிரச்சாரம் செய்து வரும் காங்கிரஸ் காரர்கள் தங்களது எண்ணத்தைமாற்றிக் கொண்டு, தமிழரசுக் கட்சியுடன் தோழமை கொண்டு ஒற்றுமையை வலுவாக்கி வடக்கு, கிழக்கு மாநிலங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களோடு, ஒரே கொள்கையில் போராட வழிவகுத்து—அநீதி இழைக்கும் ஆளும் கட்சியிடம் தங்களது உரிமைகளைக் கேட்பார்களேயானால், வெற்றியுண்டு நிச்சயம்.

### அறை கூவல்

இதை விடுத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியினரோ அல்லது பிற தொழிற் சங்கங்களோ தங்களது போக்கை மாற்றிக் கொள்ளாது பாகுபாடு காட்டி மலைநாட்டுத் தமிழர்களை இனிமேலும் ஆட்டு மந்தைகளாகக் கருதுவார்களேயானால், இலங்கை தமிழரசுக் கட்சியினர் மலை நாடடுத் தமிர்ழகள் வாழ்வில் தீவிர அக்கறை கொண்டு, அவர்களுக்கு அரசியல் உரிமைகளை, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் என்ற ரீதியில் பெற்றுத் தருவார்கள். மலை நாட்டுத் தமிழர்களின் குறிப்பாக "காளையர்கள்" இதைப் பெரிதும் விரும்புகிறார்கள் என்பதை எடுத்துக்கூற விரும்புகிறேன.

(13-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


# மாப்பிள்ளைக்கென்று வளர்த்த மணிப் புறுவை

## தயவு இருந்தால் மாமி தந்துதவி செய்தாலென்ன?

கிராமிய இலக்கியம்

அ. டேவிற் இராசையா

வட இலங்கையின் மன்னார் பகுதியில் எருக்கலம்பிட்டி, தோட்டவெளி போன்ற சிற்றூர்களில் வதியும் மக்களின் மத்தியில் தவழும் எழிலான கிராமியக் கவிதைகள் பல ஏடேறாதிருந்து வருகின்றன. அவற்றுள் சில எழிலான கவிதைகளை ஈண்டு சுவைத்து உள்ளம் பூரித்து உவகை எய்துவோம்.

அவன் பெயர் கபூர். உடலிலே உரமும் வலிமையும் கொண்ட கட்டழகன் அவன். அந்த இளவல், தன் உள்ளத்தை, பூத்துக் குலுங்கும் பூவையாள் மாமிமகளிடம் பறிகொடுத்து விட்டான். ஆமாம், அவள் பருவம் கொழிக்கும் எழில் நங்கை. அவளது பருவத் துடிப்புத் தான் அவனை ஈர்த்து விட்டது. அந்த ஆரணங்கைக்காணாது அவனால் ஏனோ இருக்க இயலவில்லை. அவளைப் பிரிந்திருக்கும் வேளை ஒரு நிமிடமும் ஒரு யுகம் போல் அவன் மனத்தில் பட்டது. அவன் அவளிடம்தான் மன அமைதியையும் இன்பத்தையும் குளுமையையும் கண்டான். அவளுக்கும் அந்த நிலை தான்.

அந்த வளையொலியாள் தண்ணீர் எடுக்கக் குளக் கரைக்குப் போகிறாள். ஆஹா! அன்னமும் அவளிடம் தான் நடை பயிலவேண்டும் போலிருந்தது அவள் நடை. அதை இரசித்த வண்ணம் குளத்தின் அக்கரையில் நின்று கொண்டிருந்தான் அந்தக்காரிகையின் காதலன் கபூர். அந்த ஏந்திழையாளைக் கண்ட இளவல், உள்ளம் பூரிப்படைகிறான். பாடுகிறான்.

[illegible]
[illegible]
பெண்ணே
சட்டை போட்ட கையாலே
தண்ணி கொளுசம் தந்தா
லென்ன?

அந்தப் பூங்கொடியாளின் பூமுகத்தில் முகம் பார்க்க வேண்டும்— அவளைப் பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும், என்ன வெல்லாமோ பேசவேண்டும்—என்றெல்லாம் அவன் இளம் உள்ளத்தில் ஆசை அலைகள் அலைமோதின. இன்ப உணர்ச்சித்துகள்கள் எழும் அகவையுடையவன் அல்லவா!— அந்த இன்பத் துடிப்பினால் உந்தப்பட்ட அவன் அவளை இக்கரைக்குக் கூப்பிடுகிறான்.

அக்கரைக் கொக்கே
அழகு மணித் தாராவே
இக்கரைக்கு வந்தால்
இனிச்ச தண்ணி நான்
தருவேன்.

அவள் இக்கரைக்கு வந்து விட்டாள். ஏன்! அவள் அவனோடு நெருங்கி உட்கார்ந்து விட்டாள். அவளுக்கோ கூச்சம் —வெட்கம். அவளுக்கு அது புது அனுபவம். ஏதேதோ பேசி மகிழ்ந்தனர். என்னவெல்லாமோ கதைத்தனர். அவள் மீது தான் மையல் கொண்ட காரணத்தைக் காதலியிடம் கூறுகிறான்—

ஒன்றுக்கும் இல்லை மச்சி
உங்கள் மேல் ஆசை
வச்சேன்
மார்பில் விழுந்த அந்த
மகிழம் பூத் தேமலுக்கு.

அவளுக்கு வயது இருபதிற்கும் மேலிருக்கும். இவ்வளவு வயதாகியும் இன்னும் அவளைத்தனக்கு மணம் முடித்து வைக்கவில்லையே என்று உள்ளம் வருந்துகிறான். ஏன் இப்படித்தனிமையில் இருக்க வேண்டும்— என்று தன் பக்கத்திலிருக்கும் மாமி மகளைப் பார்த்துக் கேட்கிறான்.—

ஈக்கு முத்தி இடை சிறுத்து
இடைக்கு இரண்டு பாளை
தள்ளி
பாக்கு முத்தும் காலத்திலே—
மச்சி
நீங்கள் பாரச் சிறை
காக்குறியே.

மச்சான்! நீங்கள் தான் எனக்கு வேண்டும். நான் உங்களோடு வாழ ஆசைப் படுகிறேன், ஆனால்— ஏனோ என்னுடைய அம்மாவுக்கு என்னை உங்களுக்குக் கட்டிக் கொடுக்க விருப்பமில்லை. மணந்தால் உங்களைத்தான் மணப்பேன்— என்ற இறுதி முடிவுடன் பெண்மை உணர்ச்சிகளால் உந்தப்பட்டும் உங்களையே நம்பிப் பொறுமையுடன் இருந்து வருகிறேன்— என்று விழிகளில் கண்ணீர் சொட்டச் சொட்டத் தன் நிலையை அவள் உணர்த்தினாள். தாய்க்கு ஒரே மகளான உன்னை எனக்கு கட்டிக் கொடுத்தால் என்ன!— என்று கேட்கிறான்.

வாழைக் கொரு குலை தான்
வையகத்தில் உள்ளபடி
தாய்க்கு ஒரு மகள் தான்
தந்துதவி செய்தால்
என்ன?

மாமி மேல் சினம் கொண்ட அந்த இளவல் தன் காதலியிடம் மேலும் கூறுகிறான்—

மாப்பிள்ளைக் கென்று
வளர்த்த மணிப்புறுவை
தயவு இருந்தால் மாமி
தந்துதவி செய்தால்
என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கேட்டுப் பாருங்கள்

## திருவாளர் குயுக்தி

வி. வேலுசாமி, உடுவரை பசார்

கே: மனமாரக் காதலித்தவனை வஞ்சித்துவிட்டு, மாற்ருன் ஒருவனின் கரம் பற்றிய மங்கையைக் காதலன் என்ன செய்தால் அவன் மனம் நிம்மதி பெறும்?

ப: அவனையும் அவள் செய்ததாகக் கூறப்படும் குற்றத்தையும் மறந்து மன்னித்துவிட்டால் மனம் நிம்மதி பெறும்.

ஃ

சிற்றம்பலம், மாதகல் வடக்கு

கே: பெண்கள் ஏன் தங்களை அளவுக்கு அதிகமாக அலங்கரித்துக் கொள்கிருர்கள்?

ப: அவர்களின் அலங்காரத்தை ஆசையுடன் அள்ளிப் பருக ஆரணங்குகள் இருப்பதால்......

ஃ

தம்பிமுத்து, நாரஹென்பிட்டி

கே: நம்ம பிலிக்ஸ் ஐயா அடுத்தபடியாக என்ன செய்யப் போகிருரோ!

ப: கோர்ட்டுப் பக்கம் சுற்றுவதாகக் கேள்வி. தனக்கு "ஆமாம் சாமி" போடும் ஆசாமிகளையும் சேர்த்துக் கொண்டு "நவ சிறிலங்கா சுதந்திரக் கட்சி" என்ற பெயரால் புதிய கட்சியொன்றை அமைக்கப் போகிருராம்! அரசியலுக்கு புதுசல்லவா? எதையும் செய்வார்.

ஃ

சோமசுந்தரம், அனுராதபுரம்

கே: 300 இந்துக்கள் புத்த மதத்தைத் தழுவிக் கொள்ள இருப்பதாகவும், பௌத்த சமயத்தைத் தமிழில் போதிக்க ஒரு பிக்கு வரவிருப்பதாகவும் செய்திகள் அடிபட்டன. ஏன் இது? தீண்டாமை ஒழிப்பு இயக்கம் மாண்டு மடிந்து விட்டதா?

ப: தீண்டாமை ஒழிப்பு இயக்கம் பல உருவங்களிற் செயல்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. தமிழர் சமுதாயக் கட்டுக் கோப்பிலுள்ள ஒரு ஓட்டைதான் தீண்டாமை. அந்த ஓட்டை வழியாக பௌத்த மதத்தையும், சிங்கள மொழியையும் சமுதாயத்தினுள் திணிக்க ஒரு துரோகக் கும்பல் ஆதரவளிக்கிறது. அந்த ஆதரவின் விளைவுதான் இந்த மதமாற்றம்.

ஃ

ஆ. க. சிவபாதசுந்தரம், பம்பலப்பிட்டி

கே: கடந்த பல ஆண்டுகளாக ஒரு தலைசிறந்த தமிழ் வாரப் பத்திரிகையில் கடமையாற்றிய ஆசிரியர் ஒருவர் சுயநலத்துக்காக அதனின்று விலகி, தான் முன்னர் இருந்த பத்திரிகையைத் தூற்றி, இன்னுமொரு தினசரியில் சேர்ந்து தமிழரைக் காட்டிக் கொடுக்கும் காக்கை வன்னியனாக நடக்கின்றுர். அவரைப் பற்றி நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

ப: நான் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது? சொல்ல வேண்டியதையெல்லாம் நீங்களே சொல்லி விட்டீர்களே!

ஃ

ராஜேஸ்வரி, மாவிட்டபுரம்

கே: எனக்கு உங்களைப் பார்க்க ஆசையாயிருக்கிறது? என்ன செய்யலாம்.

ப: இதோ இருக்கிறேன். கொஞ்சம் மேலே பாருங்கள்.

ஃ

எம். எம். எகியா, கிண்ணியா.

கே: தமிழ் மொழியையும் தமிழரசையும் ஒழித்துக் கட்ட வேண்டுமென்று பறை சாற்றித் திரிந்த மூதூர் இரண்டாவது பிரதிநிதி மஜீது இப்போது முஸ்லிம் மக்களின் தாய் மொழி தமிழேதான் என்று கூறுவதற்கு அர்த்தம் என்ன என்பதைத் தங்களால் சொல்ல முடியுமா?

ப: அரசாங்கத்தின் ஆயுட்காலம் குறுகிவிட்டதென்பது அவருக்கும் தெரிந்துவிட்டது போலும்.

ஃ

கே. கதிர்காமநாதன், அளவெட்டி.

கே: ஓய் குயுக்தியாரே! மங்கள காரியங்களுக்கு விதவைகள் முன் நிற்பதில்லையே. அவ்வாறிருக்க பிரதமர் ஸ்ரீமாவோ முன் நிற்பதன் காரணம்?

ப: பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவும் மங்கள காரியங்களுக்கு முன்னிற்பதில்லையே!

ஃ

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

எஸ். எஸ். நேசன், மாதகல்.

கே: உடம்பு தெரியத்தக்கதாகப் பெண்கள் ஆடை அணிவதன் மர்மம் என்ன?

ப: உங்களைப் போன்ற ஆசாமிகளை வெட்கித் தலை குனியச் செய்ய!

ஃ

து. பாலையா, தலவாக்கொல்லை.

கே: மலை நாட்டில் எப்பொழுது தமிழர் மகாநாடு நடக்கும்?

ப: அதனை நடத்த வேண்டிய பொறுப்பு மலைநாட்டுத் தமிழர் கையில் தான் இருக்கிறது.

ஃ

சி. இரகுபதி, புங்குடுதீவு.

கே: உலகத்தின் விலை என்ன?

ப: மார்க்கெட் நிலைவரத்தைப் பொறுத்தது.

ஃ

கே. வி. கந்தசாமி, கொடிகாமம்.

கே: கடவுளின் நண்பர் யார்?

ப: அவருக்குப் பயந்தவர்கள்.

ஃ

எம். சதாசிவம், கொட்டகலை.

கே: ஜன்னல் காதல் எங்கே போய் முடியும்?

ப: தற்கொலையில் அல்லது திருமணத்தில்.

ஃ

மு. சுபையிர், கிண்ணியா.

கே: குயுக்தியாரே, தாங்கள் கத்தி தீட்டும் கல்லை அனுப்பி வைக்கவும்.

ப: அதில் வெடிப்பு கண்டுள்ளது.

ஃ

க. அருணன், கொழும்பு(13).

கே: தமிழரசுக் கட்சி சாதி ஒழிப்பு மாகாநாடு கூட்டியது போல் இந்தியத்தமிழர், யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், மன்ஞர்த் தமிழர், வவனியாத் தமிழர், திருகோணமலைத் தமிழர், கொழும்புத் தமிழர், மலைநாட்டுத் தமிழர், டீ. ஆர். பி. தமிழர், சிங்களவரில் ஒரு பகுதியாக நினைக்கும் பரவத் தமிழர், இப்படி பிரித்துப் பேசாது இலங்கைத் தமிழர் அல்லது ஈழத்துத் தமிழர் என்று சிந்திக்கவும் பேசவும் கூடியதாக இவர்கள் எல்லோரும் பிரதிநிதித்துவம் வகிக்கக் கூடியதாக ஒரு மகாநாடு ஏன் கூட்டக் கூடாது?

ப: அந்த மகாநாடுதானே தமிழரசு மகாநாடு.

கனடா மங்கை சாரடி லூா, இலங்கையில் தங்கி இருந்த காலத்தில் நீங்கள் அவருடன் தகாத முறையில் நடந்து கொண்டதாக என்னிடம் புகார் செய்து உள்ளார். சட்டப்படி உங்கள் மீது வழக்குத் தொடரப் போகிறேன்.

ப: நீங்கள் அந்தப் பெண்மணி சார்பாக நடவடிக்கை எடுக்க உங்களுக்கும் அவருக்கும் என்ன தொடர்போ?

ஃ

வசந்தன், பண்டத்தரிப்பு.

கே: ஒரு குறிப்பிட்ட பாடசாலையில் படிக்கும் பெண்களுக்குத் தனிப்பட்ட சலுகைகள் கொடுத்ததன் மர்மம் என்ன?

ப: அந்தச் சலுகையை வழங்கினவர்கள் யார் என்பதுதான் கேள்வி. ஆண்களாயிருந்தால் அதில் மர்மமே கிடையாது.

ஃ

க. சிவலிங்கம், கொழும்பு-(5)

கே: பலகாலமாக நாம் ஆதரித்து வளர்த்து வந்த ஓர் தமிழ் தினசரி இப்பொழுது தமிழ் மக்களின் துரோகச்சின்னமாக மாறியிருக்கிறது. இப் பத்திரிகையை பகிஷ்கரிப்பது பழைய நண்பர் ஒருவரைப் பிரிவது போல் இருக்கிறது.

ப: பழைய நண்பராஞலும் துரோகியாகிவிட்டால் .........தன்னைக் கொல்ல வரும் பசுவையும் கொல்லலாமல்லவா?

ஃ

எஸ். கே. சண்முகநாதன், வண்ணுர்பண்ணை.

கே: மலை நாட்டில், தமிழரசுக் கட்சிக் கிளைகள் அமைக்குந் தருணத்தில், திருவாளர்கள், தொண்டமான், அஸீஸ் இருவரும் சேர்ந்து எதிர்ப்பார்களோ?

ப: தமிழரசுக் கட்சியை மலை நாட்டுத் தமிழர்கள் ஆதரிக்கும்போது எதிர்ப்புகளெல்லாம் எம்மட்டு? வளர்ச்சிக்கு எதிர்ப்பும் தேவைதானே!

## துயரும் வேண்டும்

—எருவில் மூர்த்தி—

சிந்தையைக் கவரும் கோலச்
  செந்நிற வானைச் செம்பொற்
பந்தினை நிகர்த்த மாலைப்
  பருத்தியைச் சுகந்தம் வீசும்
தென்றலை அந்திப் போதின்
  திருவெலாஞ் சுவைக்க மேனி
வெந்திடத் தகிக்கும் உச்சி
  வெயிலையுஞ் சகிக்க வேண்டும்.

செந்தழற் தட்டைக் கிழைத்
  திசைக்கடல் அலைகள் உந்தும்
அந்தமில் அழகைக் காலை
  அவனியின் பொலிவை ஈசன்
தந்தனல் ஒளியைத் தூய்மை
  தவழ்ந்திடும் புலரிப் போதைக்
கண்டுளம் களிக்கக் கோரக்
  கங்குலைக் கடக்க வேண்டும்.

செந்தமிழ் அன்னை ஏற்ற
  சிருடன் ஈழ நாட்டை
முந்தைய முறையில் ஆள
  முடியினை நல்க தியாகச்
சிந்தையர் ஆற்றுந் தூய
  செருக்களத் தல்லல் கோடி
வந்திடின் என்ன? கோரும்
  வளம்பெறத் துயரும் வேண்டும்.

நா. ஜெயசீலன், காங்கேசந்துறை,

கே: சுந்தரரின் அறிக்கைகளையும் தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளையின் அறிக்கைகளையும் காணுேமே?

ப: ஆடி ஓடி அடங்கிவிட்டார்கள். எவ்வளவு காலத்துக்குத்தான் பத்திரிகைகளைக் கொண்டு வாழ முடியும்? பதில் அறிக்கைகள் சுடச் சுடக் கொடுத்ததும் பதுங்கிவிட்டார்கள்.

ஃ

பஞ்சநாதன், மன்ஞர்.

கே: இராசதுரை எம். பி. ஒரு புதிய கட்சியை உண்டாக்கப் போகிருராமே, இது உண்மை தாஞ?

ப: எல்லாம் பேப்பர்காரன்களின் சரடு! என்று அவரே கூறிவிட்டாரே.

ஃ

ரா. கோ. லிங்கம், தெரணியகல.

குயுக்தியாரே, ஏழைகளின் மணம் குமுறினல் என்னுகும் நாடு?

ப: நாடு முழுவதும் மணம் கமழும்.

ஃ

எல். அரியரெட்ணம், அம்பாரை.

கே: மிஸ்டர் குயுக்தி, எல்லா கேள்விகளுக்கும் பட், பட் என்று பதில் சொல்ல எப்படிக் கற்றுக் கொண்டீர்?

ப: திருமதி குயுக்தியாரின் கேள்விகளுக்குப் பதில் அளிப்பதன் மூலம்...

ஃ

கே. திரிகோணசுந்தரம், புதுவட்டகுடை.

கே: மிஸ்டர் குயுக்தியாரே, உலகத்தைபற்றிக்கடவுள் என்ன நினைத்துக் கொண்டிருப்பார்?

ப: தான் படைத்த உலகம் இந்தக் கதிக்கு ஆளாகி விட்டதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்.

ஃ

அ. குணபாலசிங்கம், திருப்பூர்.

கே: தமிழரின் அறப் போர் எப்போது ஆரம்பமாக இருக்கின்றது?

ப: ஏப்பிரல் 17-ந் தேதிக்கு முன்பு...




பணக்காரன் முதல்



பாட்டாளி வரை

எல்லோரும் புகைப்பது

**கமலா பீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

**கமலா ஸ்டோர்ஸ்,**

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தடுப்புக் காவலில் நாம்' 11.



# அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனாகொடை,
ஹோமகம.
5—5—1961

என் வாத்சல்லிய உருவமே!
மகளே!

சென்ற மடலில், யானும், கரிகாலனும், உடுவில் எம். பி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. துரைரத்தினமும், வவுனியா உதவி கிராமச் சங்கத் தலைவர் சுப்பிரமணியமும், வவுனியாவைச் சேர்ந்த கைலாய பிள்ளையும் ஓர் பிரச்சினை பற்றிக் கலந்துரையாடினோம் என எழுதினேனல்லவா?

இந்தப் பிரச்சினை பற்றி நாட்டிலும் பலர் மத்தியில் பேசப்பட்டதுண்டு.

ஈழ நாட்டிற்குச் சுதந்திரம் கிடைத்த பிற்பாடு, தமிழ் பேசும் மக்களின் நிலை கீழ் இறங்க ஆரம்பித்தது நாளொரு மேனியாகக் கீழ் இறங்கி இறங்கி, அனாதரவாய், ஆதரவற்றதாகத் தமிழ் பேசுமினம் மாறிற்று. எப்பக்கம் பார்த்தாலும் அநீதி கோலோச்சியது; அராஜகம் தலை விரித்தாடியது. இந் நிலையில் இன முழக்கமிட்டபடி தமிழ் பேசும் மக்கள் மத்தியில், அபாரமான ஆதரவுடன் தமிழ்க் காங்கிரஸ் கட்சி குரல் எழுப்பியது. பாராளுமன்றம் சென்றதும் அவர்களது குரல் கம்மியது. எழுச்சி, இன முழக்கம், உரிமை என்பவற்றையெல்லாம் விற்று, ஒரே ஒரு மந்திரிப் பதவி பரிசாகப் பெறப்பட்டது.

அதனால் வீழ்ந்து கொண்டிருந்த தமிழ் பேசுமினம் ஆதரவாயமைந்திருந்த கொடியையும் இழந்தது. அதனால் தமிழ் பேசுமினம் சொன்னபடி நடக்க முடியாத இனம் என்ற பெயரைப் பெற்றது. இலட்சியம் ஊசலாடியது.

இந் நிலையில் தமிழ் பேசும் மக்கள் மத்தியில், புது முறுக்குடன் இலங்கைத் தமிழினம் எழுச்சி கொள்ள, சுதந்திர தாகம் மிளிர- தமிழரசுக் கட்சி- உதயமாகியது. ஆரம்பத்தில் வெறுப்புடன் எதிர்ப்புடன் தமிழரசுக் கட்சியையும் மக்கள் பார்த்தார்கள். தமிழ்க் காங்கிரஸ் கட்சியிடம் படித்த பாடம் வேறெப்படிப் பார்க்கச் செய்யும்?

தமிழரசுக் கட்சியிடம் மாருத, அசைக்க முடியாத கொள்கை இருந்தது; நேர்மை நிறைய இருந்தது; கடமை உணர்ச்சி அபரிதமாக இருந்தது; ஒப்பற்ற தலைமை இருந்தது.

அதனால், தமிழரசுக் கட்சி வளர்ந்தது; வளர்ந்தது; வளர்ச்சியின் எல்லையை அடைந்தது. வடக்கு, கிழக்கு மாகாணத் தமிழரோ... ஈழத்தில் எங்கும் வாழும் தமிழரோ... அத்தனை பேரும் ஒரு கொடியின் கீழ்... தாயின் மணிக் கொடியாம் மூவர்ணக் கொடியின் கீழ்... ஒன்று பட்டனர்.

மக்களின் சார்பிலே அபரிதமான வாக்குகளைப் பெற்றுப் பாராளுமன்றம் சென்ற பிரதிநிதிகள், தமிழ் பேசுமினத்தின் பிரச்சினையை ஆணித்தரமாகப் பாராளுமன்றத்தில் பேசினர். 1949ம் ஆண்டு தொடக்கம் பேசப்பட்டது. அமரர் வன்னியசிங்கம் அவர்கள், உணர்ச்சியுடன் ஆற்றிய உரைகள் எத்தனை?

இத்தனை ஆண்டுகாலமும் பாராளுமன்றத்தில் எங்களது குரலைச் சரியாகத் தமிழரசுக் கட்சி உபயோகித்தது. உலக நாடுகள் அறியப் பாராளுமன்றப் புத்தகத்தில் [ஹன்சாட்] பதிவு பெற்றது ஒழியப் பலன் என்ன?

தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது அராஜரீகத்தை, என்பதை ஓரளவில் மட்டுமே ஒப்புக் கொள்ள முடியும். ஆனால், பேசிய அளவுக்கு பாராளுமன்றத்தில் குரல் கொடுத்த அளவுக்கு பலன் உண்டானதா? ஆகவே, தமிழ் பேசும் மக்கள் ஏன் பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கக் கூடாது......?. இது நாங்கள் கலந்துரையாடிய பிரச்சினையாகும்.

சென்ற தேர்தலின் போது கூட மக்கள் பல இடங்களில் இந்த வினவைக் கேட்கவே செய்தனர்!

பாராளுமன்றத்திற்கு வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து ஒரு பிரதிநிதி கூடப் போகாது விட்டால்...... உரிமை கிட்டும் வரை, தமிழன் ஈழத்தில் தகுந்த அந்தஸ்துடன் மிளிரும் வரை ......பிரதிநிதித்துவமின்றிப் பாராளுமன்றக் கதிரைகள் இருப்பின் சிறப்பென்றே யானும் கருதினேன்; கருதுகின்றேன். பாராளுமன்றத்தில் பேசி விடுவதால் இன்று என்ன பலன் உண்டு? இதை உடுவில் பிரதிநிதி தர்மலிங்கம் கூட ஒப்புக்கொண்டார். தேர்தல் வரும் போதெல்லாம் ஒருவரும் அபேட்சகராக முன் வராது, கட்டுப் பணம் கட்டாது, ஏகமனதாகப் பகிஷ்கரிக்கலாம்,- அல்லது பாராளுமன்றம் போவது, எங்கள் கொள்கையை முன் வைத்து ராஜீநாமாச் செய்வது, திரும்பவும் தேர்தல் வரும்; பாராளுமன்றம் போவது, ராஜீநாமாப் புரிவது. இப்படியும் செய்யலாம் எனப் பேசப்பட்டது.

ஆனால் தேர்தலில் யாரும் அபேட்சகராகாவிட்டால் நன்றே! வேறு கட்சிகளும் தயாராக வேண்டுமே! மற்றக் கட்சிகளுடன் ஒப்பந்தம் பேசி அப்படிச் செய்யலாமெனினும், கம்யூனிஸ்ட் கட்சியோ, சமசமாஜக் கட்சியோ தயாராவாரா? அவர்களது சிங்களத் தலைமை ஒப்புக் கொள்ளாதே! எல்லோரும் ஒப்புக்கொண்டாலும், அல்பிரட் துரையப்பா போன்ற கொள்கையற்றவர்கள் அபேட்சகராகாது விடுவரா?

**புதுமை லோலன்**

கொள்கையற்றுப் பாராளுமன்றத்தில் ஆட்சி பீடத்திற்கு வால் பிடிப்போர், சொந்த வாழ்வுக்காகப் பந்தம் பிடிப்போர் பாராளுமன்றம் சென்று தமிழ் பேசுமினத்திற்கு பாசுபுரிவதிலும் பார்க்கக் கொள்கையாளர் போவது தானே சிறப்புடையது. இதுவும் சிந்திக்க வேண்டியதே. முழுத் தமிழ் பேசுமினம் இதற்குத் தயாரானால் இதை விடச் சிறந்த போராட்டம் கிடையவே கிடையாது. உலக அரங்கில் பெரியதொரு இடத்தை ஈழத் தமிழினம் பெற முடியும். ஒன்றுபட்ட தன்மை, பொது நல எண்ணமுடன் எல்லாரிடமும் இருக்குமானல், பாராளுமன்றப் பகிஷ்கரிப்புப் போன்ற போராட்டம் மிகச் சிறப்புடையது. முழுத் தமிழ் பேசும் மக்களும் பங்குபற்றும் போராட்டமாகவும் அமையும். பல இன்னல்கள் வரலாம். சாதாரண சலுகைகள் தடைப்படலாம். ஆனால் அரியதொரு போராட்டத்தை நடத்திய படியே இருக்கலாம். தமிழ் பேசுமினத்தின் ஒற்றுமையை பிரச்சார முகத்தால் ஏற்படுத்தி, யாரையுமே பாராளுமன்றம் செல்லாது தடுத்தால் என்ன என்று கூடப் பேசினோம்.

பாராளுமன்றம் போவது- பின் உடனடியாக ராஜிநாமாச் செய்வது. இதுவும் நல்லதொரு போராட்டமே எனினும், ஈழத்துத் தேர்தலில் முழு மக்களும் வாக்குகளைச் சரியாக உபயோகிக்கும் பான்மையும் தேவை. அப்படியிருப்பின் அபேட்சகர்கள் வீணுகப் பணம் செலவு செய்ய வழி ஏற்பட முடியாது. இதற்கும் தமிழ் பேசுமினத்தின ஒற்றுமையே அவசியம். மக்களின் சக்தி ஒன்றுபட்டால் மேற் குறிப்பிட்ட போராட்டங்களைச் செய்வது சுலபமும், பலன் கூடியதுமாகும். அதற்குத் தலைமை தேடியலையும் பண்பற்ற படித்த கூட்டம் விடுமா?

இவற்றையெல்லாம் தமிழ் பேசும் மக்கள் சிந்திக்க வேண்டும். புனராலோசனை செய்ய வேண்டும்! இப்படி நாங்கள் முடிவு காண முடியாத இப்பிரச்சினையைப் பற்றிக் காரசாரமாகக் கலந்துரை செய்தோம்.

இன்று ஆனி மாதம் ஐந்தாந் திகதியல்லவா? ஈழத்துத் தமிழ் பேசுமினத்தைப் பொறுத்தவரை இன்றைய தினம், போராட்ட ஆரம்ப நாளல்லவா? உரிமைகோரி முதன் முதல், தமிழ் பேசுமினம் சாத்துவிக வழியில் இரத்தம் சொரிந்த நாளல்லவா?

1956ம் ஆண்டு ஆனி ஐந்தாந் திகதி சிங்கள மக்கள் தங்கள் முகத்தில் கரி பூசிக் கொண்ட தினம்! தமிழ் பேசுமினம் எழுச்சியின் முதல் பாடத்தை நடைமுறையில் காட்டிய தினம்! அன்றைய பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா அவர்கள் இரும்பு வேலி போட்டு, பாராளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' மசோதாவை நிறைவேற்றிய தினம். இம் மசோதா நிறைவேறும் என்பது தெரிந்ததே! பெரும்பான்மை வாக்குகள் சாதகமாயிருப்பதனல் நிறைவேறத் தானே செய்யும்!

ஆனால், இதற்குத் தமிழ் பேசுமினம் எதிர்க்கின்றார்கள் என்பதை உணர்த்திய தினம் ஆனி ஐந்து.

அன்று இலங்கைத் தமிழரசுக் கட்சி காலிமுகக் கடற்கரையை நாடிக் கொழும்பு சேர்ந்தது. தொண்டர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் பம்பலப்பிட்டிக் கோயிலில் கூடினோம்.

"சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துக்கொடு", "தமிழும் ஆட்சி பீட மேற வேண்டும்", "சகோதர மொழியை அழிப்பதில் சிங்களம் வாழுமா?", "நாம் கேட்பது மனித நீதி", "பல மொழி பேசுகின்ற மக்கள் கொண்ட பிரதேசங்களைப் பார்!", "அறப்போர் வெற்றியைத் தரும்", "இரத்தம் சொரிந்தும் மொழி காப்போம்". "நமது மொழி எமது விழி"... இப்படியான சுலோகங்களை அட்டையிலே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிக் கழுத்திலும் போட்டுக் கொண்டு, அமரராகி விட்ட வன்னியசிங்கம், தந்தை செல்வநாயகம் ஆகியோர் முன் செல்ல நாங்கள் தொடர்ந்து சென்ருேம். காலிமுகம்... உதய ஞாயிறு உதயமாகி இரண்டு மணித்தியாலங்கள் வரை கழிந்து விட்டன. காலிமுகப் பசும் புற்றரையை நாடினோம். அன்பு நெஞ்சம் நிறைய, அறம் கண்களிலே செறிய ஊர்வலம் வருகிறது. எதிரே ஆயத்தப்படுத்தப்பட்ட இன்னோர் ஊர்வலம்...உயர்ந்த மூங்கில் தடியில் சிங்கக் கொடி பறக்க இன்னோர் ஊர்வலம் வருகின்றது.

இதை விட சிங்கள மக்கள் எங்களைச் சூழ ஒன்று படுகின்றார்கள். சிங்கக் கொடியுடன் வந்த ஊர்வலம்... சிங்கள மக்களின் தார்மீக உணர்ச்சியைக் கொன்றது, புத்தரின் அஹிம்சையைச் சமாதிக்கு அனுப்பியது.

என்ன ஆச்சரியம்? தமது நாட்டுக் கொடியின் புனிதம் தெரியாத அவர்கள் ...... கொடி சுற்றி வந்த மூங்கிலை முறித்தார்கள். அந்த ஊர்வலத்தில் வந்தோருக்கு மூங்கில் தடியே ஆயுதமாகியது.

சிங்கக் கொடியை அவர்களே முறித்தனர். எதிர் காலம் முறியப் போகும் கொடியென்பதை... அவர்களறியாதே செய்தனர்.

பின்பு...?

?...?...

சறக்... டடக்... மூங்கில் தடிகளின் நுனிகள் தமிழ் பேசும் மக்களின் உடம்பில் எழுப்பிய ஓசை.

அடி... உதை... எச்சில் துப்பல்... எங்கள் அறப்போர் வீரர் நிமிர்ந்து உட்கார்ந்தபடி—தமிழ் வாழ்க!- எனக் குரல் கொடுக்கின்றனர்.

அடி ஓயவில்லை. வன்னியசிங்கம் அவர்களின் சட்டை (நாஷனல்) கிழிக்கப்படுகின்றது. அவரை உருட்டி உருட்டி அடிக்கிருர்கள்; மிதிக்கிருர்கள். வன்னியரின் அருகே நாம். நான் அவர் வதனத்தைப் பார்த்தேன். என்றுமே காணுத பூரிப்புடன் காணப்பட்ட திட உள்ளம் கண்டேன்.

என் அருகே மல்லாகம் வழக்கறிஞர் நடராசாவும், கொடிகாமம் ஸ்ரீ முருகனும் உட்கார்ந்திருந்தனர்.

சுற்றிச் சுற்றி அடித்து வந்த காடையர் கூட்டம், நடராசாவின் வெண் மண்டையில் சளார் பளார் என அடித்தார்கள். அவர் தனது சட்டைப் பையிலே வைத்திருந்த கண்ணுடியைக் கூட்டுடன் எடுத்து, தாம் திருடர் கூட்டமென மெய்ப்படுத்தினுர்கள்.

பின்பு......

ஸ்ரீ முருகனை உதைத்து வீழ்த்துகிருர்கள். அடி, அடி!

பக்கத்தேயிருந்த என் முதுகிலே பலமான உதை... பின்பு அடி... யாரோ இருவர் இழுத்தனர். இழுத்து இழுத்து அடிக்கிருர்கள். எமது வன்மை, திடம் நோவை ஏற்கவே செய்தது.

காலிமுகப் பசும் புற்றரையிலே தமிழ் இரத்தம்—இரத்தக் குறி—பதித்து விட்டோம், தியாக இரத்தம் சொரியப்பட்டது.

சிங்கள மகன் ஒருவன் கொக்குவில் அப்பையாச் சாமியார், பனையோலையால் செய்துபோட்டிருந்த தொப்பியை எடுத்தான். அதனுள் எம் முன்னேயே தனது சிறு நீரைச் சேர்த்தான். பின்பு நிர்வாணமானன்... அந்நிலையில் எங்களிடையில் சிறு நீரைத் தெளித்தபடி நடனமாட ஆரம்பித்தான். ஐயகோ! சிங்கள இனமே! உனது பண்புடைமை கண்டோம்... உன் உள்ளம் வளராமை கண்டோம்......!

காலிமுகம் நிறைய சிங்களவர் கூட்டம்...... நாங்கள் இரத்தம் ஒழுக ஒழுக எழுந்தோம். இன்னும் முன்னேறினோம்... பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கிச் சென்ருேம். பாராளுமன்றக் கட்டிட மேன் மாடியில், ஆட்சிச் சக்கரத்தை உருட்டும் பண்பாளர்......பதினுயிரக் கணக்கான சிங்கள மக்கள் மத்தியில், நானூறு தொண்டர்கள் நாம். ஆகாயம் கறுத்தது. மழை... மழை... அத்துடன் சிங்கள மக்கள் எறியும் கல் மழை. கற்கள் ஒரு பனங்காயளவு இருக்கும். வட்டுக் கோட்டைப் பிரதிநிதி அமிர்தலிங்கம் தலையில் ஒரு கல் பலத்த காயத்தை வருவித்தது. இன்னும் பல தொண்டர்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற டாக்டர் நாகநாதன் அவர்கள் பலத்த தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டார். பொலிசார் இத்தனையும் நடந்த பிற்பாடு வந்தனர்...!

மாலை பாராளுமன்றத்துள் அமிர்தலிங்கம், கட்டிய காய

(12-ம் பக்கம் பார்க்க)


## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழர் பிரச்சினை




## செத்துப் போடா!

"குருவி"

கொடியோடு நாடோடு வாழும் வாழ்வும்
குலைந்தின்று நாடின்றி வாழும் வாழ்வும்
படையோடு நடை போட்டு வாழ்ந்த வாழ்வும்
பகைவருக் கஞ்சி யின்று வாழும் வாழ்வும்
தடை தீர்க்கப் புயலெனவேபாய்ந் தெழுந்து,
தடை வெட்டி முடையின்றி வாழ்ந்த வாழ்வும்
அடி யோடு முடியோடு வீழ்ந்து போச்சே
அவமானம் செத்துப்போ! செத்துப்போடா!!

எல்லைக்குள் வஞ்சமனத் தோடு வந்து
எட்டியடி வைத்தோரை வெட்டித் தள்ளி,
தொல்லைக்கு வருவோரைத் தூள் தூளாக்கி
தொலைத்தனையே உன்வீரம் எங்கே போச்சு?
கொல்லைக்குள் வருகிறான் எதிரி கண்டும்,
ஏன் மௌனம்? ஏன்மௌனம்? இதுவா வீரம்?
இல்லை! இல்லை!! நீ தமிழன்தானா? இல்லை!!
எதற்குனக்கு அப்பட்டம்? இறந்து போடா!

உனை ஈன்ற தமிழன்னை ஓல முந்தன்
உழுத்துவிட்ட செவியேறவில்லையா சொல்வாய்!
மனை போதும், வாழ்வதற்கு வசதி போதும்
மானமா! என்ன விலை? என்றாய் கேட்டாய்
பனைபோல வளர்ந்தாயே பேயா! மூடா!!
பதவியுண்டு அதுபோதும் அதைப்போய்ப் பார்நீ
உனையும் போய்ப் பெற்றாளே எனதுதாயார்
உனக்கெதற்கு-தமிழ்-? ஆமாம் உறங்கு! தூங்கு!!

தூங்கடா தூங்கு நீ பரவாயில்லை
துடிப்புள்ள ஓரிருவர் தூங்க மாட்டோம்
வாங்கிடுவோம் உரிமைதனை எதிர்காலத்தில்
வாய் பிளப்பாய் அப்போது தூக்கம் நீங்கி
ஏங்குவோய் ஆமாம் எனது பங்கை
இடவில்லை தமிழன்னை தனக்கு என்பாய்
தூங்கு நீ! விழிக்காதே!! தொல்லையில்லை
துடிப்புள்ள ஓரிருவர் போதும்! போதும்!!

———ஃஃ———

## "மறந்துவிட்டான்"

"அழகு"

வான் கடலில் மிதக்கின்ற கூன் பிறைக்கு
வண்ண ஒளிக் கற்றைதனைப் படைத்து விட்டான்!
மீன் துள்ளி விளையாடும் கடல் கன்னிக்கு
மேனியெல்லாம் ஆபரணம் சமைத்து விட்டான்!
தேன் சொட்டும் மலர்களுக்கு மனசைக் கிள்ளும்
சிங்காரம் தனைக் கூடப் படைத்து விட்டான்!
ஏன்தானோ? மனிதனது எண்ணம் தன்னில்
இரக்கத்தைப் படைப்பதற்கு மறந்து விட்டான்!

குயிலுக்குக் குரலினிமை படைத்து விட்டான்!
கொவ்வைக்கு அழகுதனைக் கொடுத்து விட்டான்!
மயிலுக்குச் சாயல்தனைப் படைத்து விட்டான்
மாரிக்கு மைவண்ணம் படைத்து விட்டான்!
ஒயிலாக அசைந்துவரும் தென்றல் பெண்ணின்
உடம் பெல்லாம் குளிர்மைதனைப் படைத்து விட்டான்!
உயிர்வாழும் மனிதனுக்கு மட்டும் ஏனோ
உள்ளத்தைப் படைப்பதற்கு மறந்து விட்டான்!

## தேசிய சிறுபான்மை நலன்களை ஐக்கிய நாடுகள் சபை பாதுகாக்க வேண்டும்

( மூலம் : ஸ்ரீ. ஏ. டபிள்யூ. பேச்மென்ஸ்
தமிழாக்கம் : தி. சி. சிவப்பிரகாசம், நயினாதீவு. )

27—5—61-ல் "சுவராஜ்ய" என்னும் இந்திய ஆங்கில வெளியீட்டில் ஸ்ரீ. ஏ. டபிள்யூ. பேச்மென்ஸ் என்பவரால் "இலங்கையில் தமிழர் பிரச்சினை" (Tamil Problem in Ceylon) என்று மகுடமிடப்பட்டு எழுதி வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம். இக் கட்டுரை வெளியாகிய போது, இலங்கையில் பத்திரிகைத் தணிப்பு அமுலாகியிருந்தது.

பாராளுமன்றத்திலே பிரதமர் அவர்கள், அறுநூறு, எண்ணூறு ஆண்டுகளாகவே இலங்கையில் தமிழர் வசித்து வருகிறார்கள் என்று கூறினார்கள். தமிழர்கள் மூவாயிரம் ஆண்டுகளாகவோ அல்லது அதற்குமேலாகவோ வாழ்ந்து வருகிறார்கள் என்பதே உண்மையானதும் பொருத்தமானதுமாகும். தமிழ் நாட்டையும் இலங்கையையும் இருபத்திரண்டு கல் தொலைவுக் கடல்தான் பிரித்து வைத்திருக்கிறது. அங்கு தோட்டங்களில் வேலை செய்வதற்காகக் கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியிலே சென்ற இந்தியத் தமிழர்கள்தான் (அவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஒன்பது லட்சம்) மொழியுரிமை முதலியன கோருகிறார்கள் என்று இங்கு சிறிது ஐயப்பாடு காணப்படுகின்றது. இவ்விந்தியர்கள் இலங்கை அரசாங்கத்தால் "நாடற்றவர்" என்று கணிக்கப் பட்டுள்ளனர். இவர்களைப்பற்றிய பிரச்சினை இங்கு எழவே இல்லை.

இலங்கைத் தமிழர்கள், எண்ணிக்கையில் பதினைந்து லட்சமோ அதற்கு அதிகமோ, மிகவும் வேறானவர்கள். இலங்கையின் வடகீழ்ப் பகுதிகளில்; இருபத்தையாயிரம் சதுரக்கல் பரப்பில் கிட்டத்தட்ட பத்தாயிரம் சதுரக்கல் பிரதேசத்தில் வாழ்கின்றனர். அவர்கள் சிறுபான்மையினராக இருப்பினும்; சிங்களப் பெரும்பான்மையோர் பகுதிகளில் சிதறுண்டு வாழாமல், இலங்கைத் தமிழ்ப்பிரதேசங்களாகிய வட, கீழ்ப்பகுதிகளில் வேற்று இனமாக வாழ்ந்து வருகின்றனர்.

தங்கள் தாய் நாடாகிய வடபீகாரில் இருந்து நாடு கடத்தப்பட்ட விஜயனும் அவனது தோழர்களும் துன்பமான கடற் பிரயாணத்தின் பின், கடைசியாக இலங்கைக்கரையை அடைந்து, அங்கே வசித்தனர். அவர்கள் பாண்டிய இராச்சியத்திலிருந்து தமிழ்ப் பெண்களை வருவித்து மணம் செய்தனர்; இவர்களின் பரம்பரையினரே சிங்களவர்.

### இன்று போல் என்றும் இல்லை

பன்னெடுங்காலத்திற்கு முன்பிருந்தே, இலங்கை இவ்விரு சாதியினரும் வசிக்கும் இடமாக இருந்திருக்கிறது. சிங்கள மன்னர்களும், தமிழ் மன்னர்களும் இருந்திருக்கின்றனர். அவர்களுக்கிடையில் சண்டைகளும் சச்சரவுகளும் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் சரித்திரத்தில் எக்காலத்திலேனும் இன்று நடைபெறுவது போல் தமிழர்கள், சிங்களவரின் ஆட்சியின் கீழ் வரவில்லை.

பதினாறும் நூற்றாண்டிலே இலங்கையின் கரையோரப் பகுதிகளைப் போத்துக்கேயர் கைப்பற்றினர். இதனைத் தொடர்ந்து டச்சுக்காரர் களும், [illegible] [illegible] கொண்டனர். பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில், பிரித்தானியர்கள் கண்டி இராச்சியத்தையும் சேர்த்து தீவு முழுவதையும் ஆள்வோராயினர்.

வெளிநாட்டாரின் இந்த ஆட்சிக்காலத்தில்; சிங்களமும் தமிழும் சமநிலைபெற்று இரு மொழிகளும் தேசிய மொழிகளாக அங்கீகரிக் கப்பட்டன. ஐந்து அல்லது ஆறு லட்சம் இலங்கை முஸ்லிம்கள் தமிழர் பரம்பரையினர் என்பதும், அவர்களின் தாய் மொழி "தமிழ்" என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. குறிப்பிடத்தக்க அளவு மலாயர்களும் வாழ்கின்றனர். இச்சமூகத்தினரெல்லாம், பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் "தேசிய ஒற்றுமை" என்ற கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தனர். சிறுகணப்பொழுதேனும் சிங்கள ஏகாதிபத்தியத்தைப் பற்றிக் கனவில் கூடக் கருதவில்லை. சிங்களமும் தமிழும் பல நூற்றாண்டுகளாக சமநிலை பெற்று வழங்கி வந்த நிலைபோய் "சிங்களம் மட்டும்" ஒரே அரச மொழியாக்கப்படுமென்று தமிழர்கள் எண்ணவேயில்லை.

### சோல்பரித் திட்டமும் சுயாட்சியும்

1940-ம் ஆண்டின் பின் "சோல்பரி அதிகாரசபை" (சோல் பரிபிரபுவின் தலைமையில்) இலங்கைக்குச் சுயாட்சி வழங்கும் பொருட்டு வருகை தந்தனர். காலம் சென்ற மொலமுரே, ஸ்ரீ பின் செனநாயகா ஆகிய இரு முக்கிய சிங்களத் தலைவர் சுயாட்சிக்கான ஏகோபித்த கோரிக்கையில் சிங்கள மக்களுடன் ஒத்துழைக்கும்படி தமிழ்மக்களை வேண்டிக் கொண்டனர். பாராளுமன்றத்தில் நாற்பது சதவிகிதம் சிறுபான்மையினருக்குப் பிரதி நிதித்துவம் அளிக்க முன்வந்தனர். இது ஓரளவு நியாயமானதால் தமிழ் மக்கள் அவர்கள் நீட்டிய சிநேகக் கரத்தைப் பற்றியிருக்கலாம்.

அதற்குப் பதிலாக அப்போதைய தற்பெருமைத்

(9-ம் பக்கம் பார்க்க)

கண் நிறைந்த காட்சிக்கும்!!
கவர்ச்சி மிகு எழிலிற்கும்!!
மௌலானா
அச்சடி சீத்தைகளே!!



மனங்கவர் மங்காத பல
நிறங்கள்!
மகிழ்விக்கும் மனோரம்மிய
நவீன டிசைன்கள்!

நீடித்த சேவை அனைத்தும் கொண்ட மௌலானா அச்சடி சீத்தைகளை அணிந்து உயர்ச்சி மிகு கவர்ச்சி பெறுங்கள்!!

மௌலானா (சிலோன்) லிமிட்.,
கொழும்பு, மருதானை, கண்டி.

—MYLADS/MCL—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

## காலைகண்டன்

## திரி(ப்)பு தாளர்கள்

தமிழரசுக் கட்சியின் செல்வாக்கைக் குறைக்க சிறி எழுகின்ற சுயநலக் கும்பலின் வாலாட்டம் நாளுக்கு நாள் கூடிக் கொண்டு வருகிறது. செய்திகளைத் திரிக்கவும், சற்றேனும் உண்மையற்ற வதந்திகளைக் கிளப்பவும் முயலும் பத்திரிகைகள், பத்திரிகை நிருபர்கள் பொது மக்களின் பார்வைக்குள் அகப்பட்டுக் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சிக்கு அன்றுவிரோதிகளாகவிருந்து இடையூறுகள் பல புரிந்த சிலர், சில காலம்— சத்தியாக்கிரகத்தின் போது ஒன்றுபட்ட சக்தியைக்கண்டு பயந்து, ஒளிந்திருந்தனர். மீண்டும் தங்கள் விஷமத்தனத்தையும், வீண் வதந்திகளையும் பரப்ப ஆரம்பித்துள்ளனர். மட்டக்களப்பு பொது மக்கள் இந்த விதண்டாவாதங்களை நம்பி வீண் பொழுது போக்கவில்லை. வெளியில் உள்ளவர்கள் தான்— சற்று வெருட்சி அடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசதுரை அவர்களைப்பற்றிப் பலதரப்பட்ட வதந்திகளை உருவாக்கச் சிலர் முன்வந்துள்ளனர். மட்டக்களப்பில் செல்வாக்கற்ற சிறு கும்பல் ஒன்றுக்கு அவர்தான் தூபமிடுகிறார்— துணைபுரிகிறார் என்று பல விஷமிகள் கூறி வருகின்றனர்.

திருகோணமலையிலும் இத்தகைய செய்திகளுக்கு காலும், கையும்வைத்து உலவ விட்டுள்ளனர். திருமலையிலுள்ள இளைஞர் ஒருவரான திரு. வில்வராஜா என்பவர், திரு. இராசதுரை புதிய கட்சி அமைக்கும் நோக்குடன் திருமலை வந்திருந்தார் என்று குறிப்பிட்டதாக ஒரு அபாண்டமான புழுகை ஒரு தினசரிக்கு திருமலையிலுள்ள ஒருவர் கொடுத்துள்ளார்.

அப்பத்திரிகை அச்செய்தியை அப்படியே பிரசுரித்தது. இச்செய்தி எப்படி அனுப்பப்பட்டுள்ளது என்பது அப்பாக்குட்டி அம்மானுக்கு நன்கு தெரியவருகிறது.

திருமலையில் வீரகேசரி நிருபராகக் கடமை புரியும் ஒருவர்தான் யாழ்ப்பாணத்திலிருந்துவரும் ஒருதினசரிக்கும் நிருபராகவிருக்கிறார். 'வீரகேசரி' இன்று செல்லும் விசித்திரமான பாதையைப் பற்றி மக்கள் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளனர். ஆகவே அப்பத்திரிகையின் நிருபர் எத்தன்மையாளராக விருப்பார் என்பது சொல்லித் தெரியவேண்டுமென்பதில்லை.

திரு. இராசதுரையைப் பற்றிய செய்தியை திருமலை வீரகேசரி நிருபர்தான் திரித்து அனுப்பியிருக்கிறார், மற்றத்தினசரிக்கு.

அங்கோடி இங்கோடி யாருடைய ஆதரவும் கிடையாது போகவே, 'தமிழரசைக்குலைக்கிறேன், தவிடுபொடி யாக்கிறேன்' என்று யூ. என். பி. க் காரரிடம் உறுதி கூறி உதவிபெற்று தம்பட்டமுரசடிக்கும் தமுக்கொன்றை உலவவிடும் ஒரு மாஜிப்பிரமுகர் திருமலை சென்று திரு. வில்வராஜா போன்றோரைத் தம்வலைக்குள் இழுத்து விட முனைந்துள்ளாராம். இவருடைய முன்னாள் பிரதம சீடர் ஒருவர்தான் மட்டக்களப்பில் இன்று தமிழரசை எதிர்க்க மார்தட்டி முன்வந்துள்ளார். இவரும், இவர் குருநாதரும் இந்தநாள்வரை செய்த திருவிளையாடல்கள் யாவும் மட்டக்களப்பு மக்களுக்கு நன்கு தெரிந்தவைகளாகும். இவர்கள் செயற்பட முனைந்தால் மக்கள் என்ன பரிசு கொடுப்பார்கள் என்பது இவர்களுக்குத் தெரியாமலிராது.

### சிங்களப் பத்திரிகையில் சந்தி

22-7-62-ல் சந்தியில் வெளியான செய்தி சிங்களப் பத்திரிகை ஒன்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. முற்றிலும் சிங்களமயமான சிறிலங்கா ஸ்தானாதிபதி சங்கமய என்ற சிங்கள வகுப்புவாத சங்கத்தில் அங்கத்தவர்களாக இருந்து மானத்தைப் போக்கடிக்கும் தமிழர்கள் சிலரின் பட்டியலை வெளியிட்டிருந்தோம் அதே செய்திதான் மேற்படி சங்கத்தின் சிங்கள ஏடு சிங்களத்தில் வெளியிட்டுள்ளது. இதே செய்தியை சந்தியிலிருந்து மொழிபெயர்த்தளித்த கைங்கர்யத்தைச் செய்தவர், அதே செய்தியில் இடம்பெற்ற ஒரு "ஆயுதபாணி."

இந்தச் சங்கத்தில் சேரும் தமிழர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படுகின்றதாம். இந்தச் சங்கத்தில் சேர்ந்தமையினால் "தியாகி" ஒருவருக்கு இறக்குவானைத் தபால் நிலையத்திலிருந்து சாவகச்சேரிக்கு உடன் மாற்றம் கொடுக்கப்பட்டுள்ளதாம் என்ற செய்தி அம்மானுக்குக் கிடைத்துள்ளது.

ஒரே மொழி, ஒரே மதம், ஒரே இனம், இத்தகைய ஒருமைப்பாடு ஏற்பட்டால் ஒரு நாட்டில் எந்தவிதமான தொல்லையும் ஏற்படாதாம். ஆகவே இலங்கையில் வாழும் மக்கள் இம் மூன்று வகையிலும் இணையவேண்டும். ஒரே மொழி—சிங்களம்; ஒரே மதம்-பௌத்தம்; ஒரே இனம்—ஆரியசிங்கள இனம். இதுதான் இன்றுள்ள சிங்கள அரசியல்—மத வாதிகளின் கனவு. இக் கனவை நினைவாக்கவே, திரு. டி. எஸ். சேனநாயக்கா முதல் இன்றுள்ள சிறிமாவோ வரை திட்டம் திட்டி நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

அண்மையில் இரத்தினபுரியில் நடைபெற்ற 'சிங்களத்' தமிழ் விழாவில் பேசிய ஞானசிக தேரோ என்ற கமண்டலமேந்தி, மேற்படி கருத்தை வலியுறுத்தியுள்ளார் எனத் தெரிகிறது.

"இலங்கை ஒரு சிறு தீவு. ஒரே மொழிதான் ஆட்சி மொழியாக இருக்கமுடியும். இரண்டு மொழிகள் இங்குதவாது. தமிழர்கள் எல்லோரும் சிங்களம் படித்து, பௌத்தர்களாக மாறி விட்டால் ஐக்கிய இலங்கையை உருவாக்குவது மிகவும் எளிதாகிவிடும்." என்று அந்த தேரோ கூறினாராம்.

இச்கூட்டத்திற்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூட அழைக்கப்பட்டிருந்தார் எனத் தெரிகிறது.

ஞானசிக தேரோ ஒரு பச்சை வகுப்புவாதி என்பது தெரிந்திருந்தும், இதையே சாட்டாக வைத்து அரசாங்கத்திடம் சலுகைகளை எதிர்பார்க்கும் சில்லறைகள் சிலர் முயன்றுள்ள மானமற்ற செய்தி எட்டியுள்ளது. ஏதோ சுயஇச்சை நிறைவேற ஆசைகொண்ட பட்டதாரி ஆசிரியர் ஒருவரும், ஒரு குமாஸ்தா "ஐயா" ஒருவரும் இந்த தேரோவை "தமிழ் விழா"வில் கலந்து கொண்டு உரையாற்ற வழி சமைத்தனராம்.

ஐக்கிய இலங்கையை உருவாக்கும் பொருட்டு, இந்நாட்டில் வாழும் இந்து, இஸ்லாமிய, கிருஸ்துவ மக்களையும்; சிங்களமல்லாத மொழி பேசுவோரையும் ஆசை காட்டி தம் இச்சை வலைக்குள் வீழ்த்திவிட ஆட்சியாளர்கள் தங்களாலியன்றவற்றைச் செய்து வருகின்றனர்.

பட்டம், பதவி, பணம் இத்தகைய ஆசை கொண்டோருக்கு, வேண்டிய சலுகைகளைக்கொடுத்து விலைக்கு வாங்கி வலைக்குள் சிக்கவைக்கிறது. பேராசை கொண்ட பேயர்களும் மதிமயங்கி இசைவு தருகின்றனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினர் என்று தம்மைத் தாமே தாழ்த்திக் கொள்ளும் சிலருக்கு அந்தஸ்து ஆசையைக் காட்டி மத மாற்றம் செய்துவிட முயற்சிகள் நடைபெறுகின்றன. சம அந்தஸ்து கிடைத்துவிடுமே என்று அங்கலாய்க்கும் அப்பாவி மக்களுக்கு இம் மத மாற்றத்துக்குள் புகுந்துள்ள மூடுமந்திரம் தெரியாது.

"காற்றுள்ள போதே தூற்ற வேண்டும்" என்ற முதுமொழிக்கு அர்த்தத்தைத்தெரிந்த பெரும் பூதம் ஒன்று இந்த மத மாற்ற வைபவத்தினால் பெரியதொரு "தொகை"யை ஆளும் கட்சியிடமிருந்து அபகரிக்கத் திட்டமிட்டுள்ளது. இப் பூதம் தேர்தல் காலங்களில் தீங்குகள் பலவற்றைப் புரிவதன் மூலம், முக்கியமாக — தீண்டாமை எனும் தீயை வேண்டுமென்றே மூட்டுவதன் மூலம் பொருள் தேடிவருவது மக்களுக்கு நன்றாகத் தெரிந்த விடயமாகும். மந்திரிமாரோடும், தலைமைக் காரியாலயங்களோடும் நெருங்கிய தொடர்புடையதாகக் கூறிக்கொண்டு, பொதுமக்களினதும், பல சங்கங்களினதும் பெரும் பகுதிச் சேர்வுப்பணங்களிலும் காலாட்சேபம் நடத்திவருகிறது இந்தப் பூதம்.

இப்போ மதமாற்றம் செய்து தனது பெருத்த வுடலுக்கு மேலும் பொலிவைத் தேட ஆசைப்பட்டுள்ளது. இப் பூதத்தின் பொல்லாச் செயல்கள் சமூகத்திலிருந்து ஒழிக்கப்பட்டாலொழிய சிறுபான்மையினருக்கு விடுதலையோ நிம்மதியோ ஏற்படப் போவதில்லை என்பதன் உண்மை இனிமேல்தான் தெரியவரும்.

# வில்வராஜ் மறுப்பு

திருமலையிலிருந்து திரு. வில்வராஜ் சுதந்திரனுக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகளைக் கீழே தருகிறோம்.

"விஷமத்தனமான அறிக்கைகளை வெளியிட்டு மனித சமுதாயத்தோடு நெருப்பு விளையாட்டு ஆடும் வித்துவக் குஞ்சுகளின் குறளி வித்தைகளை இப்போது எங்கும் 'கலரி' விலையில் பார்க்கலாம். வீரகேசரிக்கு வீண் செய்திகளை எழுதும் குருநாதனும் துப்பாக்கி கண்டு துடித்தோடிய சோமன் ஆகிய இருவரும்தான் மட்டக்களப்புபிரதிநிதி திரு.இராசதுரையைப்பற்றி நான் கூறியதாகப் பொய்யான செய்திகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளனர் என்பதுபுலனாகிறது. தவிர எங்களிடமுள்ள இயக்கம் ஒரு அரசியற் கட்சியல்ல. அதற்கும் மட்டக்களப்பில் தோன்றிய எந்த ஒரு இயக்கத்துக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது. என்னுடைய கருத்தை தெரிந்து கொள்ளாமலே என் பெயரை இழுத்து விஷமத்தனமான செய்திகளைப் பத்திரிகையில் பிரசுரிக்க எவர் முனைந்தார்களோ அவர்கள் பொய்யர்கள், புரட்டர்கள், பகிடிக்காகவும், பொழுது போக்காகவும்-கொண்ட கொள்கைகளைக் குலைப்பவர்கள்.

21. 9. 62ல் வெளியான 'வீரகேசரி' சற்றும் உண்மையற்ற பொய்யினை வெளியிட்டுள்ளது கண்டு வேதனை அடைந்தேன். மட்டக்களப்பில் தன்னலங்கருதி சில தான்தோன்றிகள் கூடி ஆரம்பித்த [illegible] பாதுகாப்பு முன்னணிக்கும், எங்கள் ஸ்தாபனமான கிழக்கிலங்கை அபிவிருத்தி முன்னணிக்கும் எதுவிதமான சம்பந்தமும் கிடையாது. மட்டக்களப்பில் மேற்படி இயக்கம் ஆரம்பமாகுமுன்னமேயே எங்கள் இயக்கம் ஆரம்பமாகிவிட்டது. எவ்வளவோ நாட்களுக்குப் பிறகு இங்கு வந்த மட்டக்களப்பு பிரதிநிதியை நான் கண்டதுமில்லை. இயக்க சம்பந்தமாக எதுவும்பேசியதுமில்லை. இப்படியிருக்க பொய்யும், புரட்டும் நிறைந்த செய்தியை வெளியிட உதவியவர் வீரகேசரியின் திருமலை நிருபர்தான் என்பதை அறுதியிட்டுக்கூறுகிறேன்.

வீணான வதந்திகளை மக்களுக்கு அளிக்கும் விஷமக்காரர்கள் சமுதாயத்திலிருந்து ஒழிக்கப்படவேண்டியவர்கள்.

தா. சி. வில்வராஜ்
திருக்கோணமலை,
23.9.62.




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி

கொழும்பு-14.

டெலிபோன் : 2739

ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் அச்சு வேலைகள் எவையாக இருந்தாலும் சரி— அவை கவர்ச்சிகரமாகவும் உங்களுக்குத் திருப்தி அளிக்கும் முறையிலும் செய்து தரப்படும்.

பாடப் புத்தகங்கள், மலர் வெளியீடுகள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், அழைப்பிதழ்கள், வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய சகல வேலைகள் யாவும் கச்சிதமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு இதே அதற்கு உரிய இடம்:

சுதந்திரன் அச்சகம்,

தபால் பெட்டி 1183.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த,

கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் போன் : 3411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார மமதையில் நீர் செய்த அநியாயம் கொஞ்ச நஞ்சமா?

## பட்டினிபோட்டுப் பணியவைக்க முயன்றீர் அதுவும் பலிக்கவில்லையே!

## மாஜி நிதி மந்திரி திரு. பீலிக்சுக்கு அறிவழகன் கடிதம்

மாஜி நிதிமந்திரி அவர்களே.

கனம்போய் மாஜி வந்துவிட்டகாரணத்தினால் உமது அதிகாரம் (வெளிக்கு) குறைந்திருக்கலாம். ஆனால் ஆளும் கட்சியில் இருக்கும் வரை நீர் ஆபத்தானவர்தான். உமது பதவியிறக்கம் பல்லையிளித்த சில பச்சோந்தித் தமிழருக்கு நல்ல பாடமாயிருக்கும். உமது ஆசை வார்த்தைகளில் ஆழ்ந்து இனத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பாக மாறியவர்கள் நன்றாய் ஏமாந்தார்கள். புதிய நிதிமந்திரியைக் காச்காய் பிடித்துக் காரியம் பெறும் வரை அரசாங்கத்திலே இன்னும் பல மாறுதல்கள் ஏற்படாமலா இருக்கப்போகிறது" எதுதான் உலகில் நிச்சயம்? நீர்கூட இப்படி ராஜிநாமா செய்யவேண்டிவரும் என்று கனவுகூடக்கண்டிருப்பீரா?

'காயமே இது பொய்யடா காற்றடைத்த பையடா' எத்துணை உண்மையான கூற்று? இதை மறந்து, வாழ்கின்ற அற்பகாலத்திலாவது மற்றவர்களுக்கு நல்லவர்களாக வாழாமல் எத்தனை அநீதிகளைச் செய்கிறோம்! நீர்கூட இந்த நிலையற்ற பதவியிலிருக்கும்வரை எவ்வளவு அமர்க்களம் புரிந்தீர்? ராஜிநாமாச் செய்துவிட்டீர் என்ற சேதிகேட்டு எத்தனை ஆயிரம் ஆறுதல் பெருமூச்சுக்கள் புறப்பட்டன?

நல்லவனாக நடந்திருந்தால் அநுதாபமாவது மிகுந்திருக்காதா? எங்களுடைய வயிற்றெரிச்சலைத்தான் வாரிக் கட்டிக்கொண்டிருப்பீர். உமது வகுப்பு வெறி ஆதரவாளர்கள் கூட அல்லவா சமயத்தில் காலைவாரி விட்டார்கள்? இவர்களைத் திருப்திப்படுத்த எத்தனை லட்சம் செலவில் இராணுவம் அனுப்பப்பட்டது, தமிழரை அடக்கி ஒடுக்க? அதற்கு ஈடாக இந்த அரைக்கொத்து அரிசியைத் தியாகம் செய்து பணத்தை மிச்சப்படுத்தித் தரக்கூடாதா இவர்கள்? ஓகோ! நீர்தான் தமிழ்த் தலைவர்களுக்கு நன்றி கொன்றவராயிற்றே! மற்றவர்களிடம் எப்படி நன்றியை எதிர்பார்க்கலாம்?

உமது மாமியார்கூடத் தமது குழந்தைகள் அதிகச் சாக்லேட் கேட்டால் கையை விரிக்கிறாராம். அப்படி இந்தப் பாழும் ஏழைகள் ஒருவேளை உணவைக் குறைத்தாலென்ன? ஒருவேளை மட்டுமே உண்ணவசதியிருப்பவர்கள்கூட அதிலும் சிறிதைக் குறைக்கக் கூடாதா? அடுத்தவேளை உணவு கேட்கும் குழந்தைகளை அடித்து அடக்கக் கூடாதா? ரொட்டி (Bread) விலையேறிற்று. கோதுமை விலை ஏறிற்று, இதனால் இறந்தா போனார்கள் ஏழைகள்? மண்ணெண்ணை விலை ஏறிற்று, தீப்பெட்டி விலை ஏறிற்று, வீடுகளிலே விளக்கேற்றாமலா விட்டு விட்டார்கள்? பட்டு மட்டுமல்ல, சாதாரணப் பருத்தியும்தான் தலைகரணமாய் விலையேறிவிட்டது. வசதிகுறைந்தவர்கள் நிர்வாணமாகவா திரிகிறார்கள்? இந்த அரைக்கொத்து அரிசிக்கு மட்டும் ஏன் இத்தனை அமர்க்களம்? ஆர்ப்பாட்டம்? ஏழைகளன்றோ நாட்டின் முதுகெலும்பு? அவர்களன்றோ நாட்டின் நன்மைக்காக வரிச்சுமையை வாய்பேசாது சுமக்கவேண்டும்? இல்லையா?

போகட்டும், உம்மைத் தமிழ்பேசும்மக்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். உமது ஒவ்வொரு சொல்லும் செயலும் உறங்கிக் கிடந்த எமது சமுதாயத்தின் வீர உணர்ச்சியைத் தட்டியெழுப்பியது. சென்ற வருடம் அதிகார மமதையினால் நீர் செய்த அநியாயம் தான் கொஞ்சமா? பட்டினி போட்டுப் பணியவைக்க முயன்றீர். பலிக்கவில்லை. நிராயுதபாணிகளைத் துப்பாக்கிப் பிரயோகம் செய்து

### அறிவழகன்

அப்புறப் படுத்திவிட்டு வெற்றியென எக்காளமிட்டீர். இதில் வெற்றி எங்கேயிருக்கிறது? இப்படியொரு செயலை நாம் அவமானகரமானதாகவே கருதுவோம். சமபலமுடையவனுடன் சமர் புரிவதுதான் வீரம், அங்கே காண்பதுதான் வெற்றி.

உமது கட்டளையின் பேரில் இராணுவம் செய்த அட்டகாசம்தான் கொஞ்சமா? யுத்தகாலத்திலே அந்நிய படை, கைப்பற்றப்பட்ட நாடுகளிலே நடந்து கொள்ளும் விதம்பற்றி எழுத்திலே அறிந்தோம். அதைச் சென்ற வருடம் கண்ணால் கண்டோம். இந்த நாட்டு இராணுவம் இந்த நாட்டு மக்களையே கொல்வதற்கும், இழிவுபடுத்துவதற்கும் உபயோகிக்கப்பட்டது மெச்சத்தக்கது! அதுவும் ஒரு பெண் பிரதமர் ஆட்சியிலே பெண்கள் இராணுவத்தினரால் அவமதித்து அவஸ்தைப் படுத்தப்பட்டது பொன்னேட்டிலே பொறிக்கப்படவேண்டியதாகும்! இப்படியெல்லாம் இனிமேல் நாம் போராடமாட்டோம், பயந்துவிடுவோம் என்று எண்ணிச் செயலாற்றியிருந்தால் நீர் ஏமாந்துதான் போனீர். இந்த அநீதிகளெல்லாம் எமக்கு எதை எடுத்துரைத்தன? ஒற்றையாட்சியின் கொடுமையையும், அதிகாரம் கையிலிருக்கும் பெரும்பான்மையோர் சிறுபான்மையினரை எப்படியெல்லாம் சிறுமைப்படுத்திச் சீரழிக்கலாம் என்பதையும், இதுவரை உணரமறுத்த சிலருக்குக்கூட உணர்த்திவிட்டது. எமது இயக்கத்தைப் பலவீனப் படுத்துவதற்குப் பதில் பலமடையச் செய்து விட்டீர். நன்றி.

இவ்வளவு செய்தபின்பும் ஒற்றுமை என்கிறீரே, கேலியாகக் கூறுகிறீரா அல்லது கூறுவதின் பொருளுணர்ந்து கூறுகிறீரா?

எமக்கு ஒற்றுமை பற்றி உபதேசிக்கும் குட்டி மந்திரியே! அந்தப் பாடத்தைச் சிங்களவர்களுக்கும் போதியுங்கள். சிங்களவருக்கிடையேதான் எத்தனை பிரிவுகள்? கத்தோலிக்கர் என்றொரு பகுதியினரை ஒதுக்கி விட்டீர்கள், கண்டிச் சிங்களவர் கரை நாட்டுச் சிங்களவர் என்ற பேதம் வேறு! உங்கள் கட்சிக்குள்ளே தான் எத்தனை குட்டிக்கட்சிகள்? மந்திரி சபைமட்டும் என்ன வாழுகிறதாம்? உங்களுக்குள்ளே உள்ள குத்து வெட்டின் விளைவுதானே உமது ராஜிநாமா? நீங்கள்தானா எமக்கு ஒற்றுமை உபதேசம் பண்ணுவது?

கட்சிக்குள்ளே குத்து வெட்டு. மந்திரி சபை ஒற்றுமை கலகலத்துவிட்டது. காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் இறுதிக் காலத்திலே மந்திரிசபையும் கட்சியும் எந்த நிலையிலிருந்தனவோ அதேநிலை இன்று வந்துள்ளது. இது எதைக் காட்டுகிறது? 1958க் கலவரத்திற்குக் காரணமானவர் காலஞ் சென்ற பிரதமரே. கலவரத்தை அடக்கவும் அவர் சீக்கிரம் தகுந்த முயற்சியெடாது அசிரத்தையாக இருந்தார். அடுத்த வருடம் பலன் கிட்டியது.

சென்ற வருடம் இராணுவத்தினால் கொடுமைப்படுத்தப்பட்ட கன்னியரின் கண்ணீரும், பெண்களின் பெருமூச்சும் இன்று உமது மாமியாரின் ஆட்சி பீடத்தைச் சூழ்ந்துள்ளது. இதற்கு அவர் பதில் சொல்லியேயாகவேண்டும். எங்கள் வயிற்றெரிச்சலைச் சம்பாதித்தவர் வாழ்ந்ததில்லை. உமது கதையும் அவர்கள் பட்டியலிலே சேர்ந்துவிட்டது.

இந்தக் கடிதத்தை நீர் படிப்பதற்கு முன்பேகூட உமக்கு மற்றுமொரு மந்திரிப் பதவி கிடைக்கலாம், அதற்கு மேலும் அதிகாரம் கிடைக்கலாம். முன்னைவிட அதிக கோபத்துடன் எம்மை நீர் தாக்கலாம். ஆனால் அநீதி செய்த மன்னாதி மன்னர்களெல்லாம் மண்ணோடு மண்ணானதை எண்ணிப் பார்க்கும்போது நீர் ஒரு பொருட்டா? பிரெஞ்சுப் புரட்சியின் போது பட்டினிப் பிணிகொண்ட மக்களின் கையில் மன்னன் லூயி கதி யென்னாயிற்று? அவனது சந்ததியினர் என்று கூறிக் கொள்ள ஒருவர் இல்லாது போன கதை, கற்பனையுமல்ல. கட்டுக்கதையுமல்ல. உண்மையான சரித்திரம்.

அவன் மாடமாளிகையிலே ஆள் அடுக்குடன் அதிகார மிடுக்குடன் அட்டகாசமாக வாழவில்லையா? பின் அவன் சாதாரண மக்கள் கையிலே மரணத்தைத் தழுவியதேன்? இதன் காரணத்தை மனதில் என்றும் பதித்துவைத்தால் உமக்கும் உம்மைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை பயக்கும். உமக்கு இப்போ அதிக ஓய்வு இருக்குமே? அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அநியாயமாக அழித்தவர்கள் கதையையெல்லாம் படித்துப்பாருமய்யா.

(13-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் பணியே இறைவன் பணியென கடமை புரிந்தவர் திரு. வன்னியசிங்கம்

### அமரரின் பிறந்தகத்தில் நடைபெற்ற விழாவில் கோப்பாய் பிரதிநிதி திரு. மு. பாலசுந்தரம்

மக்கள் என்னும் தெய்வத்தையே இறைவனாகக் கொண்டவர் திரு. வன்னியசிங்கம். மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலம், மக்களை வாழச் செய்வதன் மூலம் இறைவனுக்குப் பணி புரியலாம் என்ற எண்ணங் கொண்டவர் மறைந்த தலைவர் வன்னியசிங்கம்.

இவ்வாறு அண்ணல் வன்னியசிங்கம் பிறந்த இடமான கொல்லங்கலட்டியில், அவ்வூர் சனசமூக நிலைய ஆதரவில், கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்ற அமரர் நினைவு விழாவில் உரை நிகழ்த்துகையில், கோப்பாய்ப் பிரதிநிதி திரு. மு. பாலசுந்தரம் குறிப்பிட்டார். திரு. சரவணமுத்து அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

திரு. பாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில், குறிப்பிட்டதாவது: கடமையே கண்ணாக வாழ்ந்த வன்னியசிங்கம் இயற்கையாகவே மக்கள் உள்ளங்களை அறிந்துகொள்ளும் ஆற்றல் உடையவராக இருந்தார். நமது நாட்டில் வாழ்ந்த பல பெரியார்கள் சில துறைகளிலேயே உழைத்தார்கள். ஆனால் வன்னியசிங்கம் அவர்கள் எல்லாத் துறைகளிலும் உழைத்து மக்களுக்குச் செய்யும் பணியை இறைவனுக்குச் செய்யும் பணியாக்கிக் கொண்டார்.

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம், தமது உரையில் கூறியதாவது:

அண்ணல் வன்னியசிங்கம் நம் மத்தியில் இல்லாத போதும், அவரது ஆலோசனையையே கடந்த சத்தியாக்கிரகத்தின் போதும் கடைப்பிடித்தோம். நாம் தமிழில் தபால் சேவையை ஆரம்பிக்க முன்னோடியாக இருந்தவர் அமரர் வன்னியசிங்கமே. இதனை 1957-ம் ஆண்டே தயாரித்து அதற்கு வேண்டிய ஒழுங்குகளையும் அவர் செய்திருந்தார்.

திருமதி மங்கயற்கரசி அமிர்தலிங்கம் பேசியதாவது:

தீண்டாமை ஒழிப்பில் நமக்கெல்லாம் முன்னோடியாக நின்று முழு மூச்சுடன் உழைத்த பெருந்தகை அமரர் வன்னியசிங்கம். நாம், நமது போராட்டத்தில் வெற்றி அடைவதாயின் முதலில் நம் மத்தியில் உள்ள சாதிப் பிளவுகளை ஒழித்து ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் உழைத்தவர் நமது தலைவர் வன்னியசிங்கம்.

திரு. மு. சிவசிதம்பரம் எம். பி., திரு. எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி. ஆகியோரும் பேசினர்.

தெல்லிப்பழை, மயிலிட்டி ஆகிய இரு கிராம சபைத் தலைவர்களும் விழா இறுதியில் பொது மக்களுக்கு விடுத்த உருக்கமான வேண்டுகோளில் குறிப்பிட்டதாவது:

வன்னியசிங்கத்திற்கு விழா எடுப்பதனால் பலனில்லை. அவரது இலட்சியங்களை, செயல்களை நாமும் கடைப் பிடிக்க வேண்டும். மாவிட்டபுரம், கொல்லங்கலட்டிப் பகுதியில் உள்ள உயர் சாதியினராகிய நீங்கள், அடுத்த வன்னியசிங்கம் நினைவு விழாவிற்கு முன்னர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுக்குள் சிறுபான்மையினர் நுழைய மனப்பூர்வமாக அனுமதிக்க வேண்டும். இதுவே நீங்கள், உண்மையில் மறைந்த தலைவன் மீது உங்களுக்குள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்த, செய்ய வேண்டிய முதல் வேலை. அதுவே நீங்கள் அன்னாருக்குச் செய்யும் [illegible] படும்.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஒக்டோபர் மாதம் 7-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1163

# விபரீதம் வேண்டாம்!

வட இலங்கையில் "தாழ்த்தப்பட்டவர்கள்" என்பவர்களிற் சிலர் பௌத்த சமயத்தைத் தழுவப் போவதாக ஒரு செய்தி.

இதற்கான ஏற்பாடுகளைச் செய்தது சிறுபான்மைத் தமிழர் மகாசபை. தீண்டாமையையும் வேலையின்மையையும் ஒழிப்பது தானும் இம் மத மாற்றத்தின் நோக்கம்.

தான் விரும்பும் மதத்தில் சேர்ந்து கொள்ள எந்த நபருக்கும் உரிமை உண்டு. இது தனிப்பட்டவரின் சுதந்திரம். இதில் தலையிடுவது ஜனநாயக பண்பன்று. இந்த மத மாற்றமோ அதற்கு முற்றிலும் மாறுனது. ஆத்மீக காரணங்களுக்காக மதம் மாறினல் அதில் ஓரளவு ஏது உண்டு.

இவர்கள் பௌத்தத்தைத் தழுவுதல் அதன் மீது கொண்ட நம்பிக்கையாலன்று — வேறு காரணங்களுக்காக! மத மாற்றம் நடைபெறுவதும் கூட்டம் கூட்டமாக — தனிப்பட்ட முறையிலுமல்ல. இது ஒரு சதி என்பதற்கு இதை விட வேறு என்ன காரணம் வேண்டும்?

தீண்டாமையை ஒழிக்க மதம் மாறுகிறுர்களாம். தீண்டாமையின் அடிப்படை மதந்தானு? தீண்டாமையை எந்த மதம் ஆதரிக்கிறது? எந்த மதம் எதிர்க்கிறது? ஆதரிக்கும் மதத்திலிருந்து எதிர்க்கும் மதத்துக்குப் பாய்ச்சலா? கேலிக்கூத்து!

எந்தச் சமயமும் தீண்டாமையை ஆதரிக்கவில்லை. ஆண்டவன் முன்னிலையில் அனைவரும் சமம். தீண்டாமையை எதிர்ப்பதில் பௌத்தத்துக்குப் பின்தங்கியதல்ல இந்து சமயம். கண்ணப்பரும், நந்தனும் ஆண்டவனின் அருளைப் பெறவில்லையா?

உயர்சாதி என்போரின் மனதில் தான் தீண்டாமை இருக்கிறது. சாதி பாகுபாடு ஒழிய மனமாற்றம் வேண்டும். சமுதாயக் கட்டுக்கோப்பு மாறவேண்டும். ஒரு சாராரை ஒதுக்கும் தீயபழக்கம் ஒழிய வேண்டும். எல்லோரும் ஒரு சாதி என்ற பண்பு வளர வேண்டும்.

இதனை எப்படிச் செய்வது? ஒரு மதத்திலிருந்து மற்றென்றுக்குத் தாவினுல் சாதி ஒழிந்து விடுமா? அப்படிக் கூறுபவர்கள் எத்தர்கள் — பாமர மக்களை ஏமாற்றும் சுயநலமிகள்.

**தீண்டாமை ஒழிக்க ஒரு சமுதாயச் சீர்திருத்தப் புரட்சி வேண்டும். அது ஏற்கனவே தொடங்கி விட்டது. தமிழரசுக் கட்சி அப் புரட்சியின் முன்னணி தாங்குகிறது. அதனை முழு வேகத்தில் நடத்தினுல் தீண்டாமைக்குச் சாவுமணி அடிக்கலாம். இப்பணியை நிறை வேற்ற அனைவரும் கட்சிக்குப் பேராதரவு அளித்தல் வேண்டும்.**

பௌத்தம் தீண்டாமையை ஆதரிக்கவில்லைத்தான். ஆனல் சிங்கள பௌத்தர்களோ அதற்கு விதி விலக்கு, அவர்களிடையே எத்தனையோ சாதிகள், பாகுபாடுகள், உயர்வு தாழ்வுகள்—ஏன், தீண்டாமையும் உண்டு. ரொடியர்கள் என்னும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவர்கள் இழைக்கும் அநீதிகள் கொஞ்சமா?

பௌத்தர்களாகும் தமிழர்களுக்கு ரொடியர்களின் கதி ஏற்படாதென்று எப்படிக் கூற முடியும்? மதம்மாறிவிட்டதால் அவர்களின் சமுதாய நிலை உயர்ந்துவிடுமா? அவர்களுக்குச் சிங்களவர்களில் "கொவிகம" சாதிக்குள்ள அந்தஸ்தும் கிடைக்குமா?

பௌத்தர்களானுலும் தீண்டாமைப் பிரச்சினை தீராது. அங்கும் அவர்களுக்குக் கிடைப்பது ரொடியரைப் போன்ற இழி நிலைதான். அதன் பின் அவர்கள் வேறு எந்த மதத்துக்குப் போவது?

வேலையின்மையைப் போக்கவும் பௌத்தம் உதவுமாம். இது மற்றுமொரு பித்தலாட்டப் பிரசாரம். தென்னிலங்கையிலே இலட்சக்கணக்கான பௌத்தச் சிங்களவர்களுக்கே வேலையில்லை. இந் நிலையில் பௌத்தத் தமிழர்களுக்கு எங்கே, எப்படி வேலை கிடைக்கும்?

பௌத்தத்தைத் தழுவினுல் சாதி ஒழியும், வேலை கிடைக்கும் என்பதெல்லாம் ஆசை வார்த்தைகள். அப்பாவி மக்களை ஏமாற்றும் முயற்சி. எத்தர்களைக் கொழுக்க வைக்கும் வழி.

**இஃது ஒரு பலாத்கார மதமாற்றம், அரசியல் மத மாற்றம், இன ஒழிப்பு மதமாற்றம், தமிழ் மொழியை அழிக்கும் மதமாற்றம், ஓர் இயக்கத்தை நசுக்கும் மதமாற்றம், உரிமைப் போருக்கு உலை வைக்கும் மதமாற்றம். புத்தபகவான் இன்று உயிருடனிருந்தால் இத்தகைய மதமாற்றத்தை எதிர்த்தேயிருப்பார்.**

இம் மதமாற்றம் பௌத்தத்தோடு மட்டும் போகாது. அத்துடன் சிங்களமும் நுழைந்து விடும். இதனுல் தீண்டாமையா அழியும்? இனமும் மொழியுந் தான் அழியும்.

கொம்யூனிஸ்ட் கட்சி உத்தரவால் சி. த. மகாசபையின் முடிவு மாறி விட்டதாம். மத மாற்றம் இப்பொழுது இல்லையாம். ஆனல் மதமாற்ற முயற்சி அடியோடு கைவிடப்படவில்லை.

எனவே சிறுபான்மைத் தமிழ்ச் சகோதரர்கள் மத மாற்றும் மாயாசாலங்களில் சிக்கக் கூடாது, — தமிழ் மண்ணிலிருந்து தீண்டாமையைத் துடைத்தெறியும் முயற்சியில் முன்னணியில் நிற்க வேண்டும். இதுவே நமது வேண்டுகோள்.

# புதிய அமைப்பு விதிகள் அமுல்

## அங்கத்தவர்களுக்கு நிர்வாக செயலாளர் விடுக்கும் அறிக்கை

மன்னார் மாநாட்டின்பின்னர் தமிழரசுக்கட்சி, புதிய அமைப்புத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதில் செயற்பட்டு வருகிறது. ஏற்கனவே அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களும் கூட மீண்டுமொருமுறை புதிய விண்ணபபப்பத்திரத்தை நிரப்பி அங்கத்துவத்தைப் புதிப்பித்துக் கொள்ளும்படி கோரப்படுகிறுர்கள். புதிதாகச் சேர விரும்புபவர்கள் அந்தந்தத்தொகுதி தமிழரசுக் கட்சிப்பாராளுமன்றஉறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

தமிழரசுக்கட்சி நிர்வாகச் செயலாளர் மேற்கண்ட அறிக்கையை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:-

புதிய அமைப்பு விதிகளுக்கமைய தமிழரசுக் கட்சியில் அங்கம் வகிப்பவர்கள் இரண்டு பிரிவுகளில் விரும்பிய ஒருபகுதியில் சேரலாம். இயங்கும் அங்கத்தவர், சாதாரண அங்கத்தவர் என்று இரு பிரிவுகள் உள. இயங்கும் அங்கத்தவராகச் சேர விரும்புபவர்கள் வருடம் ஒன்றுக்கு ரூ. 10-00 சந்தாப்பணமாகக் கட்டவேண்டும். தவணைகளிலும் செலுத்தலாம். மாதமொருமுறை சந்தாச் செலுத்துவதானுல் மாதமொன்றுக்கு ரூ. 1-00 வீதம் செலுத்த வேண்டும்.

அத்துடன் இயங்கும் அங்கத்தவர்கள் ஒரு வாரத்துக்கு குறைந்தது மூன்று மணி நேரமாவது கட்சிக்கு ஊழியம் செய்ய வேண்டும். அல்லது மத்திய செயற்குழுவினுல் கட்சியின் நிதிக்கெனக் குறிக்கப்படும் தொகையைச் செலுத்த வேண்டும். குறிப்பிட்ட நிதியோடு ஊழியம் செய்தும் இயங்கும் அங்கத்தவராகலாம்.

18 வயதுக்கு மேற்பட்ட இலங்கைத் தமிழ் பேசும் மக்களில் எவரும் சாதாரண உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ளலாம். வருடமொன்றுக்கு ரூ. 2-00 அல்லது அரை வருடத்துக்கு ரூ. 1-00 செலுத்தியோ அங்கத்தவராகச் சேரலாம்.

அங்கத்தவராகச் சேருபவர்கள் கட்சியின் விதிகளையும், நோக்கத்தையும், அடிப்படைக் கொள்கைகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழரசுக்கட்சியில் அங்கம் வகிக்க விருப்பமுடையவர்கள் தங்கள் தொகுதி தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லாத இடங்களில் கீழ்காணப்படுபவர்களுடன் தொடர்பு கொள்ளலாம்:-

வவுனியா :
திரு. ச. சுப்பிரமணியம்,
பட்டினசபைத் தலைவர்,
வவுனியா.

யாழ்ப்பாணம் :
திரு. சி. கதிரவேலுப் பிள்ளை,
25, 2-ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

உடுப்பிட்டி :
திரு. நா. செல்லையா,
துன்னாலை,
கரவெட்டி.

கல்முனை :
ஜனுப் எம்.மசூர் மௌலானு
117, மீரானியா தெரு,
கொழும்பு-12.

நிந்தவூர்—பொத்துவில் :
திரு. ஆர். டபிள்யூ. வி
அரியநாயகம்,
திருக்கோயில்.

மலைநாடு உட்பட
ஏனைய பகுதிகள் :
நிர்வாகச் செயலாளர்,
இ. த. அ. கட்சி,
16, அல்பிரட் ஹவுஸ்
கார்டின்ஸ்,
கொழும்பு-3.

# சிறிமா அரசாங்கம்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்துள்ளது. இச் சதி வழக்கு விஷயத்தில் திரு. பீலிக்ஸ் முன்னணியில் நின்று பாடுபட்டதால், சதி வழக்கில் எதிரி தரப்பின் பூர்வாங்க ஆட்சேபனையொன்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது திரு. பீலிக்ஸுக்குக் கிடைத்த ஒரு பெரிய அரசியற் தோல்வி என்று திரு. சி. பி. டி. சில்வா கோஷ்டி கருதுகிறதாம்.

### மற்றெரு தலையிடி

ஆனல் சதி வழக்கு சம்பந்தமாக அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என்ன? இதில் வேறு சங்கடங்கள் ஏற்பட்டுள்ளன. சதி சம்பந்தப்பட்ட சட்டம் திருத்த வேண்டிய நிலையும் ஏற்படலாம். அந்நிலை ஏற்பட்டால் திரு. பீலிக்ஸ் தனது தோல்வியை ஏற்றுக் கொண்டதாக முடியும். அப்படியானுல் பீலிக்ஸ் கோஷ்டி அத்தகைய சட்டத் திருத்தத்தை ஆதரிக்குமா என்பது மற்றெரு கேள்வி.

இதற்கிடையே இந்த அவசரகாலச் சட்டமே சட்ட விரோதமென வழக்கறிஞர்கள் நீதி மன்றத்தில் வாதித்து வெற்றி பெற்றுவிட்டால் அரசாங்கத்தின் நிலைமை தர்மசங்கடமாகி அதன் வீழ்ச்சி துரிதமாகிவிடுமாம்.

### ஒத்திவைப்பு

வீழ்ச்சியிலிருந்து அரசாங்கத்தைப்பாதுகாப்பதற்காக மந்திரிசபையை மாற்றி அமைக்காதிருக்க முயற்சி செய்யலாம். அந்த நோக்கத்துடன்தான் மந்திரிசபை மாற்றம் ஒத்திப் போட்டுக் கொண்டுவரப்படுகிறது என்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

ஆனல் மந்திரிசபைமாற்றியமைப்பதைத் தொடர்ந்து ஒத்திப் போட முடியாத நிலைமையும் உருவாகியுள்ளது.

### மைத்ரீயை வெளியேற்ற......

திரு.சி.பி. டி சில்வாவுக்குபல இலாகாக்களின் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அம்மாதிரி அவர் நீண்ட காலம் கடமையாற்றிக் கொண்டிருக்கவும் முடியாது. ஒரு சில இலாகாக்களையாவது அவர் வேறு மந்திரி ஒரிருவரிடம் ஒப்படைத்துத்தானுக வேண்டும். அத்தோடு திரு. மைத்ரீபால சேனநாயகாவை எப்படியும் மந்திரி சபையிலிருந்து வெளியேற்றி விட வேண்டுமென்று ஒரு சக்தி வாய்ந்த ஒரு பௌத்த குழு நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இக் குழுவில் வகுப்புவாதக் கண்ணேட்டமுள்ள இரு பிரபல பிககுகளும் அங்கம் வகிக்கின்றனராம். அக் குழுவின் பத்திரிகை தான் "பௌத்த பெரமுனே" என்னும் வாரப் பத்திரிகை என்று கூறப்படுகிறது.

கடந்த சில வாரங்களாக இப் பத்திரிகை திரு. மைத்திரிபாலா மீது கண்டன மாரி பொழிந்து வருகிறதாம்.

இந்த நிர்ப்பந்தங்களைப் பார்க்கும் போது மந்திரி சபையை மாற்றியமைக்காமலிருக்க முடியாத நிலைமை உருவாகி வருகிறது.

ஆகவே மந்திரிசபை மாற்றியமைக்கப்பட்டாலும், மாற்றியமைக்கப்படாவிடினும் அரசாங்கம் வீழ்ச்சியடையலாம் என்பது அரசியல் அவதானிகளின் கருத்து.

### பட்ஜெட் பற்ருக் குறை

பட்ஜெட் பற்ருக் குறையை நிரப்புவதற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட எந்தத் திட்டமும் பூரணமாக அமுல் நடத்த முடியாதென்றும், இதனுல் பொருளாதார நெருக்கடி தீவிரமடையும் என்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது

எனவே இன்றைய நிலைமையில் பொதுத் தேர்தல் வெகு தூரத்தில் இல்லையென்று துணிந்து கூறலாம்.

# கொம்யூனிஸ்ட் உத்தரவால் மதமாற்றமில்லையாம்!

சிறுபான்மைத் தமிழர்கள் சிலரைப் புத்த மதத்தைத் தழுவச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை செய்தது. தீண்டாமையை ஒழிப்பதற்காகவும் வேலை வாய்ப்புகளைப் பெறுவதற்காகவுமே இந்த மதமாற்றம் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த மதமாற்றம் பற்றி கொழும்பு கம்யூனிஸ்ட் கட்சி வேறுவிதமாக முடிவு செய்தது

"மதமாற்றம் வேண்டாம். மனமாற்றம் தான் தேவை" என்று தலைமைக் காரியாலயம் சிறுபான்மைத் தமிழர் மகா சபைக்கு அறிவித்தது.

கொழும்பிலிருந்து உத்தரவு வந்ததும் சி. த. சபை தனது முடிவை மாற்றிக் கொண்டுவிட்டதென்றும், அடுத்த [illegible] சிறுபான்மைத் தமிழர்கள் பௌத்த சமயத்தைத் தழுவ மாட்டார்களென்றும் அறியப்படுகிறது.

இதிலிருந்து இரு விஷயங்கள் தெளிவாகின்றன:-

(1) சிறுபான்மை மக்களுக்குப் பௌத்த மதத்தைத் தழுவ எந்த அக்கறையும் இருக்கவில்லை, கம்யூனிஸ்ட் ஆதிக்கம் பெற்ற சி. த. மகா சபையின் நிர்ப்பந்தத்திற்காகவே அவர்கள் மத மாற்றம் செய்யப்படவிருந்தனர்.

(2) சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஒரு கம்யூனிஸ்ட் ஸ்தாபனமென்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுவிட்டது. மதத்தை மாற்ருதிருப்பதும் மதத்தை மாற்றுவதும் கம்யூனிஸ்ட் காரியாலயத்தின் முடிவுகளுக்கேற்ப இந்த மகாசபையில் அமுல் நடத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பாடசாலைகளைச் சிங்கள மயமாக்க வேண்டாம்

## கல்வி அமைச்சருக்கு ஆசிரியர்கள் கோரிக்கை

## இலங்கையில் தமிழர்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த்தலைவர்; இதனை நிராகரித்து ஐம்பதுக்கு ஐம்பது என்ற கோரிக்கையை விடுத்தார். சரியான தலைமையின்றித் தமிழர்கள் அரசியல் அந்தஸ்தைப் பெறப் பிந்திவிட்டனர். அப்படியிருந்தும் அவர்கள் இலங்கைச் சமுதாயம் ஒற்றுமையாக வாழவேண்டுமென்ற கொள்கையில் நம்பிக்கையுடன் இருந்தனர். அன்றேல் 1947-ல் சுதந்திரம் பெற்றபோது தமிழர்கள், சிங்கள-தமிழ் இராச்சியங்களைக் கொண்ட ஒற்றுமையான 'கூட்டாட்சி' அரசியல் அமைப்புக்காகப் போராடியிருக்கலாம். அல்லது அவர்கள் தங்கள் மொழிக்கும், பாராளுமன்றத்திலும், அரசசேவையிலும் விகிதாவிகித உறுப்புரிமைக்கும் அரசியல் அமைப்புரீதியான உறுதிகளுக்கும் நிர்ப்பந்தப் படுத்தியிருக்கலாம். அதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் சிங்களச் சகோதரர்களிடம் முழு நம்பிக்கை வைத்து, சுதந்திரக் கோரிக்கையில் சேர்ந்தும், கடைசியில் அதனால் கிடைத்த பலாபலன மிகவும் கசப்பானதாகவே அமைந்திருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

### வகுப்புவாதம் தலையெடுக்கிறது

1948-ல் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கம் செயல்படும் பொழுது, மந்திரிசபையில் தமிழர்களும் இடம் பெற்றிருந்தனர். திரு ஸ்ரீபின் சேனநாயக்காவின் மரணத்தின் பின்னும், சேர் ஜோன் கொத்தலாவலையின் தோல்விக்குப் பின்னும் வெற்றிபெற்ற அரசாங்கங்கள் இனவேற்றுமையை வளர்க்கும் கொள்கையைப் பரப்பின. காலம் சென்ற திரு. பண்டாரநாயக்கா ஐ. தே. கட்சியை விட்டு விலகி "ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி" என்ற தமது சொந்தக்கட்சியொன்றை ஆரம்பித்தார். ஒவ்வொருகட்சியும் அரசாங்கத்தைக் கைப்பற்றும் பொருட்டும், அரசியல் நோக்கத்திற்காகவும் தாங்கள் அரசாங்கத்தை அமைத்தால் "சிங்களம் மட்டும்" சட்டத்தை நிறைவேற்றுவதாகச் சிங்களத் தொகுதிகளில் வாக்குறுதி கொடுத்தனர். பௌத்த குருமார் அரசியலில் தீவிரமாகப் பங்குகொண்டனர். இதன் பலாபலனக இவ்வளவு காலமும் ஒரு அரச மொழியாகத் திகழ்ந்த "தமிழ்" மொழி ஒரேயடியாகத் தனது நிலையை இழந்து தமிழர்களும் இரண்டாந்தரப் பிரசைகளின் தரத்துக்குத் தாழ்த்தப்பட்டனர். தமிழ் மந்திரிகள் வேறு வழியின்றி மந்திரி சபையிலிருந்து விலகினர். அதன் பின் தனிச் சிங்கள மந்திரி சபை உணவு உற்பத்திப் போர்வையில் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தைத் தொடங்கினர். அடக்கு முறைச் சட்டத்திட்டங்கள் கல்வி முறையிலும், நிர்வாகத்துறைகளிலும் தொடர்ந்தன. இலங்கையர் மயத்துக்குப் பதிலாகத் தமிழர்கள் சிங்கள மயத்தால் பாதிக்கப்பட்டனர்

சமஷ்டிக் கட்சி உருவாகியதற்கு அடிப்படையாக அமைந்தது இவையே. சமஷ்டி அரசியலமைப்பு சிங்கள அரசாங்கத்திற்கு வெறுப்பாக இருந்ததால், அவர்களின் தலைவர்கள் கடுமையான சொற்பொழிவுகள் மூலம் சிங்கள மக்களைத் தூண்டி விட்டனர். இவையெல்லாம் 1958 வைகாசி மாத இனக் கலவரத்தை ஏற்படுத்தி, ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிங்களப் பிரதேசத்தை விட்டு இடம் பெயர்ந்தும், அவர்களில் நூற்றுக் கணக்கானோர் கொடுமைக்குள்ளாகியும், தமிழர்கள், அகதிகளாகக் கப்பல்கள் மூலம் தமிழ்ப் பகுதிகளுக்குக் கொண்டும் செல்லப்பட்டனர்.

### தமிழரின் ஏகோபித்த குரல்

சமஷ்டிக்கட்சி தமிழர்களின் ஏகோபித்த குரலாக வளர்ந்து இவ்வருடம் அகிம்சை முறையில் சத்தியாக்கிரகத்தை ஆரம்பித்தது. சிங்கள அரசு இவ்வியக்கத்தை அடக்கத் தனது முழுப்பலத்தையும் பிரயோகித்தது. தமிழ்த்தலைவர்களைக் கைது செய்து பத்திரிகைகளுக்கும் முற்ருகத் தணிக்கை விதித்தனர்.

ஒரு தேசிய சிறுபான்மையினரை அடக்குவதை, இம்சிப்பதை, கொடுமை செய்வதை, உள்நாட்டுப்பிரச்சினை என்று கூறமுடியுமா?

ஐக்கிய நாடுகள் சபை, தேசிய சிறுபான்மையினரின் நலன்களில் மிகவும் அக்கறை காட்டி, எங்காயினும் தேசிய சிறுபான்மையினர் நசுக்கப்படுவதைத் தடுப்பதற்கும், தங்கள் வாதங்களை உலக அரங்கில் முன்வைத்து உண்மையான நீதி பெறுவதற்கும் சாசனத்தில் வசதிகள் வகுக்க வேண்டும்.

## காருக்குறிச்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியிருந்தனர். இதனைக் கண்ட பிரதமர் தீயை மிதித்தவர் போல் துள்ளி உடனடியாகத் தன் மருமகன் பீலிக்சின் கட்டளைக்கு எதிராக 'விசா' கொடுக்க வேண்டாம் என்று உத்தரவு பிறப்பித்தாராம், பீலிக்ஸ் திணறிப் போய்விட்டாராம்.

இதைக்கேள்வியுற்ற விழா நடத்துபவர்கள் பல விதமுயற்சிகள் எடுத்து மிகச் சிரமப்பட்டு பிரதமரைச் சந்தித்து விசா கொடுத்துதவும் படி வேண்டினர்கள். ஆனல் பிரதமரோ காருகுறிச்சி முழுத் தி. மு. க.; அவர் தி. மு. க. கொள்கைகளைப் பரப்பவே இலங்கை வரப் பார்க்கிருர், நான் விடமாட் மாட்டேன் என்ருராம். அத்தோடு காருகுறிச்சி பெரிய பேச்சாளன் என்றும் அவர் தனது பேச்சுத் திறமையால் மக்களை வசியம் பண்ணி தி. மு. க. கொள்கைகளைப் பரப்பி விடுவார் என்றும் தெரிவித்தாராம்.

காருகுறிச்சி பேச்சாளன் அல்ல நாதசுர வித்துவான் என்று விளக்கப்படுத்தப்பட்டது. அதற்குப் பிரதமர் காருகுறிச்சி தி. மு. க. பாடல்களுக்கு மட்டுமே நாதசுரம் வாசிப்பார், என்னை ஏமாற்ற முடியாது, எனக்கு எல்லாம் தெரியும் என்று வாதாடினராம். மிகுந்த சிரமத்தின் பின்பு தான் பிரதமர் தாம் பிடித்த முயலுக்கு மூன்று காலல்ல, நாலுகால் என்று விளங்கிக் கொள்ள முடிந்ததாம்.

## கனகரத்தினம் காலமானர்

வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினராக விருந்தவரும், திரு. டி. எஸ். சேனநாயக்கா மந்திரி சபையில் உதவி கல்வி மந்திரியாக இருந்தவரும் முன்னள் ஆடிட்டர் ஜெனரலாக இருந்த திரு. கே. கனகரத்தினம் காலமான செய்தி அறிந்து வருந்துகிறேம்.

நீர்கொழும்புப் பகுதியில் இதுவரை காலமும் தமிழ் பாடசாலைகளாக இயங்கிவந்த எட்டுத் தமிழ் பாடசாலைகளையும் சிங்களப் பாடசாலைகளாக மாற்றிவிட கல்வி அமைச்சு செய்துள்ள முடிவு பெரும் அதிர்ச்சியையும், கவலையையும் கொடுத்துள்ளது. இந்தத் தீர்மானத்தைக் கைவிடுமாறு கல்வி அமைச்சரை வேண்டிக்கொள்ளுகிறேம். இவ்வாறு சப்பிரகமுவா தமிழ் ஆசிரிய சங்கம் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

நீர்கொழும்பு பகுதியில் இதுவரை காலம் தமிழ்ப் பாடசாலைகளாக இயங்கிவந்த 8 பாடசாலைகளை 1.1.63 முதல் சிங்களப் பாடசாலைகளாக மாற்றிவிடக் கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் முன்னக்கரை றேமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையைச் சிங்களப் பாடசாலையாக்கி விட அரசாங்கம் முயற்சித்த போது, ஆசிரிய சங்கங்களும், பெற்றேர் ஆசிரிய சங்கங்களும் திரண்டெழுந்து எதிர்த்தன. இந்த எதிர்ப்பின் பயனக அரசாங்கம் தனது தீர்மானத்தைக் கை விட்டுவிட்டது. மீண்டும் நீர்கொழும்புப் பகுதித் தமிழ்ப் பாடசாலைகளில் அரசாங்கம் கைவைக்க ஆரம்பித்துள்ளது.

அகில இலங்கை ஆசிரிய சங்கத்தின் கூட்டு நிர்வாக சபையின் கூட்டமொன்றில் முன்னக்கரைப் பாடசாலை சம்பந்தமாக அரசாங்கம் எடுத்த முயற்சியைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியதுடன் கல்வி அமைச்சரையும், மேலதிகாரிகளையும் சங்கத் தலைவர், பொதுக் காரியதரிசி, தனதிகாரி ஆகியோர் பேட்டிகண்டு மேற்படி பாடசாலை, தமிழ்ப் பாடசாலையாக இயங்க வேண்டுமென்பதற்கான காரியங்களை விளக்கியதன் பேரில் பாடசாலை மாற்றும் திட்டம் கைவிடப்பட்டிருந்தும் கூட, மீண்டும் சிங்கள மயமாக்கும் திட்டத்தை அமுலாக்க அரசாங்கம் முனைவது ஆசிரிய வட்டாரங்களிலும், பெற்றேர்கள் மத்தியிலும் பேரதிர்ச்சியை உண்டுபண்ணியுள்ளது.

### தீர்மானம்

நீர்கொழும்புப் பகுதியிலுள்ள மேற்படி பாடசாலைகள் யாவும் தமிழ்ப் பாடசாலைகளாக இயங்கிவந்தன. 1. 1. 63 தொடக்கம் சிங்கள தமிழ்ப் பாடசாலைகளாக இயங்குமென்று வித்தியாபதி தீர்மானித்துவிட்டதை அறிந்து பெரும் அதிர்ச்சியும் கவலையும் அடைகிறேம்.

மேற்படி தீர்மானத்தை உடனடியாகக் கைவிட்டு மேலேகுறிப்பிட்டுள்ள பாடசாலைகளை முன் போல் இயங்க அனுமதிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டிக் கொள்கிறது.

மேற் குறிப்பிட்ட பாடசாலைகளுக்கு மிக அருகாமையிலேயே பல சிங்களப் பாடசாலைகள் இருக்கின்றன என் குறிப்பிடத்தக்கது. சிங்களம் படிப்பிக்க வேண்டுமென்று விரும்பும் பெற்றேர்கள் தங்கள் பிள்ளைகளை அப்பாடசாலைகளுக்கு அனுப்பலாம். அல்லாவிட்டால் வாக்கெடுப்பு மூலமாவது பெற்றேரின் விருப்பத்தைத் தெரிந்து கொள்ளலாம் என்றும் அத் தீர்மானம் கூறுகிறது.

[illegible] அரசாங்கத்தின் மேற்படி தீர்மானத்தால் ஏற்படும் இன்னல்களையிட்டு மேல்மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் சிங்களமயமாக்கப்பட்டால், இப்பாடசாலைகளில் கடமை புரியும் தமிழ் ஆசிரியர் வெளி மாகாணங்களுக்கு மாற்றம் செய்யப்படுவர். இதன் காரணமாக வேலையற்றிருக்கும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு வேலை பெற வாய்ப்பளிக்கப்படமாட்டாது. இப்பாடசாலைகளில் உள்ள தலைமை ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு மாற்றப்படும் போது, பதவி உயர்வுக்காக காத்திருக்கும் ஆசிரியர்களை இத்திட்டம் பாதிக்கும்.

இதே திட்டம் ஏனைய மாகாணங்களுக்கும் பரவாதிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தாக வேண்டியது அவசியமாகிறது.


### டியூஷன்

எஸ். எஸ். ஸி. வரைக்கும், கணிதம் தவிர, எல்லாப் பாடங்களிலும் பாடம் சொல்லிக் கொடுக்க முடியும். வீட்டுக்கு வந்து சொல்லித்தர முடியும். வெள்ளவத்தையைச் சேர்ந்தவர்கள் எனில் விசேடம்.

ம. மயில்வாகனம், 118, டபிள்யூ. ஏ. சில்வா மாவத்தை, கொழும்பு-6.

### ஆசியாவில்!

கட்டடங்கள், அணைக்கட்டுகள், பாலங்கள்

இவற்றைக் கட்டுவதற்காக

இலட்சக் கணக்கில்

"ஒனோடா"

(பிரிட்டிஷ் நிர்ணயத் திட்டத்திற்குச் சமதையான)

உயர்ந்த ரக ஜப்பானிய

சிமெந்தே

உபயோகிக்கப்படுகிறது.

ஏக விநியோகஸ்தர்கள்:

சென்ற் அந்தனீஸ்

ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்,

516, ஸ்கின்னேர்ஸ் றேட் தெற்கு,

கொழும்பு-10.



### ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்கலுக்கும், மூலவியாதிக்கும்,

மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினல் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனும்

15 நாள் டின் ரூ. 3-00

30 நாள் டின் ரூ. 5-75

தபால் செலவு -/95

ஞானசுந்தர வைத்தியசாலை,

187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சென்ற வாரத் தொடர்ச்சி)

தட்டுக்களை கையில் எடுத்துக் கொண்டு போகத்திரும்பிய தன் மகளைப்பார்த்து "அம்மாவையும் பாட்டியையும் இங்கே கூட்டிவாம்மா" என்று கூறிவிட்டு எங்களை நோக்கி "தம்பி உங்கள் எல்லோருடனும் கலந்து பேசி மகிழ எனக்கு நிரம்பிய ஆசை. என்ன செய்ய? புதிதாகத் தொழில்களைத் தொடங்கியிருக்கிறேன். அவை சீராக இயங்கத் தொடங்கும்வரை என் நேரான கவனிப்பு அதிகம் வேண்டியிருக்கிறது. அதனால் இந்த ஆவலைத்தீர்ப்பதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. இன்னும் சில நாட்களில் வேண்டிய ஓய்வு கிடைத்து விடும் என்று நம்புகின்றேன். அது வரைக்கும் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். அப்புறம் நாம் இக்கிராம நலன்களில் உங்கள் தோளோடு தோளாக நின்று என்னுலான வரையும் உதவி, உழைக்கச் சித்தமாயிருக்கிறேன்" என்றுகெஞ்சும் பாவனையில் கை கூப்பி அவர் சொல்லியதைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. இதற்கிடையில் அவரின் தாய், மனைவி,மகள் மூவரும் அங்கு வந்து விட்டனர். அவர்கள் வருவதைக் கண்டதும் இருக்கையை விட்டு எழுந்து கை கூப்பி அவர்களுக்கு வணக்கம் செய்தோம், அவர்களும் பதிலுக்குக் கை கூப்பி விட்டு இருக்குமாறு கையமர்த்தினர்.

அவர்கள் ஒவ்வொருவரையும் சுட்டிக்காட்டி தமக்கு அவர்கள் யார் என்பதை எங்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். பின்னர் எங்களைப் பொதுவாகத்தன் பார்வைமூலம் சுட்டிக் காட்டி "இவர்களை உங்களுக்கு தெரிந்தும் தெரியாமலும் இருக்கலாம். எனக்கு இவர்களோடு பழகிக் கொள்ள நேரமில்லையாயினும் இவர்களைப் பற்றி நன்ருக அறிந்து வைத்திருக்கிறேன். 'மல்லிகை பூத்தால் மணம் வீசாமலா இருக்கும்?' இவர்கள் இக்கிராமத்தின் பொதுநலத் தொண்டர்கள், படித்தவர்கள், பண்பானவர்கள், தமிழரசுக் கட்சியின் உயிரான ஊழியர்கள், எங்களுக்கு மிகவும் வேண்டியவர்கள். இவர்களை நீங்கள் தெரிந்திருக்க வேணடும் என்பதற்காகத்தான் உங்களை இங்கு வரச்சொன்னேன்" என்று ஒரே புகழ்ச்சிப்படலம் ஆக்கிவிட்டார். எழுந்து ஓடிவிட்டால் நல்லது போல இருந்தது எனக்கு. எப்படியும் விஷயத்தைக் கெதியில் முடித்துக்



கொண்டு வெளியேறிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன்.

"ஐயா! இத்தனை நேரமாய் தங்களைச் சுணக்கி பல சிரமங்கள் கொடுத்ததற்கு மன்னியுங்கள். வரும் புதன் கிழமை எங்கள் தொகுதியின் சத்தியாக்கிரக முறை. அதற்கு நிதி சேர்த்துக் கொண்டு வருகிருேம்." மிகுதியை நான் சொல்ல வாயெடுப்பதற்குமுன் அவர் குறுக்கிட்டு "ஏன் தம்பி அப்படிச் சொல்கிறீர்கள்? எத்தனையோ இடங்களுக்குப் போய் எவ்வளவோ செய்ய வேண்டியவர்களை நான் ஒருவன் இவ்வளவு நேரம் தாமதப் படுத்தியதற்கு நானல்லவோ மன்னிப்புக் கேட்க வேண்டும்? பார்த்தீர்களா இப்போது கூட அவர்கள் வந்த காரியம் எப்படிப் பட்டதென்று! மற்றவர்களை வாழவைப்பதற்காகத் தன்வாழ்வை அர்ப்பணிப்பது தானே தொண்டு!" என அவர்களை நோக்கிக் கூறிவிட்டுத் தம் சட்டை பையிலிருந்து காசோலைப் புத்தகத்தை எடுத்து விரித்தவர் "வேண்டாம் ஏன் உங்களுக்கு வேலையைக் கூட்டுவான்? சரோ! போய் நூறு ரூபாய் எடுத்து வாம்மா" எனத்தன் மகளிடம் கூறினுர்.

புத்தம் புதிய 'நூறு ரூபாய்த்தாள்' ஒன்று அவர் கையிலிருந்து என்கைக்கு வந்தது. "வருகிருேம்" என்று எல்லாருக்கும் கை கூப்பி வணக்கம் செய்து விடை பெற்றுக் கொண்டோம்.

எங்களைப் பின்தொடர்ந்து தம் காருக்கு வந்த அவர், "தம்பி! சத்தியாக்கிரகத்திற்கு நாங்கள் எல்லாரும் வருகிருேம்: வரக்கூடியவர்களை எல்லாம்ஆயத்தப்படுத்துங்கள். அன்றைய சத்தியாக்கிரகிகளுக்கு உணவு, பானம் எல்லாம் என் பொறுப்பு. வேறேதாவது பணக் கஷ்டம் இருந்தால் எனக்குத் தெரிவியுங்கள்' ஒன்றுக்கும் சங்கோசப்பட

## போட்டிக் கதை 2.

# "கவிக்குமரி"

வேண்டாம். என்னையும் உங்களில் ஒருவனுக எண்ணுங்கள்" என்று மிக்விநயமாகக் கூறிவிட்டு, தம் காரை எடுத்துக் கொண்டு போய்விட்டார்.

"பார்த்தாயா! சத்தியாக்கிரக இயக்கத்தின் வல்லமையை! இவரைப்போல் இன சமூக விரோதிகளாயிருந்தவர்கள் எல்லாம் மனந்திருந்தி, தமிழினத்தில் என்றுமே காணுத இனஒற்றுமை இன்று ஏற்பட்டிருக்கிற தென்ருல் அதற்கு இச் சத்தியாக்கிரக இயக்கந் தானே காரணம்! வேறெந்த முறையிலாவது இவ்வித ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது? அறியாமலா "ஆத்மபலம் ஆத்மபலம்" என்று காந்தியடிகள் முழங்கினுர்?" நண்பர் நடேசன் இவ்விதம் ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தார். அவர் கூறியது பெரும்பாலும் உண்மைதான் என்ருலும் இதைவிட எவ்வளவோ அதிகமாக முகமனுக்கும்

### அல்லப்பிட்டி
### க. வ. ஆறுமுகம்

வெறும் பெயருக்குமாகச் செய்யும் பணக்காரர்தான் உலகில் அதிகம். தம் இயல்புக்கு விரோதமாக அவர்கள் ஏதும் நல்ல காரியம் செய்தால், அதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். நுணுகி ஆராய்ந்தால் அவர்களின் சுயநலநோக்கம அக்கருமத்துள் எவர்க்கும் தெரியாதபடி ஒளிந்திருப்பதைக் காணலாம்.

இது என் மனதில் ஊறி உறுதிப்பட்ட கொள்கை ஆனபடியால், அம்மனிதரின் பண்பான பேச்சிலும் மன மாற்றத்திலும் தாராளப் போக்கிலும் எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

"ஏதோ நடந்து கொண்ட வரை, நல்லவர். தானுக ஒட்டிக் கொள்ளப் பார்க்கிருர். ஒட்டும் போது ஒட்டி விலகும் போது விலகட்டுமே! அந்தப்பாட்டைப் பெற்றுக் கொள்ளும் வரை யாவது இந்தப் பாசாங்கை நம்பிக்கொண்டவன் போல் நடிக்கமுடியாதா என்ன?" இவ்விதம் என் மனத்தே முடிவுசெய்து கொண்டேன்.

அன்றைய சத்தியாக்கிரகத்தில் ஓர் இளம் பெண் எல்லாருடைய கண்களையும் கருத்தையும் கவர்ந்தாள். சத்தியாக்கிரகிகள் எல்லாரும் ஒழுங்காகவும் அமைதியாகவும் அந்தரங்க சுத்தியோடும் இருப்பதற்குதவியாகத் தன் செம்பவள வாயால் தீந்தமிழ் தெய்வப் பாடல்களையும், இனவிடுதலைப் பாடல்களையும் இசையோடு சேர்த்து இன்னமுதாய் வழங்கினுள். கால்சட்டையும் சப்பாத்தும் தொப்பியும் வாயில் சிகரெற்றுமாய் அதிகாரவர்க்கமும் அவர்கள் பரிவாரங்களும் நடைபயின்ற அக் கச்சேரிவாசல் அன்று உண்மையிலேயே ஓர் தவச் சாலையாகக் காட்சி அளித்தது. கடல் போன்று நிரம்பி நின்ற அனுதாபிகள் கூட்டம், எவருமே இல்லாதது போல் அத்தனை அமைதியாக இருந்தது. பொலிசாருக்கும் இராணுவத்தினருக்கும்கூட எவரையும் "எழும்பு போ வா" என்று சொல்லவும் வேலை அன்று இருக்கவில்லை. அவர்களில் பலர் ... தைக் கொடுத்தபடி ... ளால் மாத்திரம் தம் கடமையைச் செய்துகொண்டிருந்தனர். சில இளமட்டங்கள் மாத்திரம்—வெள்ளை போத்தலில் மூடியிருக்கும் பாலைகள்ளப் பூனை ஆவலுடன் பார்ப்பதுபோல்—அப்பெண் இருக்கும்இடத்திற் கருகால், அப்பெண்ணை விழுங்கி விடுவதுபோன்ற பார்வையுடன் அவசியமற்று அடிக்கடி போவதும் வருவதுமாயிருந்தனர்.

கொளுத்தும் வெய்யில் நேரத்தில், ஆண் பெண் சத்தியாக்கிரகிகள் அனைவருக்கும் உணவுகள் பானங்கள் பரிமாறியதில் பெரும் பங்கு எடுத்துக் கொண்டு அப்பெண் பட்ட சிரமத்தைப் பார்த்துப் பலர் இரக்கப்பட்டனர். அப்பொழுதுதான் தமது 'ஜீப்' வண்டியில் வந்திறங்கிய சிங்களப் பொலிஸ் மேலதிகாரி ஒருவர் இதைக் கவனித்து விட்டு, தமக்கருகால் உணவுப் பொட்டலங்களுடன் சென்று கொண்டிருந்த அப் பெண்ணைப் பார்த்து அனுதாபத்துடன் "அம்மே யெங்களுக்கும்" என்று கேட்டுச் சிரித்த போது, பொலிஸ், இராணுவம், சத்தியாக்கிரகிகள், அனுதாபிகள் எல்லாரும் ஒனறுபட்டுச் சிரித்தனர். சிந்தை ஒன்று படும்போது தம் ஏற்றத் தாழ்வுகளை மனிதர் மறந்து விடுவதைப் பார்த்தால் மனிதன் எப்படி வாழவேண்டியவன் என்பது தெரிகிறதல்லவா?

நாலைந்து நாட்கள் தொடர்ந்து அலைந்துலைந்த களைப்பும் அன்று சத்தியாக்கிரக ஊர்வலத்தில் கொளுத்திய வெய்யிலால் ஏற்பட்ட தலைவலியும் கொதிப்பும், வீடு வந்ததும் உடனே விழுந்து படுக்கும்படி செய்துவிட்டன என்னை. நன்ருக அயர்ந்தநிலையில் என்அம்மா அவலமாக என்னை எழுப்பி "ஐயோடா தம்பி! அந்தக் கொழும்பாற்றை பிள்ளைக்கு பெரிய வருத்தம்; அறிவு நினைவு இல்லை. அந்த மனுசன் தனியே என்ன செய்வதெண்டு தெரியாமல் கதறுது; வீட்டோடை எல்லாம் கத்துதுகள். நீ போய் யாரும் பரியாரியை டாக்குத்தரைக் கூட்டியாவன்; அயலல்லே... ஆ... ஆ இந்தப் பிள்ளைக்கும் இப்படிவாறதாதெய்வமே?" எனப் பதட்டத்துடன் சொல்லிக்கொண்டு திரும்பிப் போனுள் என் அம்மா.

என் நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்க "ஐயோ இதென்ன அநியாயம்!" என மனத்தே புலம்பிக் கொண்டு என் அம்மாவின் பின்னுக அவர்கள் 'கேற்'றடியில் போகும்போது அழுகையும் கதறலும் அவர்கள் வீட்டில் அவலமாய்க் கேட்டேன். அதிர்ந்து போனேன்,வானம் பூமி கீழ் மேல் எதுவுமே தெரியவில்லை எனக்கு. "தம்பி! என் குலதெய்வம் போய்விட்டது தம்பி, மின்னுமல் முழங்காமல் என்தலையில் இடிவிழுந்து விட்டது தம்பி, சத்தியாக்கிரகத்திலிருந்து வந்ததும் குளித்து விட்டு நெஞ்சை வலிக்கிறது என்று சொல்லிக்கொண்டு போய்ப் படுத்ததாம். நான் இப்படி என்று கண்டேனு! கடையைப் பார்ப்பதற்காகக் காரைத் திருப்பிக் கொண்டு போய்விட்டேன். நான் சற்றுமுன் வந்தபோது என் செல்விக்கு அறிவு நினைவு இல்லை. எத்தனையோ பாடுபட்டுப் பார்த்தேன். என்தெய்வம் எதுவும் சொல்லாமல் போய்விட்டாள், தம்பி போய்விட்டாள்! இந்தப் பாவியின்உயிர் இன்னும் இருக்கிறதே தம்பி!" கதறினுர், புரண்டார்; தலையைத் தூண்களில் மோதினுர்.

அவரைத் தடுக்க என் கைகளில் வலுவிருக்கவில்லை. ஆறுதல் சொல்ல வார்த்தைகள் ஒன்றும் கிடைக்கவில்லை. நேராக என் கால்கள் வீட்டுக்குள் சென்றன. குவிந்து கதறும் பெண்களை விலக்கிக் கொண்டு அத்திருமுகத்தை என் கண்கள் நன்ருகப் பார்த்தன. அப்படியே தலையைப் பிய்த்துக்கொண்டு கதற வேண்டும் போல் இருந்தது. "குமரித்தெய்வம் குமரித் தெய்வம்" என்று என் வாய் முணுமுணுத்தது. "திடீர்" என எனக்கு சுய

(13-ம் பக்கம் பார்க்க)

# சங்கப் பலகை

**சிறுகதைகள் 6**

ஆசிரியர்: டீயெம்பி
வெளியிட்டோர்:
வாலிபர் முன்னேற்றக் கழகம்
486/8, புளுமெண்டால் வீதி,
கொழும்பு.

விலை : சதம் 50

அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்த ஆறு நல்ல சிறுகதைகளின் தொகுப்பே இந்நூல்.

கலை, வாழ்க்கைக்காக என்ற தத்துவத்தை நோக்கமாக வைத்து அனைத்தும் புனையப்பட்டுள்ளன. மக்கள் மத்தியில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை, விருப்பு வெறுப்புக்களை, மூட நம்பிக்கைகளை—மற்றும் இன்னேரன்ன பிரச்சினைகளை—அடிப்படைக் கருவூலமாகக் கொண்டு அமைந்துள்ளன இக்கதைகள்.

குறிப்பாக, தொழிலாள மக்கள் மத்தியில் உள்ள சில பிரச்சினைகளை மையமாக வைத்தே அனைத்தும் புனையப் பட்டுள்ளன

"ஏமாந்தவள்" என்னும் கதை சிறப்பாக அமைந்துள்ளது. கோகிலா, புஷ்பா என்ற இரு பெண்கள்; முன்னவள், உயர்ந்த அந்தஸ்தில் உள்ள ஒருவனின் ஆசை வார்த்தைகளைக் காதல் என்று நம்பி, அவளின் ஆசைகள் பூர்த்தியான பின்பு ஏமாந்தவளாகிருள். புஷ்பா தனது நிலைக்கேற்ற ஒரு முற்போக்கு வாதியை மனதார விரும்பி, இருவரும் வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்துக் கொள்கிருர்கள்.

'தொட்டிலில் பிணம்' என்னும் கதை படிப்பவர்களைச் சிறிது நேரம் சிந்திக்க வைக்கிறது. தான் பெற்ற குழந்தை இறந்து விட்டதைக் கண்ட தாய் எவ்வளவு வேதனைப் படுவாள். ஆனல் இக் கதையில் வரும் தாய், அதை மறந்து வேலைக்குச் செல்கிருள். ஏன்? கையில் காசில்லை. கட்டிய கணவனே படுத்த படுக்கையில் இருக்கிருன். அவள் அன்று வேலைக்குச் செல்லாவிடில் மேலும் பல பிணங்களையல்லவா பார்க்க வேண்டும்?

மற்றும் "பருவத்தின் கோளாறு" "வள்ளி திருமணம்" ஆகிய கதைகள் மனதில் நிற்கக் கூடியனவாக உள்ளன.

ஒவ்வொரு கதை முடிவிலும் ஒரு குறள் சேர்க்கப்பட்டுள்ளது வரவேற்கக் கூடியது.

மறைந்த தொழிற் சங்கத் தலைவர் திரு. கே. ஜி. எஸ். நாயர் நூலுக்குச் சிறப்புரை வழங்கியிருக்கிருர்.

வேல் தைலம்
மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்ருகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய
மகா சஞ்சீவி.

விலை ரூபா 1-25

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:
S. P. S. ஜெயம் கம்பெனி,
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:
M A. R. S. மனுவேல் நாடார்
அன் கோ.,
34, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கல் நிறைந்த வேளையில் அவர் இல்லையே

## வன்னியசிங்கம் வகித்த இடம் இன்றும் காலியாகவே உள்ளது

## அமரர் நினைவு நாளில் தலைவர்கள்

**நமது விடுதலை இயக்கத்தில் இன்னல்கள் ஏற்பட்ட போதெல்லாம், அவற்றைப் பொறுப்பேற்று, மனச்சோர்வின்றி அவற்றைப் போக்குவதற்குத் தகுந்த பரிகாரம் கண்ட மாபெரும் வீரன் அமரர் வன்னியசிங்கம். இன்றெல்லாம் கட்சியில் சிக்கல்கள் ஏற்படும்போது அவர் இல்லையே என்று ஏங்க வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அவர் இடம் இன்றும் காலியாகவே இருக்கிறது.**

இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 30—9—1962 அன்று வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திரு. ப. குமாரசாமி தலைமையில் நடந்த பெரியார்கள் நினைவு விழாவில் சொற்பெருக்காற்றுகையில்



திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

குறிப்பிட்டார். தலைவர் தமது உரையில் கூறியதாவது:-

செயற்கரிய செய்பவர்களே பெரியார்கள். இந்த வகையில் அமரர் வன்னியசிங்கம் தமிழினத்துக்குச் செய்த சேவைகள் அளப்பரியன. அவர் காலத்தில் நாம் வாழ்ந்தோம் என்பதை எண்ணும் பொழுது, மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம். அது நமக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியம் என்றே கருதவேண்டும்.

தொடர்ந்து பேசுகையில் திரு. செல்வநாயகம் கூறியதாவது:- "நமக்கு ஏற்பட்ட மிக நெருக்கடியான ஒரு காலம் 58, 59ம் ஆண்டுகள். அப்பொழுது அதை ஒரு பெரிய காரியமாகக் கருதாது, கஷ்டமான பல வேலைகளைத் தானே பொறுப்பேற்று மிகத் தைரியமாகப் பாடுபட்டவர் திரு. வன்னியசிங்கம்.

ஈழத் தமிழகத்தின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் பட்டி தொட்டிகளையும் நன்ருகத் தெரிந்து வைத்திருந்தார். தொகுதி நிர்ணய சபைக்கு, வட கிழக்கு மாகாணங்களில் உள்ள தொகுதிகளைப் பிரிப்பதற்கும், தாஞகவே திட்டமொன்றைத் தயார் செய்து, அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளவும் செய்து ஒரு பெரும் வெற்றியைக் கட்சிக்குப் பெற்றுக் கொடுத்தவர் திரு. வன்னியசிங்கம்.

சாதி ஒழிப்புக்காக அவர் ஈட்டிய செயல்களை தமிழினம் ஒரு போதும் மறந்துவிட முடியாது. தீண்டாமை ஒழிப்பு வேலைக்கு அவர் தன்னை முற்ருக அர்ப்பணம் செய்திருந்தார். நம் மத்தியில் உள்ள வேற்றுமைகள் ஒழிந்தால் தான், நாம் சுதந்திரம் பெறுவதற்கு அருகதையுடையவர்களாக முடியும் என்ற நம்பிக்கை, அவர்களது உள்ளத்தில் வேர் விட்டிருந்தது.

தமிழ் இலக்கியத்தில், தமிழ் வரலாற்றில் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார் திரு. வன்னியசிங்கம். கட்சியின் பெரும்பாலான கூட்டங்களுக்கு அவரே தலைமை வகிப்பார். அப்பொழுது கேட்கப்படுகின்ற கேள்விகளுக்குச் சுடச்சுட சுவையான பதில்களை அளிப்பார். அவர் இறந்த பின்னர் அந்த இடத்தை நிரப்ப ஒருவரும் இல்லை.

### பாரதியும் வன்னியரும்

ஜனுப் மசூர் மௌலாஞ, "பாரதியும் வன்னியரும்" என்ற தலைப்பில் பேசியதாவது:

தமிழ் உணர்ச்சியை, உரிமை வேட்கையைத் தட்டியெழுப்பியவன் பாரதி அதைச் செயல் முறையில் காட்டியவர் வன்னியர். தமிழ் உயரவேண்டும், தமிழன் உயரவேண்டும் என்று பாடியவர் பாரதியார். அதைச் செய்து காட்டியவர் வன்னியர். பாரதி தட்டியெழுப்பிய எழுச்சி தமிழகத்துடன் நின்று விடவில்லை. ஈழத்திற்கும் பரவியது. அதைப் பயன் படுத்தி, நல்லதொரு அரசியல் வழியை வகுத்து வைத்தார் அமரர் வன்னியசிங்கம் அவர்கள்.

நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று வாதிடுபவர் திரு. வன்னியசிங்கம். குற்றம் குறைகளை எங்கு கண்டாலும், வேண்டியவர்; வேண்டாதவர் என்று வேறுபாடு காட்டாது கண்டித்து திருத்தும் மனப்பான்மை உடையவர் அமரர் வன்னியசிங்கம் அவர்கள்.

மலையகத்தைச் சேர்ந்த திரு. மு. க. வேலழகன் கூறியதாவது:-

மலையகமும் வட கிழக்கும் இணைந்து நடத்தாத எந்த ஒரு போராட்டமும் முழுமை பெற முடியாது. எனவே மலையகமும் வட கிழக்கும் ஒரு இலட்சியத்தின் கீழ் ஒன்றுபடும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

அடுத்து சுதந்திரன் துணை ஆசிரியர் இரா. பத்மநாதன் "வன்னியரும் விபுலானந்தரும்" என்ற தலைப்பில் பேசுகையில் கூறியதாவது:-

ஈழத்துக்கும் இசைக்கும் பண்டைய காலந்தொட்டு மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இராவணன் தனது கொடியில் யாழைப் பொறித்து இசைக்கு முக்கியத்துவம் கொடுத்தான். அன்று அந்தகன் ஒருவன் யாழை மீட்டி அதற்குப் பரிசாக நாட்டைப் பெற்ருன். இவ்வளவு முக்கியத்துவம் நிறைந்த யாழ் நம் மத்தியில் இருந்து அருகி வருவதைக் கண்ட வித்தகன் விபுலானந்தன் யாழ் நூலைச் சமைத்து அழியாப் புகழை நமக்குத் தேடித் தந்தான்.

எனவே ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமையை வளர்ப்பதில் யாழ் பெரும் பங்கை வகிக்கிறது. இதையுணராது சிலர் இன்னும் நம் மத்தியில்வேற்றுமையை வளர்ப்பதில் முனைகிருர்கள். உண்மையில் இது ஒரு வெட்கப்படவேண்டிய, வேதனைப் படவேண்டிய செயல் இதையுணர்ந்தாகுதல் நமது நண்பர்கள் வருங்காலத்தில் பிரதேசப் பிரிவினை பேசுவதை நிறுத்துவார்களாக.

விபுலானந்தர் ஒரு துறவி. துறவியென்ருல் நாட்டை மறந்து, மக்களை மறந்து வாழ்பவர் என்ற அர்த்தமல்ல. இளங்கோ ஒரு துறவி. அவர் நாட்டை மறந்து, மக்களைப் பிரிந்து வாழ்ந்திருந்தால், இன்று நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் நமக்குக் கிடைத்திருக்க முடியாது. அதே போன்று விபுலானந்தரும் நாட்டைத் துறந்திருந்தால் யாழ் நூலை நாம் பெற்றிருக்க முடியாது வன்னியரும் ஒரு துறவி தான். அவர்கள் தமது சுகபோகங்களை மறந்து, தமது குடும்பத்தை மறந்து தமிழ் பேசும் இனம் என்ற குடும்பத்திற்காக வாழ்ந்தவர். எனவே வன்னியரும், விபுலானந்தரும் இளங்கோ போன்ற துறவிகள் என்று கூறிஞல் அது மிகையாகாது.

வன்னியர் ஒரு கதைக் களஞ்சியம். ஒரு நகைச்சுவை மன்னன். அவருடன் நெருங்கி வாழ்ந்தவர்களுக்குத் தான் இது தெரியும். மணிக்கணக்காக நகைச்சுவை ததும்பக் கதைகள் சொல்லுவார்.

இன்று நாம் செய்ய வேண்டியது, அவர் கட்டிக்காத்து வளர்த்த ஒற்றுமையைச் சிதைய விடாது காப்பாற்றுவதே. இதுவே நாம் அவருக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

அடுத்து மட்டுநகர் பிரதிநிதி திரு. செ. இராசதுரை, "வன்னியரும் வ. உ. சியும்" என்ற பொருள்பற்றிப் பேசுகையில் கூறியதாவது;- வன்னியருடனும், வ. உ. சி. யுடனும் நான் பாரதியையும் சேர்த்துச் சில வார்த்தைகள் கூற விரும்புகின்றேன். நாமிருக்கும் நாடு நமதே என்பதை அடிப்படையாகக் கொண்டு செயலாற்றியவர் அமரர் வன்னியசிங்கம். அவர் இல்லாத நிலையை நாம் இப்பொழுது நன்ருக உணர்கிறோம். அவர் தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்த பெருந்தகை. அவர் நடந்து சென்றபாதை கரடு முரடும், கஷ்டமானதுமாக இருந்தது. ஆனால் எப்பொழுதும் நல்லதொரு முடிவைக் கண்டார்.

காந்திஜீ கூடத் தமது அடுத்த பிறப்பில் ஒரு தமிழனுகப் பிறக்க விரும்புகிருர். இன்று எம்மத்தியில் சிலர் தமிழரெனக் கூறிக் கொள்ளக் கஷ்டப்படுகிருர்கள்- வெட்கப் படுகிருர்கள். இந்நிலை மாற வேண்டும். அப்பொழுது தான் தமிழன் மானத்துடன் வாழமுடியும்.

கண்ணீரும், செந்நீரும் சிந்திக் கட்டிக் காத்து வளர் [illegible] [illegible] என்னை வெளியே இழுத்து விடவோ அன்றித் தள்ளி விடவோ சிலர் விரும்புகிருர்கள் போல் தெரிகிறது. நிச்சயம் அவர்கள் ஏமாற்றம் அடைவது திண்ணம்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டக் களத்திலோ அன்றி இயற்கை நியதி காரணமாகவோ நான் இறக்க நேரிட்டால், மயானத்தை நோக்கிக் கொண்டு செல்லும் என் உயிரற்ற உடலை, எங்கள் மூவர்ணம் பொறித்த தேசியக் கொடியே மூடிச்செல்ல வேண்டும் என்பதே எனது ஆசை.

அடுத்துக் கட்சிப் பொதுச் செயலாளர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் கூறியதாவது: "வன்னியசிங்கம் ஓய்வு ஒழிச்சலின்றி உழைத்தமையால் தான் மிகவும் குறுகிய காலத்தில் நம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தார். இன்று அவர்கட்கு விழா எடுக்கிறோம். ஆனல் அவர் இலட்சியத்தை நிறைவேற்றும் எண்ணம் நமக்கு உண்டா என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்: இன்று சிலர்



ஜனுப் எம் இஸட். எம். மசூர் மௌலாஞ

சிங்களம் படிக்க முனைந்திருக்கிருர்கள்.. இதுவா நாம் வன்னியசிங்கத்துக்கு செய்யும் அஞ்சலி? அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமானல், அவர் கூறியபடியல்லவா நாம் நடக்க வேண்டும்.

இன்று முழு அரசாங்க ஊழியர்களில் தமிழர் நாலு சத வீதத்தினர் தான் உள்ளனர். அந்த நாலு சத வீதத்தில் ஒரு பகுதியினர் சிங்களம் படிக்கிருர்கள் என்ருல் எப்படி மற்றவர்கள் தங்கள் உரிமையைக் காப்பாற்றுவது? எனவே ஒருவரும் சிங்களம் படிப்பதில்லை என்று சபதம் செய்ய வேண்டும். அப்பொழுது தான் நமது போராட்டம் வெற்றி பெறும்.

மட்டுநகர் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி கடைசியில் நடைபெற்றது. வில்லுப்பாட்டு நிகழ்ச்சி ஈழத்து மக்களுக்குப் புதியது என்ருலும் மக்கள் மத்தியில் இக்குழுவினர் நல்ல ஆதரவைப்பெற்று வருகிருர்கள்.

## கலைமன்றம்

கல்முனைக்கு அண்மையிலுள்ள கல்லோயாப் பள்ளத்தாக்கைச் சேர்ந்த 12-ம் கிராமத்தில் 1962-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 26-ந் திகதி புதன் கிழமையன்று "கலைமன்றம்" எனும் இயக்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பின்வருவோர் அதன் நிருவாகிகளாக நியமிக்கப்பட்டனர்: போஷகர்கள்; எம். எல். கே. மீராசாய்பு, தலைமையாசிரியர்; எல். எம். வாவா, தலைமையாசிரியர்; ஏ. எல். மீராலெவ்வை, தலைமையாசிரியர். தலைவர்: எஸ் யூசூப், ஆசிரியர். உப. தலைவர்: ஐ. எல். உதுமான்கண்டு. பொதுக்காரியதரிசி: எஸ். எம். எம். ஹனிபா. துணைக் காரியதரிசிகள்: வி. ஏ. கனி. கே. எல். வதூர்டீன். தனதிகாரி: ஏ. எம். அப்துல்லா, ஆசிரியர். பரிசோதகர்: எம். ஐ. எம். முஹிதீன். துணைப் பரிசோதகர்: யூ. எம். ஹனிபா. ஒரு செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.


**சுதந்திரன் சந்தா விபரம்**

இலங்கை—இந்தியா உட்பட


**வருடச் சந்தா ரூபா.10-00**

இன்றே உங்கள் சந்தாப் பணத்தை அனுப்பி சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளுங்கள்!



தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"

உறுதியான நைலோன், துருலோன் நூல்களும், வலைகளும்



கிடைக்குமிடம்: சேகரம் & சன்ஸ் 74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





ஆறுத் துயரெழுந்தால், ஆதரவு காட்டுவோரை அரவணைத்துக் கொண்டாலே அகம் மகிழும் அக்காளைத் தங்கை அணைத்திருந்த போதிலும் அருவிபோல் கண்ணீர் பெருக்கெடுக்கக் காரணம் தான் என்னவோ?

பழனியப்பாவின் "என்னைப் பார்" படத்தில் விஜயலட்சுமியும், பி. எஸ். சரோஜாவும்.

பட விமர்சனம்:

## சவுக்கடி சந்திரகாந்தா

ஆட்சி பீடத்திலிருக்கும் அரசனை அநியாயமாக வதைத்துவிட்டு சர்வாதிகாரியாகி விடுகிறான் அரசனின் தம்பி. முடிக்குரிய இளவரசன் சாதாரண குடிமகனாக இருக்கும்போது நயவஞ்சகனின் மகன் இளவரசனாகி நாசத்தின் பிரதிநிதியாகி நாட்டில் துன்பங்களின் மொத்தவியாபாரியாகி விடுகிறான்.

இறந்த அரசனின் மந்திரியும், மன்னனின் மைத்துனமான தளவாய் நாராயணசாமி தன் இரு பெண் குழந்தைகளையும், மனைவியையும் விட்டு எங்கோ சென்று விடுகிறான். மூத்த மகளுக்கும், மறைந்து வாழும் இளவரசனுக்கும் காதலுண்டாகிய வேளையில், இளைய மகளான சந்திரகாந்தாவுக்கும் இளவரசுப் பட்டம் கட்டிக் கொண்ட கொடியவனுக்கும் காதல் உண்டாகிவிடுகிறது.

உண்மையான இளவரசனை வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஆசை கொண்ட போலி அரச பரம்பரையினர் சந்தர்ப்பம் பார்த்திருந்த வேளைகளில், ஆட்சியினருக்கு அவஸ்தையையும், குடி மக்களுக்கு நல்லுதவிகளையும், நல்கி வந்த முகமூடியின் சவுக்கடிகள் பரிசாகக் கிடைக்கின்றன.

முகமூடியை ஒழிக்கத் திட்டம் தீட்டுவதற்கு போலிச் சாமியார் ஒருவரும் ஆட்சி பீடத்திற்கு உதவுகிறார். சவுக்கடியை சிக்கவைத்து சித்திரவதை செய்துவிட எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. சவுக்கடியின் உதவியுடன் சூழ்ச்சிகள் அம்பலமாகியதும் சவுக்கடிதான் முன்னாள் மந்திரி தளவாய் நாராயணசாமி என்பது தெரியவருகிறது.

பல வருடங்களுக்கு முன்னர் நாவல் உருவத்திலும்; ஆரம்ப சினிமாப் படமாக தமிழகத்தில் உலவிய "சவுக்கடி சந்திரகாந்தா" கதையை எம். ஆர். கே. பிலிம்சார் மீண்டும் திரைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

படப் பிடிப்புக் காலங்களில் உள்ள வேறுபாடுகளை, சந்திரகாந்தாவாகத் தோன்றும் சௌகார் ஜானகியின் தோற்றம் காண்பிக்கிறது. ஒளி, ஒலிப்பதிவுகள் மிக நேர்த்தியாக அமைந்துள்ளன. ஜி. இராமநாதனின் கர்நாடக இசைக்கமைந்த இரு பாடல்கள் உள்ளத்தைத் தொடுகின்றன.

போலிச் சாமியார் ஆனந்தனாகத் தோன்றும் பாலையா தமக்கே உரித்தான பாணியில் திறமையைக் காட்டியுள்ளார். அடப்பைக் காரராக வந்து பொய்ச் சாட்சி கூறி பேராசையால் வீழ்ச்சியுறும் சின்னனாகத் தோன்றும் காக்கா ராதா கிருஷ்ணன் இப்படத்தின் நடிப்பு வரிசையில் முன்னணியில் திகழுகிறார். மற்றும் டி. கே. இராமச்சந்திரன், தளவாய் நாராயணசாமியாக வரும் வீரப்பா, இளவரசனாக வரும் வளையாபதி முத்துக்கிருஷ்ணன், தாம்பரம் லலிதா ஆகியோரும் நன்றாக நடித்துள்ளனர்.

-நாதன்-

## பரமு பிலிம்ஸ்

பரமு பிலிம்சாரின் 'சீமான் பெற்ற செல்வம்' படத்தில் சௌகார் ஜானகி, கல்யாண் குமார், லட்சுமி ராஜ்யம் ஆகியோர் தோன்றுகின்றனர். இப்படத்தின் ஒளிப்பதிவு, டைரக்ஷன் பொறுப்பை ஆர். ஆர். சந்திரன் பொறுப்பேற்றிருக்கிறார்.

## 'பதிவுத் திருமணம்' நடைபெறப் போகிறது

லண்டன் கந்தையா, 'பதியூர் ராணி', அழாதே கண்ணே போன்ற சிறந்த நாடகங்களை மேடையேற்றியவரும் தமிழ் நாடகவிழா நடத்தியவருமான திரு. கே. பாலச்சந்திரன் எதிர் வரும் நவம்பர் 18-ம் திகதி பொரளை வை. எம். பி. ஏ. மண்டபத்தில் "பதிவுத் திருமணம்" என்ற சமூக நாடகத்தை நடத்த ஆக்க ஏற்பாடுகள் செய்து வருகிறார். இலங்கை வானொலி நாடகப் பகுதி தலைவர் எஸ். சண்முகநாதன் நாடகத்தை டைரக்ஷன் செய்வதோடு முக்கிய பாகம் தாங்கியும் நடிக்கிறார். மேலும் ஈழத்தின் பிரபல நடிகர் நடிகைகள் பங்கு பற்றும் இந்த நாடகத்தில் குறிப்பாக ரொசாரியோ பீரிஸ், நடிகவேள் லடிஸ் வீரமணி, டி. ராஜேஸ்வரன், செல்வி நிர்மலா, உதயகுமார், செல்வி பரமேஸ்வரி பொன்னுசாமி, வி. சோமசுந்தரம் ஆகியோர்கள் நடிப்பார்கள். 'ஆர்பி' கதை வசனம் எழுதிய "பதிவுத் திருமணம்" நகைச்சுவை தோய்ந்த சமூக நாடகமாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

## ரஞ்சன் தயாரிக்கிறார்

தமிழ்ப் பட உலகிலிருந்து ஒதுங்கியிருந்த நடிகர் ரஞ்சன் ஒரு முழு நீள சர்க்கஸ் படத்தைத் தயாரிக்கப் போகிறாராம். இப்படம் தமிழிலும், இந்தியிலும் ஒரே சமயத்தில் தயாராகும்.

## புலித்தேவன்

நடிகர் ஈ. ஆர். சகாதேவனைக் கதாநாயகனாகக் கொண்டு வளரும் "புலித்தேவன்" படத்துக்கான காட்சிகளை சிவாஜி பிக்சர்ஸ் பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் துரிதமாகத் தயாரித்து வருகின்றார்களாம்.

# தங்கவேலுவின் "அம்பிகாபதி"

அம்பிகாபதி ஒரு பஸ் கண்டக்டர். அமராவதி ஆஸ்பத்திரி நர்ஸ். இரண்டு பேரும் பஸ்ஸிலே சந்தித்து காதல் பண்ணினாங்க. லவ் டெவலப் ஆச்சு. உடனே பீச்சுக்கு விளையாடப் போனாங்க.

"அத்தான் காதல் கடல்லே நீஞ்சலாமா" என்று அமராவதி கேட்டாள்.

"உடனே இருவரும் கடலிலே குதித்து நீஞ்ச ஆரம்பிச்சுட்டாங்க" என்று தங்கவேலு கூறினார்.

"இப்போ அவங்க என்ன ஆனாங்க?" என்று கேட்டார் சகுந்தலா.

"பாலைவனத்திலே இளநீர் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைத்தான் நேரில் பார்த்ததாக பழனியிலே ஒருத்தன் சொன்னான்" என்றார் தங்கவேலு.

"நாமும் நீஞ்சுவோமே!"

"ஊட்டியிலே கடல் ஏது?"

"ஏரி இருக்குமே?"

"அதுலே எருமை மாடு இருக்குமே!"

மேலேயுள்ள நகைச்சுவை பொழிந்த வசனங்களை தங்கவேலுவும், ஜி. சகுந்தலாவும் பேசிக் கொண்டிருக்கும் காட்சி மொடர்ன் தியேட்டர்சாரின் "காட்டு ரோஜா" வுக்காகப் படமாக்கப்பட்டது.

காட்டு ரோஜாவில் பத்மினி, எஸ். எஸ். இராசேந்திரன் சோடியினர் தோன்றுகின்றனர். நகைச்சுவை வசனங்களை தேவராஜன் எழுதியுள்ளார். இப்படத்தை சுப்பராவ் டைரக்ட் செய்கிறார்.

## காளிதாஸ்

ஆயிரம் காலத்துப்பயிரை வெகு விரைவில் திரைக்கு அனுப்பிவிட்டு விரைவிலேயே "காளிதாஸ்" கதையைத் திரைப்படமாகத் தயாரிக்க துரைராஜ் திட்டமிட்டுள்ளாராம்.

## அன்பு மகள்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

த்துடன் சென்று வீர உரையாற்றினார். உங்கள் கட்கியின் அலங்கோலத்தைப் பாருங்கள் எனச் சவால் விட்டார்.

இந்நிலையில் கேலி பேசியவர்களும் தமிழ் மக்கள் மத்தியில் இருக்கத் தான் செய்தனர். என்ன செய்வோம் தமிழனின் சாபக்கேடு......!

அன்று நாம் சத்தியாக்கிரகத்தைக் காலி முகத்தில் ஆரம்பித்து வைத்தமையால் உலகத்தின் நல்லபிப்பிராயத்தைத் தேடினோம்.

உலகின் எல்லாப் பத்திரிகைகளும் எமது கோரிக்கை நியாயமானதெனவும், எமது முதல் போராட்டம் காந்தியடிகளே மெச்சக் கூடிய போராட்டமெனவும் எழுதின.

உலக அரங்கில் ஈழத் தமிழினத்தின் பிரச்சினையை உணர்த்த முடிந்தது பாராட்டத்தக்கதல்லவா?

அன்று போராட்டத்தை நாம் தொடங்காது விட்டால், ஈழத்தில் தமிழ் மொழி பேசுகின்ற ஓர் இனம் இருப்பதையே உலகு அறியச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காதே!

அது மட்டுமா, ஈழத்தின் வரலாற்றில்...ஈழத்துத் தமிழினம் சிங்களத்தை ஏற்றுக் கொள்ளவில்லை, அறவழியில் எதிர்த்தார்கள் என்ற வசனத்தைச் சேர்த்தோமே!

இன்றல்ல, நூறு ஆண்டு கழியினும்......நாளைய சந்ததி இவ்வரலாற்றைப் படித்து எம்மை வாழ்த்தி ஏறுநடை போடவழி சமைத்தோம்.

மகளே! நீ கூட சரித்திரம் படிக்கும் போது......உன் தந்தையின் காலத்துத் தமிழர் விட்டுக் கொடுக்கவில்லை என்பதைப் படித்துப் பெருமையடையப் போகிறாய். ஆனி ஐந்து வரும் போதெல்லாம் ......எமது போராட்ட அங்குரார்ப்பணத்தை மறக்கமுடியுமா? ஆனி ஐந்து கோழையையும் வீரனாக்கும் தினம்.

இன்று நாங்கள்—வடக்கு கிழக்கு மாகாணமெங்கும் தமிழர்கள், தமது சட்டையில் அணியும் அடையாளத்தை—நாமும் அணிந்தோம்; பலர் பிரார்த்தனை செய்தனர்.

இப்போது சட்டக்கல்லூரி மாணவரும், யாழ்ப்பாணக் குருநகரைச் சேர்ந்தவருமான அன்ரனி அவர்கள் எங்கள் சாப்பாட்டு ஒழுங்குகளைக் கவனித்து வருகின்றார்.

இன்று முல்லைத் தீவு பட்டின சபைத்தலைவர் அவர்கள் கைதாகி எமது குடும்பத்துடன் வந்து சேர்ந்துள்ளார்.

சரி...... பின்பு மீதி எழுதுவேன்.

உன் அன்புத் தந்தை
புதுமைலோலன்

(தொடரும்)



மட்டக்களப்பு வின்சன்ட் உயர்தரக் கல்லூரி வருடாந்த விழாவில் நடைபெற்ற "வள்ளி திருமணம்" நாட்டிய நாடகத்தில் ஒரு காட்சி.

படம்:— 'இதயம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிக் குமரி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

உணர்வு தட்டியது. என்னில் எனக்கு நம்பிக்கையில்லை, நான் இங்கு நிற்கக் கூடாது. அசம்பாவிதமாய் எதையாவது செய்து அம் மாசிலா மணிக்கு மாசு தேடி விடுவேன் போலிருந்தது. வெளியேறிவிட்டேன். நேராக என் வீட்டுக்குச் சென்றேன். "நீலத்திரைக் கடல்ஓரத்திலே நின்று நித்தம் தவம் செய் குமரி" அன்னையைக் கண்குளிரப் பார்த்தேன்; நீண்ட நேரம் உற்றுப்பார்த்தேன். கண்ணீரைச் சொரிந்து எண்ணப் புரியாத, சொல்லத் தெரியாத ஏதோ ஒருவித அன்புக் காணிக்கை செலுத்தினேன், ஆறுதல் பெற்றேன்.

மனங்குளிர மணவிழாவைச் செய்து மகிழ வேண்டிய பெண்ணுக்கு வாய்க்கரிசி யிட்டுய, கொள்ளி வைத்தும் மனம் வெந்து போன அத்துன்ப நாள் ஏதோ ஒருவிதத்தில் கழிந்து போய்விட்டது. மாறுத இன்பமும் ஆறுத துன்பமும் இந்த உலகில் இருந்ததில்லை; இருக்கப்போவதுமில்லை. காலம் எதனையும் ஒரே நிலையில் விட்டு வைப்பதில்லை. மாற்றத்தினுல் தானே இந்த உலகம் இந்த அளவிலாவது நிலைத்திருக்கிறது?

நான் அப் பெரியவரை அடிக்கடி சந்தித்து ஆறுதல் கூறி வந்தேன். நாட்கள் செல்லச் செல்ல அவர் நிலைமை தெளிவாகி வருவதைக் கண்டதும் ஓர் நாள் அவரிடம் அப்பாட்டைப் பற்றி விசாரித்தேன். ஒரு பெரிய குறிப்புப் புத்தகத்தை அவர் என்னிடம் கொண்டுவந்து தந்து, அதில் இருக்கும் பாட்டுக்கள் எல்லாம் தம் மகளால் இயற்றப் பட்டவை என்றும், அவற்றைப் படித்துப் பார்த்து பிழை நீக்கிச் சரிசெய்து தருமாறும் கேட்டுக் கொண்டார்.

பாட்டுக்கள் எல்லாம் எழுதி எழுதி வெட்டித் திருத்தப்பட்டிருந்தன. சத்தியாக்கிரகத்தில் அப்பெண் பாடிய பாட்டுக்களும் அவற்றுள் இருந்தன. ஆவலுடன் கடைசியாக எழுதப்பட்டிருந்த சட்டத்தைப் புரட்டினேன். என்ன குறைத்தவம்! அன்று பாடும்போது நான் கேட்டறிந்த முதல் அவ்வளவுந்தான் கடைசியாக எழுதப்பட்டிருந்தது. பாட்டு முழுவதையும் இயற்றுவதற்கு முன் முடிந்ததைப் பாடிப்பார்த்திருக்கிறது அப்பெண். பாட்டு முடியவில்லை புலவர் முடிந்துவிட்டார். என்னே காலத்தின் கோலம்!

இரவு படுக்கைக்கு போகும் வரைக்கும் என்னுல் ஆனவரை முயன்று பார்த்தேன், ஒருவரி கூடப் பொருத்தமாக எழுத முடியவில்லை. ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. யோசித்து யோசித்துக் களைத்து அயர்ந்து விட்டேன்.

"அதோ அந்த அழகிய திருமுகம் தனியாகத்தோன்றுகிறது. அதைச் சூழ ஒரு ஒளி வட்டம் தெரிகிறது; அந்தப் பவள இதழ்கள் அசைகின்றன. ஆகா! அந்தத்-தெய்வீக இசைமீண்டும் என் காதில் ஒலிக்கத் தொடங்கி விட்டது"

"ஈழம் தமிழ்த் திருநாடு-இது
எங்கள் உயிரெனச் சங்கே நீ
ஊது (ஈ)
யாழைக் கொடியில்
பொறித்தோன்—கலை
யாவும் துருவி நுணுகிக்
குடித்தோன்
ஈழத் தமிழ்முதல் மேதை
—உயர்
இராவணன் எங்கள்
குலத்தின் மூதாதை—(ஈ)
வங்கத் திருந்து வந்தோர்கள்
—இனி
வம்பு முறையில் பிறந்
தனைந்தோர்கள்
சங்க மதுரையின் வேந்தால்
—பல
சாதகம் பெற்றுயர் வாகினர்
நிங்காள்—(ஈ)
வந்ததோர் பேய் மொழி
யோடு—எழில்
வண்ணத் தமிழின்
வழிமொழி சேர்ந்து
சிங்களம் ஆனது பின்னே—
இதில்
சிந்தனை பண்ணித்
தெளிவதற்கென்னே!—(ஈ)
அன்னியர் ஆட்சியின் போது—
தமிழ்
அடிமை அடைந்தது சிங்களத்
தோடு
பின்னர் விடுதலை என்றால்—
வெறும்
பேய்மொழிக் காமுயர்
இன்தமிழ்க் கின்றும்—(ஈ)
வெள்ளையர் ஆட்சியை நீக்க—
தமிழ்
மேதைகள் செய்தவை
கொஞ்சமோ நோக்க!
நொள்ளை மொழியினை
இன்று—தமிழ்
நீக்கி அரியணை ஏற்றினர்
நன்று—(ஈ)
சிங்கைப் பெருநகர் காணீர்—
அதில்
செந்தமிழ் ஆங்கிலம் சீனம்
மலாயம்
சங்கை அரசு மொழிகள்—
இந்தத்
தர்மத் துவீபத்தில் தாழ்ந்த
வழிகள்—(ஈ)
மானம் இழந்துயிர்
வையோம்—பிறர்
மானம் உரிமை மதிப்பதில்
தொய்யோம்
ஈனச் சதித் தொழில்
செய்யோம்—எமை
எள்ளி உரைப்பவர் பற்களை
வையோம்—(ஈ)

மட்டில்லா மகிழ்ச்சியுடன் திடுக்கிட்டு எழுந்தேன். அப் புன்னகை தவழும் பொன் முகம் மறைந்து விட்டது. ஆனுல் பாட்டொலி மட்டும் என் செவியில் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தது. தயாராக வைத்திருந்த பேனையை எடுத்து அப்பாட்டு முழுவதையும் தாளில் எழுதிக் கொண்டேன். முடிவில் என் கை தாஞகவே அப்பாட்டின் கீழ் "கவிக் குமரி" என எழுதியது.

(யாவும் கற்பனை)

## அதிகார........

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கடைசியாக, பிரதியுபகாரம் கருதாமல் நான் உமக்கு யோசனை கூறுகிறேன், நிதி நிலைமையையும் ஓரளவு சமாளிக்கலாம். உமது வகுப்பு வெறி ஆதரவாளர்களின் பாராட்டையும் சம்பாதிக்கலாம். இந்த அரிசி வெட்டை தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளிலே மட்டும் அமுலாக்குங்கள். இவர்கள் பட்டினிகிடந்தால் என்ன கெட்டுப் போய் விடும்? கொதித்தெழுந்தால் இருக்கவே இருக்கிறது இராணுவம். இல்லையா?

## மலைப்பகுதி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக் கட்சி கிளைகளை மலைநாட்டில் ஆங்காங்கே தோற்றுவித்து இலங்கையில் வாழும் மொத்தம் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினராக வாழும் தமிழ் பேசும் மக்களை ஒரே கட்சியின் கீழ் கொண்டு வந்து அரசியல் உரிமை பெற்று, மொழியுரிமையோடு வாழும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்துமாறு, தமிழரசுக் கட்சியினரை மலைநாட்டு தமிழ் வாலிபர்கள் அறைகூவத் தயாராகி விட்டார்கள் — என்பதை தொழிற் சங்கங்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறேன்.

ஏ. வி. முருகேசு,
9, புதிய கடை வீதி,
நுவரெலியா.

# வில்லிலே கதை சொல்லும் வித்தகர்கள்

## மாஸ்டர் சிவலிங்கம் குழுவினருக்கு மக்கள் அளித்த புகழ்மாலை

தமிழன் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தவன். எனவேதான் முத்தமிழில் நடுநாயகமாக இசைத்தமிழை வைத்தான் போலும்.

இசைத் தமிழுக்குப் பல கிளைகள் உண்டு. அதில்



நகைச்சுவைக்குமரன் மாஸ்டர் சிவலிங்கம்.

ஒன்றுதான் வில்லுப்பாட்டு. வழக்கொழிந்துஇருந்தஇந்த இசைப் பிரிவுக்கு உயிர் கொடுத்தவர் மறைந்த கலைவாணர் என். எஸ். கே. அவர்களே.

ஈழத்தவருக்கு வில்லுப்பாட்டு புதியது. இன்று நமக்கு இதை அறிமுகப்படுத்தி வைத்தவர் மட்டுநகர் தந்த நகைச் சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம்.

வில்லுப்பாட்டு என்றதும், தனிய இசைக்குமட்டும் முக்கியத்துவம் இருப்பதாகக் கருதுவது தவறு. வில்லுப்பாட்டு முழுமை பெற வேண்டுமெனில், நகைச்சுவை வேண்டும், நல்ல முக பாவம் வேண்டும், ஒப்பனைத் திறம் வேண்டும். ரந்த இலக்கிய அறிவு வேண்டும். இவையனைத்தையும் இணைத்து இசை இழையோடவேண்டும்.

மேற்கூறிய அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள் மாஸ்டர் சிவலிங்கம் குழுவில் உள்ளர். இசைக் குமரன் முழக்கம் முருகப்பா என்பவர் நல்ல இசை ஞானம் உடையவர், மட்டுநகர் எழுத்தாளர் சங்கமே அவருடைய இசையில் மயங்கி அவருக்கு "இசைக் குமரன்" என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்திருக்கிறது.

குழுத் தலைவர் மாஸ்டர் சிவலிங்கம் நல்ல நகைச் சுவையாளர். அவர்கள் தமிழகத்திலும் கூட நகைச் சுவை நிகழ்ச்சிகளில் கலந்து தமிழகத்தாரின் புகழுக்கிலக்கானவர். புலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளை அவரது நகைச் சுவையாற்றலைக் கண்டு "நகைச் சுவைக் குமரன்" என்ற சிறப்புப் பெயரை பல வருடங்களுக்கு முன்னரே வழங்கியுள்ளார்.

இவர்கள் இற்றை வரை 'வன்னியசிங்கம் சரிதை', 'விண்ணுலகில் விபுலானந்தர்', 'பாரதி வந்தான்', 'எதிர்ப்பு நாயனுர் புராணம்', 'நாஸ்திகல நல்லதம்பி' ஆகிய தலைப்புகளில் பல நிகழ்ச்சிகளை வட கிழக்கு மாகாணங்களில் திறம்பட நடாத்தி மக்களின் பலத்த ஆதரவைப் பெற்றுள்ளார்கள்.

இப்பொழுது தலை நகரில் பல இடங்களில் கலைஉலா வருகிருர்கள். கடந்த வாரம் குறிப்பாக வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகம், விவேகானந்த சபை, பல்கலைக் கழக இந்து மாணவர் மன்றம், இரத்மலானை இந்துக் கல்லூரி, அர்ச். செபஸ்தியார் கல்லூரி, நீர்கொழும்பு ஆகிய இடங்களில் பல நிகழ்ச்சிகளை நடத்திப் பல பெரியார்களின் பாராட்டுகளைப் பெற்றுள்ளார்கள்.

இவர்கள் குழுவில் மேலும் குழந்தைக்கவிஞர் செ. குணரத்தினம், சக்திதாசன், தட்சணமூர்த்தி ஆகியோரும் உளர்.

வில்லுப்பாட்டுக் குழுவினரின் பின்னணி இசைகள் கொஞ்சம்முன்னேற்றமடைந்தால் நன்ருயிருக்கும். பங்குபற்றுபவர்கள் பெரும்பாலும் மாணவர்கள். இசைக் கருவிகளை நன்கு மீட்டிப் பழகி விடுவார்களேயானுல் சிறப்புமென்மேலும் வளரும் என்பதில் ஐயமில்லை.



இசைக்குமரன்- முழக்கம் முருகப்பா.

## கணபதி வித்தியாலயத்தில் நவராத்திரி விழா

ஞாயிற்றுக்கிழமை (7-10-62) காலை 9-30 மணியளவில் கணபதி வித்தியாலய மண்டபத்தில் சரஸ்வதி பூசை விழா நடைபெறும். இவ்விழாவுக்கு வித்தியாதரிசகர் திரு. செ. இரத்தின சபாபதி அவர்கள் தலைமை வகிப்பார்கள். நிகழ்ச்சிகள் பின் வருமாறு:

(1) தேவாரம்:— வித்தியாலய மாணவிகள்.

(2) தலைவர் முன்னுரை.


(3) பேச்சாளர்கள்:- வித்துவான் மு. கணபதிப் பிள்ளை, (சென் செபஸ்ரியான் ஆங்கில உயர் நிலைப் பள்ளி) செல்வி ச. தில்லையம்பலம் பி. ஏ. (மகாவித்தியாலயம், நில்வீதி) செல்வி யோகாம்பிகை வல்லிபுரம், (உதவி ஆசிரியை, வீரகேசரி) செல்வி சோ. நன்னித்தம்பி, (ஆசிரியை, அ. த. பா., நில்வீதி)

(4) இசை.

(5) நடனம்.

(6) நன்றியுரை.

சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி ஸ்பெஷல்

காரம், மணம், குணம் நிறைந்தது.
புகைப்போருக்கு புத்துணர்ச்சியை ஊட்டும்.

யானை பீடி கம்பனி,
62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு. தொலைபேசி 7651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குட்டிக் கதை

## கடிகாரம்சொன்ன கதை

(கு. பற்குணம் விஸ்வநாதன், கோட்டே)

அன்று புதன்கிழமை ஏதாவது ஒரு கட்டுரை எழுதுவோம் என்று உட்கார்ந்தேன். சிறிது நேரம் சிந்தித்தேன். ஒன்றும் மூளைக்குத் தோன்றவில்லை. அலுப்புடன் எழுந்து நேரத்தைப் பார்த்தேன். கடிகாரம் ஓடாமல் இருந்தது. உடனே நான் சாவி கொடுப்பதற்காக அருகிற் சென்றேன். "நில், தொடாதே" என்று கடிகாரம் கூறியது. "ஏன் தொடக் கூடாது?" என்று நான் கேட்டேன். "முதலில் என் கதையைக் கேள், பிறகு எனக்குச் சாவி கொடு" என்றது. "சரி" என்றேன். கடிகாரம் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது.

நான் மேல் நாட்டில் பிரபல தொழிற்சாலையொன்றில் பிறந்தேன். எனக்கு அனேக நண்பர்கள் இருந்தனர். அவர்களுடன் நான் கப்பலேறி, ஒரு எழில் மிக்க தீவாகிய இலங்கைக்கு வந்து சேர்ந்தேன். ஒரு நாள் உன் அக்கா அந்தக் கடைக்கு வந்து, என் அழகைப் பார்த்து மயங்கி விலை கொடுத்து வாங்கினுள். பிறகு இந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தேன்.

எனக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். ஒருவன் நெட்டையன், மற்றவன் குட்டையன். இருவரும் ஒற்றுமையாகவே இருப்பார்கள். ஒரு நாளைக்கு இருபத்து நான்கு முறை எப்படியாவது ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வார்கள். நெட்டையன் வேகமாக ஓடுவான், குட்டையன் அவ்வளவு வேகமாய் ஓட மாட்டான். நெட்டையன் பன்னிரண்டு மைல்கள் ஓடினுல், குட்டையன் ஒரு மைல் தான் ஓடுவான். சில வேளைகளில் பள்ளிக்கூடத்து மாணவர்கள் வந்து, "சே, இன்னும் எவ்வளவு நேரம் இருக்கிறது வீட்டிற்குப் போவதற்கு" என்று என் மீது நொந்து கொள்வது எனக்கு கேட்கத்தான் செய்யும், நான் என்ன செய்வது? என்னுல் இயன்ற அளவு தானே வேலை செய்வேன். எனக்கு ஆயுள் பூராவும் ஓய்வே தரமாட்டார்கள். ஏதாவது எனது உறுப்புக் கோளாறிஞல் வேலை செய்யாமல் ஓய்வு எடுத்துக் கொண்டால் கூட, விட்டு விடுவார்களா? எப்படியாவது தகுந்த சிகிச்சை செய்து எனக்குத் திரும்பவும் வேலையைத் தந்து விடுவார்கள், என்ன செய்வது? ஒழுங்காக வேலை செய்து கொண்டு போவேன். நான் உங்களுக்கு ரொம்பவும் பிரயோசனப் படக் கூடியவன். நான் இல்லாமல் போனுல் ஒருவரும் ஒழுங்கானபடி ஒரு வேலையும், குறிப்பிட்ட நேரத்தில் செய்து கொள்ள முடியாது. ஐயோ நான் உன்னுடன் பேசிக் கொண்டே இருக்கிறேன். எனக்குச் சாவியைக் கொடு, நான் என் வேலையைச் செய்யப் போகிறேன்" என்றது.

நான், கர்,......கர்.........கர்......என்று சாவியைக் கொடுத்தேன். கடிகாரமும் டிக்......டிக்......டிக் என்று ஓட ஆரம்பித்தது.




## மாநிலத்து முதல்வன் மகாத்மா காந்திஜி

(செல்வி தி. நாகேஸ்வரி, யாழ்ப்பாணம்)

உலகம் தோன்றிய காலம் தொட்டு சமுதாயத்திலே எத்தனையோ விதமான மனிதர்கள் தோன்றி மறைந்து விட்டார்கள். மேதைகள், அறிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், தொழில் விற்பன்னர்கள் போன்ற பலதரப்பட்ட மனிதர்களை இவ்வுலகம் தோற்றுவித்து மறைத்தும் விட்டது. இன்று இத்தகையோர் பலர் வாழ்ந்தும் வருகிறுர்கள். இனிப் பிறந்து வாழவும் போகின்றுர்கள்.

இத்தகைய மனிதர்களுள் ஒருவராகப் பிறந்தவர்தான் அல்ல, அவதரித்தவர்தான், மகாத்மா காந்தி. அவர் உடல் இன்று இப்பூவுலகில் இல்லையாயினும், மக்கள் அனைவரினதும் உள்ளத்தில் அவர் திருவுருவம் பதிந்து விட்டது. ஆனுல் இதே போன்று அவருடைய பொன் மொழிகளும் மக்கள் இதயங்களில் வேரூன்ற வேண்டும்.

இன்றைய உலகம் மிகச் சீர்கேடான நிலையிலிருக்கிறது. இதற்கு நாம் யாரையும் குறை கூற முடியாது. எமது கையிற்றுன் எமது வாழ்க்கையின் சிறப்பு, எழுச்சி அடங்கியுள்ளது.

### நாடித் துடிப்பு

ஒரு தினத்தில் ஒரு மனிதனின் நாடி ஒரு இலட்சம் முறைகளுக்கு மேல் துடிக்கிறது.

ஒவ்வொருவர் மனதிலும் என்று அண்ணல் காந்தியின் அறிவுரைகள் சிறந்தது, அதை நாம் கடைப் பிடிக்க வேண்டும் என்ற மேன்மையான எண்ணம் உதயமாகின்றதோ, அன்றுதான் பிற்போக்குப் பாதையில் சென்று கொண்டிருக்கும் இவ்வுலகம், சீர்கெட்டு வரும் மனித சமுதாயம், விழிப்படையும்.

காந்தி மகான் எம் போன்று மனிதராகப் பிறந்தவர்தான். ஆனுல் அவர் மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்து மறைந்தவர். இன்று அவரைப் போற்றுத நாடும் இல்லை. புகழாத மனிதரும் இல்லை. ஆனுல் அவர் வாழ்ந்த வாழ்க்கையோ எளிமையினும் எளிமையான வாழ்க்கை. அந்த எளிமையான வாழ்க்கையில் தான் அவர் பல உண்மைகளைக் கண்டார். அந்த உண்மைகளைத் தான் உலகுக்கு அறிவுரைகளாக வழங்கினுர்.

காந்தியின் எந்த ஒரு அறிவுரையையும் பகுத்தறிவுள்ள எந்த ஒரு மனிதனும் கடைப்பிடிக்கலாம். அதிலொரு கஷ்டமோ, துன்பமோ இருக்க முடியாது. மனிதன் பகுத்தறிவின்றி வாழ்வானுகில் அவன் மனித சமுதாயத்தில் மிக, மிக கீழ்த்தரமாகவே கருதப்படுவான். எனவே நாம் அனைவரும் பகுத்தறிவுக் கண் கொண்டு காந்தியின் அறிவுரைகளை அலசி ஆராய்ந்து கடைப் பிடித்து ஒழுக முன்வரின் நாமும் நமது சமுதாயமும் ஈடேற இடமுண்டு.

காந்தி முதன் முதல் மக்கள் அனைவரும் எளிமையான வாழ்க்கையைக் கடைப் பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றுர். மனிதன் என்றும் பேராசைக்கு அடிமைப்படாது உள்ளதைக் கொண்டு திருப்தியோடு வாழ வேண்டும். அப்படி வாழ்பவன் தான் உண்மையான மன அமைதியையும், இன்ப வாழ்வையும் பெற முடியும் என்பது காந்தியின் அசையாத நம்பிக்கை.

வாழ்க்கையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, இவற்றை என்றும் அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். காந்தியடிகள் தம் வாழ்வில் சத்தியத்துக்கும், அகிம்சைக்குமே முதலிடம் கொடுத்து வாழ்ந்தார். இதை நாம் நுணுகி ஆராய்ந்தால் அப்போது அதன் முக்கியத்துவம் எமக்குப் புலனுகும். பொறுமை மனிதனைப் பாதுகாக்கும் புனிதமான கவசம். பொறுமை இழந்தவன் சடுதியில் நெறி தவறி விடுவான். ஆத்திரத்தில் அறிவை இழத்தல் மடமையிலும் மடமை. எனவே மனிதன் எப்போதும் தன்னைத் தான் அடக்கும் வலிமை பெற்றேறுக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கின்றுர்.

காந்தியடிகள் தமது வாழ்நாளில் பல அரிய உண்மைகளை, அறிவுரைகளை மக்கள் முன்னிலையில் விட்டுச் சென்றிருக்கின்றுர். அவற்றை நாம் பயபக்தியோடு பகுத்தறிவுக் கண் கொண்டு பார்த்து, அவர் காட்டிய நல்ல பாதையில் இக்கணமே அடியெடுத்து வைக்க முற்படுவோமாயின் நாம் மனிதருள் மாண்பு மிக்கோராக, மாநிலத்தின் சீர்திருத்தவாதிகளாக வாழ வழி கிடைக்கும். எனவே நாம் அனைவரும் காந்திய வாழ்வைக் கடைப் பிடித்து ஒழுகுவோமாக.

## வில்லுப்பாட்டு, பாப்பா!

(செ. குணரத்தினம், மட்டக்களப்பு.)

வில்லுப் பாட்டு வில்லுப் பாட்டு, பாப்பா—அது
விலா குலுங்கச் சிரிக்க வைக்கும் பாப்பா
பல்லைக் காட்ட வைப்பதோடு பாப்பா—அதில்
பல கருத்தும் சேர்ந்திருக்கும் பாப்பா!

வெல்லம் போல வேடிக்கைகள் பாப்பா—அதில்
வெளிக் கிளம்பும் தத்துவங்கள் பாப்பா
தமிழகத்தின் சொந்தமடி பாப்பா—எங்கள்
தரணியிலும் இருக்குதடி பாப்பா

மட்டுநகர் தன்னில் வாழும் பாப்பா—இதை
மாநிலமே அறியுமடி பாப்பா
எட்டுத்திக்கும் வில்லுப் பாட்டுப் பாப்பா—இப்போ
ஏறுநடை போடுதடி பாப்பா!

### உங்களிடம்......
### ......ஒரு வார்த்தை

எம். பிச்சைத்தம்பி, அ. இ. 3534 — உமது பெயர் 'பிச்சைமுத்து' என்று தப்பாகப் பிரசுரிக்கப்பட்டு விட்டதோ? சரி, இதோ திருத்தம்—எம். பிச்சைத்தம்பி, அ. இ. 3534, மூதூர் 8. திருப்திதானே?

செல்வி பிலோமினு பெர்ணுண்டோ, மட்டக்களப்பு—உமது 'சூரியன்' என்ற கவிதை நன்றுக விருக்கிறது. விரைவில் 'வளர்மதி'யில் இடம் பெறும்.

வே. சிவரெத்தினம், கிறிஸ்தவ சேவா ஆச்சிரமம், கொட்டாஞ்சேனை, கொழும்பு—உமது தபால் அட்டை கிடைத்தது. அங்கத்தவராகச் சேர விரும்பினுல், நீர் வளர்மதி அங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்கள் மூன்றினைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

செல்வி க. ராணி நவமணி, செல்வர்கள் எஸ். முருகையா, சந். அரியரெத்தினம்—உங்கள் கட்டுரைகள் நீண்டு விட்டன. சுருக்கமாக, சிறிய அளவில் வேறு கட்டுரைகள் எழுதி அனுப்புங்கள்.

—வளர்மதி மாமா

## இவர் யார்?

(எஸ். கே. சண்முகநாதன், வண்ணுர்பண்ணை.)

எட்டு எழுத்துக்களைக் கொண்ட, ஒரு பெரியாரின் பெயர்; முதலாமெழுத்து, வண்டியிலுண்டு, மோட்டாரிலில்லை. இரண்டாமெழுத்து; பன்னீரிலுண்டு, கண்ணீரிலில்லை. மூன்றுமெழுத்து, கனியிலுண்டு, காயிலில்லை. நான்காமெழுத்து; வயலிலுண்டு. வரம்பிலில்லை. ஐந்தாமெழுத்து; மாசியிலுண்டு, பங்குனியிலில்லை. ஆறுமெழுத்து; மாங்காயிலுமுண்டு, தேங்காயிலுமுண்டு. ஏழாமெழுத்து; கருமையிலுண்டு, வெண்மையிலில்லை. எட்டாமெழுத்து; பாம்பிலுண்டு, கீரியிலில்லை அப்பெரியாரின் பெயர் யாது......?

[illegible]

## வளர்மதி புதிய மருமக்கள்

3535 எஸ். சிவலிங்கம், மாவத்துகம.
3536 செ. குணரெத்தினம், மட்டக்களப்பு.
3537 சி. சிவசக்தி, வடக்கம்பரை.
3538 ஜே. ஜெராட், கட்டைக்காடு.
3539 ஜே. கொன்ஸ்டன் பெரேரா, கொத்தாந்தீவு.
3540 ந. செல்வராஜ், முகத்துவாரம்
3541 என். கே. தியாகராசா, தாவடி.
3542 எஸ் சுவாமிநாதன், நொறிஸ்வீதி, கொழும்பு.
3543 பொ. சந்திரசேகரம், அனுராதபுரம்.
3544 க. ஞானமுத்தன், கைதடி.
3545 இணுவையூர் எஸ். செல்வராசா, எட்டியாந்தோட்டை.
3546 எஸ். மகாமணி, இறக்குவானை.
3547 கே. அன்னகிளி, பட்டவத்தை.
3548 ஆ. பொன்னையா, பதுளை.
3549 வி. புண்ணியமூர்த்தி, வண்ணுர்பண்ணை.
3550 எம். டி. ஔவையம்பாள், பேராதனை.
3551 சே. உமாபதி, சுன்னுகம்.

### காற்று பாரமா?

13 அடி நீளம், 10 அடி அகலம், 10 அடி உயரமுள்ள அறையொன்றினுள் இருக்கும் காற்றின் நிறை 100 ருத்தல்களாகும்.



நவராத்திரி என்றதும் சிறுவர்களுக்கு ஒரே குதூகலம் தான்! பொம்மைக் கொலு வைக்க ஆவலோடு எதிர்பார்ப்பார்கள். மேலேயுள்ள படத்திலும், குழந்தைகள் பொம்மைகளுக்கு வர்ணம் பூசுவதில் அக்கறையுடன் ஈடுபட்டிருப்பதை பாருங்கள்.

—படப் பிடிப்பு: இங்ஸ்லி செல்லையா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கிழக்கிலங்கை பொதுநல சேவைச் சங்கம்

இன்றைய வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப் பட்ட வாலிபர் சமுதாயம் வீட்டுக்கும் நாட்டுக்கும் ஒரு சுமையெனச் சாட்சியளிப்பது கண்கூடு.

இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வழியே இல்லையா? என்று ஒரு சிலர் கேள்விப் பாணம் தொடுப்பதும் நம் உள்ளங்களில் வந்து தைக்கின்றது. இம்மாதிரியான கேள்விகட்கு மட்டக்களப்புக் கிழக்கிலங்கைப் பொது நல சேவைச் சங்கம் ஆற்றும் சேவை நல்ல பதிலைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது.

கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ 5000 வாலிபர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தால் பாதிக்கப் படுகிறார்கள்.

நிலவளமும் நீர் வளமும் நிறையப் பெற்ற மட்டக்களப்பு மாவட்டத்திலேயே இப் பிரச்சினை இப்படியெனில் இதர மாவட்டங்களின் நிலைமையை எடுத்தியம்பத் தேவைப்படா!

இந்தப் பிரச்சினையின் வருங்கால கொடூர மிரட்டலைப் பற்றிஆராய்ந்தறிந்த ஒரு சில நல்ல மனம் படைத்த மாவட்டப் பிரமுகர்கள் ஒன்று கூடி மட்டக்களப்பில் கிழக்கிலங்கைப் பொது நல சேவைச் சங்கம் என்ற பெயரில் ஒரு மாபெரும் ஸ்தாபனத்தை உருவாக்கியுள்ளனர்.

சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்:

(1) கிழக்கிலங்கை வாழ் எல்லா சமூகங்களுக்கும் பொது சன சேவை செய்வது.

(2) சங்க அங்கத்தவர்களின் சமூக, பொருளாதார நிலைமைகளைச் சீராக்க உதவிகள் செய்வது.

(3) விவசாயம், கைத்தொழில், குடிசைத் தொழில் போன்ற துறைகளில் அங்கத்தினர்களுக்கு ஆர்வம் ஏற்படச் செய்து சுய தேவை உற்பத்திகளைப் பெருக்குவதில் ஊக்கமளித்தல்.

(4) அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவு இயக்க மூலம் வியாபார நிலையங்கள்—தொழிற்சாலைகள் ஏற்படுத்தி உள்ளூர் விளை பொருட்களைக் கணிசமான விலைக்கு வாங்குவதும் அப் பொருட்களினின்றும் தயாராகும் பொருட்களை உள்ளூர்களிலும் வெளியூர்களிலும் விற்று உள்ளூர் உற்பத்தியாளர்கட்கு ஊக்கமளித்தலும்.

(5) சங்கத்தின் மூலமாகவே கோழி, கால் நடை வளர்ப்பு ஆகிய பண்ணைகளை ஆரம்பித்து இப் பண்ணைகளின் மூலமாகப் பிரதேசப் பொது மக்களையும் சிறந்த கோழி, கால் நடை வளர்ப்பாளர்களாக்கிப் பயன் பெறச் செய்தல்.

(6) இச் சங்க அங்கத்தவர்களின் உழைப்பையும் ஊக்கத்தையும் அனுசரித்து அரசாங்கத்திடம் காணிகள் பெற்று கூட்டுப் பண்ணை முறையில் விவசாயம் கோழி கால் நடைப் பண்ணைகள் நிறுவத் திறமை உள்ளவர்கட்குத் தொழிலும்-பயிற்சியும்-லாபமும் பெற வசதிகள் ஏற்படுத்தல்.

(7) இச் சங்கத்தின் அலுவல்கள் யாவும் மட்டக்களப்பு மாவட்ட பிரபல செல்வாக்குடையவர்கள் பலரைக் கொண்ட பொதுக் குழு ஒன்றினுல் செயலாற்றப் படுகிறது.

இப் பொதுக் குழுவின் கீழ் பல துறைகளிலுமான நிர்வாகக் குழுக்கள் பணியாற்றுகின்றன.

இக் குழுக்களைத் தவிர,பல திடமான ஆக்க வேலைகட்குமான ஆலோசனைச் சபையும் உண்டு.

இச் சங்கத்தில் ஆண்களைவிடப் பெண்களே அதிக அக்கறை கொண்டு வீடுகளிலே கோழிப் பண்ணை, கால் நடைப் பண்ணை, காய் கறித் தோட்டம் போன்றவைகளில் ஈடுபட்டு சங்கத்தின் இலவச ஆலோசனைகளையும் வேறு உதவிகளையும் பெற்று வருவது ஈண்டு குறிப்பிடத் தக்கதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலே வேலை தேடித் திரியும் ஒவ்வொருவரும் இச் சங்கத்தின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதால் பலனும் பயனும் நிறைய உண்டு என்று கூறுவது மிகையாகாது

### குருவானவருக்கு வரவேற்பு

சாம்பல்தீவில் உள்ள கத்தோலிக்க மக்களால் வணக்கத்திற்குரிய சுவாமி அருளப்பாவுக்கு ஓர் வரவேற்புபசாரம் அளிக்கப்பட்டது. கேணியடிச் சந்தியில் இருந்து சுவாமியை சாம்பல் தீவு கிராம சபை தலைவர் திரு. வ. நா. தம்பிராசா மலர் மாலை அணிவித்து மாங்கணாய் தேவாலயத்திற்கு ஊர்வலமாக அழைத்துச சென்றார். வீதிகள் தோறும் தோரணங்களால் மிகச் சிறப்பாக சோடனைகள் செய்யப்பட்டிருந்தது.

இவ் வைபவத்திற்குத் தலைமை தாங்கிய கி. ச. தலைவர் திரு. வ. நா. தம்பிராசா பேசுகையில், "சுவாமி அருளப்பா சாதி மத பேதம் காட்டாதவர். எல்லோரும் இறைவனுடைய மக்கள், எல்லோரும் ஓர் குலம், இறைவன் ஒருவன் என்ற நம்பிக்கையுடையவர். சைவ, கத்தோலிக்க மக்களை ஒன்று சேர்த்த பெருமை சுவாமிக்கே உரியது. இவரின் சாதனை மிக மகத்தானது" எனக் கூறினார்.

சுவாமி அருளப்பா தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்து எல்லோரையும் ஆசீர்வதித்தார். மாணவிகள் வாழ்த்துப் பாடல்கள் பாடினார்கள். வரவேற்புக் குழுவின் சார்பில் திரு. அமிர்தநாதனும் மாதர்கள் சார்பில் திருமதி அமிர்தநாதனும் நன்றி கூறினார்கள். தேநீர், சிற்றுண்டி விருந்தும் அளிக்கப்பட்டது.

## மக்களுக்காக ஓய்வு ஒழிச்சல் இன்றி உழைத்தவர் அமரர் வன்னியசிங்கம்

—திரு. எஸ். ஜே. வி.

### மாவிட்டபுரத்தில் அமரர் நினைவு விழா

அமரர் வன்னியசிங்கம் இளம் வயதிலே நம்மையெல்லாம் விட்டுப் பிரியக் காரணம் அவரது அயராத மக்கட் சேவையே.

இவ்வாறு மாவிட்டபுரம் மகா மாரியம்மன் கோவில் வீதியில் நடந்த அமரர் நினைவுவிழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் கூறியதாவது:-

திரு. வன்னியசிங்கம் அவர்கள் இரவு பகல் என்று பாராது, ஓய்வு ஒழிச்சல் இன்றி மக்களுக்காக உழைத்தார். அவரது அயராத உழைப்பே அவரைப் பலி கொண்டது. அவர் பல துறைகளிலும் முன் நின்று உழைத்தார். பலதுறைகளில் மிகுந்த திறமையுள்ளவராக, ஆற்றலுள்ளவராக விளங்கினார். 1947ம் வருடத்தில் இருந்து இறக்கும் வரை மக்கட் பணியே தனது கடமை என்ற நோக்குடன் உழைத்தார்.

வழக்கறிஞர் திரு. எஸ். நடராசா தமது உரையில் கூறியதாவது:-

அமரர் வன்னியசிங்கம் எல்லாம் தமிழென வாழ்ந்தவர். ஆட்சியாளருடன்,எந்த விதமான விடயமாயினும் தமிழிலேயே தொடர்பு வைத்திருந்தவர். எல்லாம் தமிழ் இயக்கத்திற்கு முன்னோடியாக விளங்கியவர்கள் அவரே.

திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி., மு. பாலசுந்தரம் எம். பி., அ. அமிர்தலிங்கம் எம். பி., எஸ். கதிரவேற்பிள்ளை, வி. தருமலிங்கம் எம். பி. ஆகியோரும் பேசினர்.

மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம் பெற்றது.

### இ. த. அ. கட்சி உடுப்பிட்டிக் கிளை

மேற்படி கிளையின் நிர்வாக சபை கீழ்க் காணும் பிரேரணைகளை நிறைவேற்றியுள்ளது.

1. மலை நாட்டிலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் கிளைகள் அமைப்பதற்கு, இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது மன்னார் மாநாட்டில் முடிவு செய்துள்ளதை எமது கிளை வரவேற்கின்றது.

2. சமஷ்டி அரசமைப்பின் கீழ் இலங்கை ஓர் ஐக்கிய நாடாக இருத்தல் வேண்டுமென்னும் குறிக்கோளுடன் ஒவ்வொரு பூரணை தினத்திலும் உடுப்பிட்டித் தொகுதியில் மாலை 6 மணி தொடக்கம் கூட்டுப் பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

3. காலஞ் சென்ற பொன். கந்தையா வட மராட்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினராய் இருந்த காலத்தில் அங்கீகரிக்கப் பெற்ற வதிரி உப தபாற் கந்தோர் இன்னும் திறக்கப் படாமைக்கு அரசாங்கத்தை இச் சபை வன்மையாய்க் கண்டிப்பதுடன், திறவாமைக்குரிய காரணத்தைத் தபால் அமைச்சிடம் வினவுதல் வேண்டும்.

4. அல்வாய் தெற்கில் தொழில் பட்டு வந்த உப தபாற் கந்தோரை வேறிடத்துக்கு மாற்றியமையால் அங்குள்ள மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆகையால் உடனடியாக அவ்விடத்தில் ஓர் உப தபாற் கந்தோர் திறக்கப்பட வேண்டுமென இச் சபை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

இக் கூட்டத்துக்குக் கிளைத் தலைவர் திரு. க. ஜெயக்கொடி அவர்கள் தலைமை வகித்தார்கள்.

### பாரதி மாணவர் மன்றம்

கடந்த சனிக்கிழமை 22-9-62 அன்று மாணவர் மன்றத்தின் புதிய உத்தியோகஸ்தராகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:

மன்றத் தலைவர்: கு. துரைராஜா, உப தலைவர்: என். முருகையா, காரியதரிசி: க. தருமலிங்கம், உப காரியதரிசி: ந. புவனேந்திரன், பொருளாளர்: என். மகேந்திரன், அங்கத்தவர்கள்: கே. சந்திரமோகன், ஆர். ராஜ்மோகன், ஆர். சம்பந்தர், ஆ. புண்ணியமூர்த்தி, எம். கேசவன்.

### அண்ணா பிறந்த தினம்

'அறிஞர்கள், மேதைகள், கவிஞர்கள், விடுதலை வீரர்கள் எந்த நாட்டில் பிறந்தவர்களாயிருந்தாலும், அவர்களுடைய கருத்துக்களை ஏற்று, அவர்கள் காட்டும் பாதையில் முன்னேறினால் பெரும் பலனுண்டு. இந்த அடிப்படையிலேயே அறிஞர் அண்ணாவின் அறிவுரைகளை ஏற்று அதன்படி ஒழுக, வாழ்க்கை முறைகளை அனுசரிக்க வேண்டியது கடமையாயிற்று" இவ்வாறு கொழும்பு குறுவை வீதி ஆர்மோனிய மன்ற மண்டபத்தில் நடைபெற்ற அறிஞர் அண்ணா விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில ஜனாப் டி. எம். பீர் முகம்மது கூறினார்.

இக் கூட்டம் இலங்கை எம். ஜி. ஆர். மன்றத்தின் சார்பில் நடைபெற்றது. மீரா சந்தனின் அண்ணா வாழ்த்துக்களுடன் விழா ஆரம்பமாகியது. ஏ. சிக்கந்தர் வரவேற்புரை கூறினார்.

## சிங்களத்தில் மட்டும் கல்வி போதிக்க தேசிய கல்வித் திட்டக் குழுவின் சிபார்சு

## இதை மூழுக்க மூழுக்க நான் எதிர்க்கிறேன்!

—ஜனுப் எம். ஈ. எச். முகம்மதலி எம். பி.

அட்டாளச் சேனை, அளுத்துகம, கண்டி, காலி ஆகிய இடங்களில் இஸ்லாமியர்களுக்காக இயங்கிவரும் முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளை ஒழித்துவிடவும், சிங்களத்தில் மட்டும் கல்வி போதிககவும் தேசிய கல்வித்திட்டக் குழு, அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்துள்ளது. கல்வித்துறையில் பின் தங்கிய முஸ்லிம்களின் உரிமைகளைப் பறிக்க முயலும் இந்தத் தீர்மானத்தை மூழுக்க மூழுக்க எதிர்க்கிறேன். இவ்வாறு மூதூர் முதலாவது பிரதிநிதி ஜனுப் எம்.ஈ. எச். முகம்மதலி சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுவதாவது:

"இனவடிப்படையில் நிறுவப்பட்டுள்ள முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை அழித்து, சிங்கள பாஷையில் கல்வி போதிக்க வேண்டும். இரண்டாம் மொழியாக தமிழைக் கொள்ளலாம்" எனத் தேசியக் கல்வித் திட்டக் குழு அரசாங்கத்திற்குச் சிபார்சு செய்திருக்கின்றதாம். கண்டி, காலி, அட்டாளைச்சேனை, அலுத்துகம ஆகிய முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளை அழிக்க அரசாங்கத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது.

முஸ்லிம்களின் தனித்துவத்தையும், உரிமையையும் பறிப்பது முதல் நோக்கமாகவும், சிங்களத்தை முஸ்லிம்களிடம் திணிப்பதை இரண்டாம் நோக்கமாகவும் கொண்டுதான் இச் சிபார்சு செய்யப்பட்டிருக்கின்றது. இச் சிபார்சு படு பாதகமானதும், அநீதியானதுமாகும்.

கல்வித்துறையில் பின்தங்கிய முஸ்லிம்களுக்காகவே இக் கலாசாலைகள் நிறுவப்பட்டன. இதனுல் இஸ்லாமிய கலாசாரப் பண்பாட்டுக்கேற்ப கல்வி புகட்டுவது இலகுவாயிற்று. இந்த நிலைமையை மாற்றியமைக்க முயல்வது மூலம் முஸ்லிம்களின் உரிமையில் கைவைக்கும் திட்டத்தை தேசியக் கல்வித் திட்டக் குழுசிபார்சு செய்திருக்கின்ற தென்றால் அதனை முழு மூச்சாக நான் எதிர்ப்பேன்.

முஸ்லிம் தலைவர்களும், பாராளுமன்ற அங்கத்தவரும் அவர்களது மனப்பூர்வமான எதிர்ப்புகளைக் காட்ட வேண்டும்.

இன்று இலங்கையில் நாள் ஒன்றுக்கு 600 பிள்ளைகள் பிறக்கின்றனராம். இவ் வடிப் படையில் வருடத்தில் 7200 ஆசிரியர்களுக்குப் [illegible] பிறக்கின்றன. ஏறத்தாழ வருடம் 1000 ஆசிரியர்களுக்கான முஸ்லிம் குழந்தைகளும் பிறக்கின்றனர். இவ் வெண்ணிக்கையின் இரண்டிலொரு பங்குக்குக் குறைந்த முஸ்லிம் ஆசிரியர்களே வருடந்தோறும் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். இவர்கள், இஸ்லாமிய கலை, கலாச்சாரப் பண்பாட்டு அடிப்படையில் போதனை செய்யப்படாதவிடத்து முஸ்லிம்களின் உரிமை பறிக்கப்படுகின்றது என்பதை யாரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

ஆகவே முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகள் இதற்கு முன்னிருந்த முறையிலேயே இயங்கிவருதல் அவசியமாகிறது. தயவு செய்து இவைகளில் கைவைக்க வேண்டாமென முஸ்லிம் தலைவர்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் அரசாங்கத்தைக் கேட்க வேண்டும்.

முஸ்லிம்களுக்குத் தனிப்பட்ட கலை, கலாச்சாரப் பாரம்பரியம் ஆகியன உண்டு. அந்த அடிப்படையிலேயே முஸ்லிம்களுக்குக் கல்வி போதிக்கப்பட வேண்டும். அதற்கு இவ்வாசிரிய கலாசாலைகளைத் தவிர வேறு வழி முஸ்லிம்களுக்கு இல்லை. இதைத் தேசியக் கல்வித் திட்டக் குழுவினரும் அரசாங்கமும் மனதில் கொண்டு [illegible]யமாற்ற வேண்டுமென்பதே என் தாழ்மையான அபிப்பிராயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரைவில் எதிர்பாருங்கள்!

12-10-62 முதல் வின்ஸர் [யாழ்ப்பாணம்] திரையிலும்
19-10-62 முதல் செல்லமஹால் [கொட்டாஞ்சேனை]
மற்றும் பல திரைகளிலும்

- பி. பானுமதி—ஏ. நாகேஸ்வரராவ்
- சௌகார் ஜானகி—மோகனு
- ஜாவர் சீதாராமன்—பி. ஆர். பந்துலு
- தேவிகா—எம். ஆர். சுவாமிநாதன்

மற்றும் பலர் நடித்த

# கானல் நீர்



---



# ஒக்டோபர் 11-ம் திகதி முதல்

## சென்ட்ரல் (மருதானை)

மற்றும் 6 திரைகளில்



நடிகர் திலகம்
**சிவாஜி கணேசன்**
இலட்சிய நடிகர்
**எஸ். எஸ். ராஜேந்திரன் எம். எல் ஏ.**

பத்மினி, லலிதா, ராகினி, சந்திரபாபு, தங்கவேலு, கே. ஆர். ராமசாமி எம். எல். சி.,
வி. கே. ராமசாமி, பி. ஆர். பந்துலு, ராமராவ், எம். என். கிருஷ்ணன் மற்றும் பலர் நடித்த
"திருடாதே", "சாரதா" போன்ற வெற்றிப் படங்களை அளித்த
ஏ. எல். எஸ். புரடக்ஷன்ஸாரின்

# செந்தாமரை

இசை: விஸ்வநாதன்-ராமமூர்த்தி
டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

---

## 2-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!



கெப்பிட்டல் (கொழும்பு)

விஜயா (மட்டக்களப்பு) — மொடர்ன் (பதுளை)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) — விஜிதா (ஹட்டன்)

கதையிலே புதுமை, கருத்திலே மலர்ச்சி —அனுதைகள் சூழ்ச்சிக்காரர்களிடம் அகப்பட்டார்கள் முடிவில் அவர்களுக்கு கிடைத்தது அவலமா?.........ஆனந்தமா?
.........பாருங்கள்!!

★பி.எஸ். வீரப்பா, சௌகார் ஜானகி,
★டி.எஸ். பாலையா, தாம்பரம் லலிதா
★வனஜா, டி. கே ராமச்சந்திரன்,
★வளையாபதி முத்துகிருஷ்ணன்
★காகா ராதாகிருஷ்ணன்

மற்றும் பலர் நடித்த

அருணு பிலிம்ஸ் **சவுக்கடி சந்திரகாந்தா**

இசை : ஜி. ராமநாதன்
டைரக்ஷன் : எம். ராதா கிருஷ்ணன்

---

கிங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை]

இரண்டு தியேட்டர்களிலும் சேர்ந்து

**100 வது வெற்றி நாள்**

மற்றும் 10 திரைகளில்

எம். ஜி. ராமச்சந்திரன்,
பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா
எஸ். ஏ. அசோகன், கண்ணும்பா,
சாண்டோ சின்னப்பா தேவர்
நடித்த

# தாய் சொல்லைத் தட்டாதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் ஒக்டோபர் மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.